விலை : 20.00 website : www.valampurii.lk Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள்,
ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-6488)

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 கார்த்திகை 12 ஞாயிற்றுக்கிழமை (27.11.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 344

# இன்று மாவீரர் நாள்




## தாயகத்திலும் புலத்திலும் நினைவேந்தல்கள்; மாவீரர் துயிலும் இல்லங்களிலும் அஞ்சலி நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

தமிழின விடுதலைக்காக இலட்சியத்துடன் போராடி வீரச்சாவைத் தழுவிக் கொண்ட போராளிகளை நினைவுகூரும் மாவீரர் நாள் இன்றைய தினம் 27ஆம் திகதி தாயகத்திலும் புலத்திலும் பெரும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படுகிறது. போருக்குப்பின் என்றுமில்லாதவாறு இந்த வருடம் தாயகத்திலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்படவுள்ளமை சிறப்பம்சமாகும். (15-ம் பக்.)



## மாலை 6.05 மணிக்கு சுடரேற்றி அஞ்சலி...



## அரசு மீது மக்கள் அசையா நம்பிக்கை

(கொழும்பு)

குற்றச்சாட்டுக்கள் விமர்சனங்கள் வந்தபோதிலும் நாட்டு மக்கள் என்னை ஜனாதிபதியாக தெரிவு செய்து தற்போதைய அரசுமீது வைத்த நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் அப்படியே இன்னமும் இருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அந்த நம்பிக்கையுடன் நாட்டை முன்னேற்றுவதற்கு அரசுக்கு இரு

15 ஆம் பக்கம் பார்க்க....

## நல்லூர் ஆலய முன்றலில் மாவீரர்களுக்கு அஞ்சலி

### ■ சிவாஜிலிங்கம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய விடுதலை போராட்டத்தில் தம் உயிரை தியாகம் செய்த மாவீரர்களுக்கு இன்றைய தினம் அஞ்சலி செலுத்த அனைவரையும் ஒன்று கூடுமாறு வட மாகாணசபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் அழைப்பு விடுத்துள்ளார்

ஈழவிடுதலை போராட்டத்தில் ஜனநாயக போராட்டம் தோற்கடிக்கப்பட்டு ஆயுதப்போராட்டம் ஆரம்பி

15 ஆம் பக்கம் பார்க்க....

## வேலைநிறுத்த

## மாவீரர் துயிலும் இல்லங்களை விடுவியுங்கள் - விஜயகலா





(கொழும்பு)

வடக்கில் இராணுவத்தினர் கட்டுப்பாட்டிலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களை விடுவிக்குமாறு சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

15 ஆம் பக்கம் பார்க்க....

## அரசியல் கைதிகளுக்கு ஜனாதிபதி





# மாலை 6.05 மணிக்கு சுடரேற்றி அஞ்சலி...



## அரசு மீது மக்கள் அசையா நம்பிக்கை

(கொழும்பு)

குற்றச்சாட்டுக்கள் விமர்சனங்கள் வந்தபோதிலும் நாட்டு மக்கள் என்னை ஜனாதிபதியாக தெரிவு செய்து தற்போதைய அரசுமீது வைத்த நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் அப்படியே இன்னமும் இருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அந்த நம்பிக்கையுடன் நாட்டை முன்னேற்றுவதற்கு அரசுக்கு இரு

15 ஆம் பக்கம் பார்க்க....

## நல்லூர் ஆலய முன்றலில் மாவீரர்களுக்கு அஞ்சலி

### ■ சிவாஜிலிங்கம் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய விடுதலை போராட்டத்தில் தம் உயிரை தியாகம் செய்த மாவீரர்களுக்கு இன்றைய தினம் அஞ்சலி செலுத்த அனைவரையும் ஒன்று கூடுமாறு வட மாகாணசபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் அழைப்பு விடுத்துள்ளார்

ஈழவிடுதலை போராட்டத்தில் ஜனநாயக போராட்டம் தோற்கடிக்கப்பட்டு ஆயுதப்போராட்டம் ஆரம்பி

15 ஆம் பக்கம் பார்க்க....

## மாவீரர் துயிலும் இல்லங்களை விடுவியுங்கள் - விஜயகலா




(கொழும்பு)

வடக்கில் இராணுவத்தினர் கட்டுப்பாட்டிலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களை விடுவிக்குமாறு சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

15 ஆம் பக்கம் பார்க்க....

## சமூக வலைத்தளங்களில் பிரபாகரனை வாழ்த்தி குவிந்த பாராட்டுக்கள்




(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 62 ஆவது பிறந்த தினமான நேற்று, தமிழர் தாயகம் உட்பட புலம்பெயர் தேசமெங்கும் உள்ள தமிழ் மக்கள் சமூக வலைத்தளங்கள் ஊடாக பிரபாகரனுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்திருந்ததுடன் உணர்வுபூர்வமான நிகழ்வுகளிலும் ஈடுபட்டிருந்தனர்.

ஈழத் தமிழினத்திற்கு சர்வதேச முகவரியைத் தேடித்தந்த தலைவனை தமிழ் மக்கள் மிகவும் உரிமையோடு வாழ்த்துவதாக அந்த வாழ்த்துக்கள் மேன்மையுடன் பதிவிடப்பட்டிருந்தன.

15 ஆம் பக்கம் பார்க்க....

## வேலைநிறுத்த போராட்டம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக போதனைசாரா ஊழியர்கள் நாளை திங்கட்கிழமை தொடக்கம் காலவரையறை அற்ற வேலைநிறுத்த போராட்டத்தை (தொழிற்சங்க நடவடிக்கையை) முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து உரிய தரப்பினருக்கு

15 ஆம் பக்கம் பார்க்க....

## அரசியல் கைதிகளுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்க வேண்டும்

### சபையில் ஜே.வி.பி கோரிக்கை

(கொழும்பு)

சிறைகளில் 7 வருடங்களுக்கு அதிகமாக விளக்கமறியல் மற்றும் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை, ஜனாதிபதி பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க நேற்று நாடாளுமன்றத்தில் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

குறித்த கைதிகள் அல்லது சந்தேக நபர்கள் காரணங்கள் எதுவும் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் குற்றமுள்ளவர்களாக அல்லது குற்றமற்றவர்களாக இருக்

04 ஆம் பக்கம் பார்க்க....

## யுத்தத்தில் எவரும் வெற்றி பெறவில்லை அழிவுகள் மட்டுமே வெற்றி பெற்றுள்ளன

### "எழுக தமிழ்" நல்லதை செய்யட்டும் - ஆளுநர் கூரே

(யாழ்ப்பாணம்)

கடந்த 30 வருடகால யுத்தத்தில எவரும் வெற்றி பெறவில்லை என தெரிவித்த வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, போரில வெற்றி பெற்றது துன்பம் மற்றும் அழிவுகளே என குறிப்பிட்டுள்ளார்.

வலிகாமம் கல்வி வலயத்தின் சாதனையாளர் கௌரவிப்பு விழா நேற்று முற்பகல் ஒன்பது மணியளவில் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த முப்பது வருட கால யுத்தத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் வெற்றிபெறவில்லை, அதே போன்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் வெற்றி பெறவில்லை. துன்பம், அழிவுகள் தான் வெற்றிபெற்றுள்ளது.

15 ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அடிதடியில் ஈடுபட்ட மூவர் பொலிஸாரால் கைது

(கரணவாய்) நெல்லியடி நகர்ப்பகுதியில் நேற்று மாலை கொட்டன், பொல்லுகளுடன் வந்து அடிதடியில் ஈடுபட்ட மூவரை தாம் கைது செய்துள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

நெல்லியடி பொலிஸார் சிவில் உடையில் நின்றிருந்த சமயம் கொட்டன்களுடன் வந்து எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக மூவர் அடிதடியில் ஈடுபட்டனர்.

இதனை சிவில் உடையில் நின்று அவதானித்த பொலிஸார் உடனடியாக மூவரையும் கைது செய்யதனர். இதில் ஒருவர் பருத்தித்துறை பொலிஸாரால் பல குற்றச்சாட்டுக்களில் சம்பந்தப்பட்டு தேடப்பட்டுவந்த நபர் என நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர். (செ-60)


## கட்டடம் வாடகைக்கு தேவை

கீழ் தளத்தில் 1000 சதுர அடி அல்லது அதற்கு மேற்பட்ட இட வசதியும் ஒரு மாடி அல்லது அதற்கு மேற்பட்ட தளங்களை யுடைய கட்டடம் வாடகைக்கு தேவை. யாழ் நகரை அண்டிய பகுதிகளில் இருப்பது விரும்பத்தக்கது. (6720)

தொடர்புகளுக்கு : 0766979923

## உடற்பருமன் கொண்டோருக்கும் உடல் எடை குறைவானோருக்கும் ஓர் அற்புதமான செய்தி

ஆண், பெண் இருபாலாருக்கும் உகந்தது. 2 வாரங்களில் நல்ல அழகான மேனி யுடன் திகழ ஆயுள்வேத கேர்பல் ஔடதம், பால்மா, குளிசை,

**உடல் பருமன் கொண்டோருக்கு**

**விலை 3500/=, 5500/=, 9000/=**

உடல் எடை குறைத்தல், ஊளைச்சதை, மார்பு, கை, கால், வயிறு குறைத்தல் வயிற்றுக்கோளாறு, நாட்பட்ட அஜீரணம், மலச்சிக்கல் அனைத்துக்குமான ஆயுள்வேத மருந்து விற்பனைக்கு உண்டு.

**ஆச்சரியம் வயிறு. மார்பு 10 நாள்களில் குறைக்கும் கிறீம் எங்களிடம் உண்டு.**

**உடல் எடை குறைவானோருக்கு**

**விலை 3500/=, 5500/=, (24000/=, 3 மாதத்திற்குரியது.)**

உடல் எடை கூட்டுதல், ஒட்டிய கன்னங்கள் குண்டுக் கன்னங்களாக மாற்ற பல கீனம், கணச்சூடு, எதைச்சாப்பிட்டாலும் உடம்பு தேறுகிறதேயில்லை என்கிறவர்கள், மார்பு கூட்டுதல் அனைத்துக்குமான ஆயுள்வேத மருந்து விற்பனைக்கு உண்டு. மேலும் கறுப்பு, கண்கருவளையம், உதட்டு கறுப்பு, பருக்கள், வடுக்கள், காயங்கள், கருந்திட்டுக்கள், கரும்புள்ளிகள் நீக்கும் கிறீம் விற்பனைக்கு உண்டு. தேவையற்ற ரோமம், முகம், உடம்பு பகுதியில் உள்ள காய்கள் அகற்றும் கிறீம் விற்பனைக்கு உண்டு. (விலை 3500/=, 5500/=) (6718)

தொடர்புகளுக்கு : 077 210 6155 221, நாவலர் றோட் (பிறவுண்றோட் சந்தி அருள் கொமினிகேஷன் அருகில்) யாழ்.

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532

## A/L கணக்கீடு - யாழ்

2017, 2018 வகுப்புகளுக்கான பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள் யாழ்.நகரை அண்மித்த இடங்களில் வந்து கற்பிக்கப்படும்.

அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் "A" தரம் பெறும் வகையில் இலகுவான நுட்பங்களைப் பயன்படுத்தி தமிழ், ஆங்கில மொழிகளில் கற்பிக்கப்படும். (C-6495)

நிர்வாகிகளும் தொடர்பு கொள்ளலாம்

T.P :- 0778767934

## கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி

ஜேர்மன்,சுவிஸ்,ஒஸ்ரியா ஆகிய நாடுகளுக்கான டொச் வகுப்புக்கள், அதாவது வெளிநாடு செல்பவர்களுக்கான A1 சான்றிதழுக்கு ஏற்ற வகையில் திரு.S. கோணேஸ்வரன் அவர்களால் கற்பிக்கப்படுகின்றது.

புதிய பிரிவுகள் வெகு விரைவில் ஆரம்பமாகவுள்ளது. உங்கள் பதிவுகளை முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.

தொடர்பு கொண்ட பின்பு நேரில் வரவும்.

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (புத்தர் விகாரைக்கு எதிரே 2ஆம் மாடி) 077 970 7322 (6659)

## திருகோணமலையில் காணி விற்பனைக்கு

நகரப்பகுதியில் 30Perches காணி விற்பனைக்கு உள்ளது. இக் காணிக்கு அண்மையில் Beach, Natural Harbour , Fort, கோணேஸ்வர ஆலயம், காளிக்கோயில் OlD National School அண்மையில் உள்ளது. பல்வேறு தேவைகளுக்கு (Super market, Hotel, Wedding Hall, Flat House-exter) பாவிக்கலாம். (6683)

தொடர்புகளுக்கு:-0774746571


## ஆற்றுவா ராற்றல் பசியாற்றல் அப்பசியை மாற்றுவா ராற்றலின் பின்

## விற்பனைக்கு

யாழ்.நல்லூர் முருகன் கோவிலுக்கு அண்மையில் கோவில் வீதி முகப்புடன் 10 பரப்பு காணியுடன் கூடிய வீடும் மற்றும் பிறவுண் வீதியில் 2 வீடும் யாழ்.நகரின் வர்த்தக மையப்பகுதியில் பஸ் தரிப்பிடத்திற்கு முன்பாக ஆஸ்பத்திரி வீதியில் 50 அடி அகலமும் 300 அடி நீளமும் கொண்ட காணித்துண்டும் மற்றும் 3 மாடி கடைக்கட்டடமும் யாழ்ப்பாணம் திருநெல்வேலி பலாலி வீதியில் 6 பரப்புடன் கூடிய வீடும் பலாலி வீதி முகப்புடன் செல லங்கா முன்பாக 10 பரப்பு காணித்துண்டும் K.K.S வீதியில் தட்டாதெரு சந்திக்கு அண்மையில் பழைய வீட்டுடன் 10 பரப்பு காணியும் சுண்டுக்குளியில் A9 வீதியில் பஸ்ரியான் ஹோட்டல் முன்பாக 6 பரப்பு வெற்றுக்காணியும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு முன்பாக காந்தி வீதியில் 10 பரப்பு காணியும் யாழ்ப்பாணம் விக்ரோறியா வீதியில் 12 பரப்பு வெற்றுக்காணியும் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் வின்சன் தியேட்டருக்கு அண்மையில் 10 பரப்பு காணியும்,

பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் 6 பரப்பு காணியும் கொழும்பு செட்டித் தெருவில் 4 பேர்ச் இல் அமைந்த கடையும் 6 பேர்ச் இல் அமைந்த கடையும், யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில் 5 பரப்பு காணித்துண்டும். பண்ணையில் கொழும்பு பஸ் தரிப்பிடத்துக்கு முன்பாக 10 பரப்பு காணித்துண்டும். சுண்டுக்குளி A9 வீதியில் வஸ்தியாம் ஹோட்டலுக்கு அருகில் 3 பரப்புடன் கூடிய வீடும் விற்பனைக்கு உண்டு. (C-6469)

தொடர்பு:-கனகசபை தர்மகுலசிங்கம், இல.189, மின்சார நிலைய வீதி,யாழ்ப்பாணம். 077 723 2535

# மரண அறிவித்தல்

## கிட்டிணன் பொன்னையா

கூவில் புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிட்டிணன் பொன்னையா அவர்கள் 26.11.2016 நேற்று சனிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற கிட்டிணன் செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும் லட்சுமியின் பாசமிகு கணவரும், செல்வகிருஷ்ணன், செல்வானந்தன், அமரர் செல்வமணி, தேவகி, செல்வரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாந்தலக்சுமி, சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், அமரர் சிவபாக்கியம், சிவப்பிரகாசம், அமரர் லக்சுமி, கோபாலன் (பிரான்ஸ்) அமரர் சந்திரசேகரம், அமரர் விஜயரட்ணம், அமரர் நற்குணம், சற்குணம், மதிவதனி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சரஸ்வதி, சிவகுரு, சிவலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், ரஜனிகாந் (ஆசிரியர்), கௌதமி, கபிலன், கஸ்தூரி, கௌசிகா, செந்தாளன், கௌசிகன், ராகுலன் (லண்டன்), லக்சனா, அஜந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும், பிரணித்தின் பாசமிகு பூட்டனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 27.11.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக மந்திகை கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளிற்கு :-
கபிலன் 0770858322
ரஜனிகாந்த் 0776155422
பிறேம்நாத் 0773104419

இங்ஙனம் :-
குடும்பத்தினர் (C-6494)

# புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்த நாளை முன்னிட்டு யாழ். பல்கலையில் மாணவர்கள் நேற்றுக் கொண்டாட்டம்





தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த நாள் நேற்று யாழ். பலகலைக்கழகத்தில் மாணவர்களால் கொண்டாடப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கு முன்பாக ஒன்றுகூடிய மாணவர்கள் கேக் வைத்து அகவை அறுபத்து இரண்டை குறிக்கும் மெழுகுவர்த்தி கொளுத்தி விமர்சையாகக் கொண்டாடினர். இதனால் புலனாய்வாளர்கள் பல்கலைச் சூழலுக்கு வெளியே நின்று உள்ளே நடைபெற்றவற்றை அவதானித்து கொண்டிருந்தனர். (இ-4-9)

# மாவீரர் தினம் அனுஷ்டிப்பதில் தவறில்லை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளும் இலங்கைப் பிரஜைகளே. அவர்கள் உயிர்நீத்த தினத்தை மாவீரர் தினமாக அனுஷ்டிப்பதில் எந்தத் தவறும் இல்லை என மேல் மாகாண சபை உறுப்பினரும் ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதி பொதுச செயலாளருமான சண். குகவரதன் தெரிவித்துள்ளார்.

"இலங்கையின் இராணுவத்தினர் உட்பட முப்படையினரும் பொலிஸாரும் யுத்ததல் ஈடுபட்டனர். இதன்போது போராளிகளும் கொல்லப்பட்டனர். அதேபோன்று பொது மக்களும் கொல்லப்பட்டனர். சொத்துக்களும் அழிந்தன. இது மறுக்கப்படமுடியாத உணமையாகும்.

போராளிகளும் தமிழ் மக்களும் இலங்கைப் பிரஜைகளே. அவர்களும் இலங்கை பெற்றோர்களின் பிள்ளைகள். அத்தோடு அவர்கள் ஓர் இலக்கை முன்வைத்து போராடியவர்கள். அப்படியெனில் ஏன் இத் தினத்தை அனுஷ்டிப்பதற்கு தடைவிதிக்கப்படுகிறது. இவ்வாறு தடை விதிப்பது மறைமுகமாக அனுஷ்டிப்பதற்கு ஊக்கமளிப்பதாக அமைவதோடு தமிழ், சிங்கள மக்களிடையே தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் அரசின் முயற்சிகளையும் பாதிக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# முழுமையான கோப் அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பு

இலங்கை மத்திய வங்கி திறைசேரி முறி விவகாரம் தொடர்பான கோப் குழுவின் முழுமையான அறிக்கை நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

13 பாகங்களைக் கொணட கோப் அறிக்கை சகல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் கரு ஜயசூரிய பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

இதில் திறைசேரி முறி விவகாரம் தொடர்பாக முன்னாள் மத்திய வங்கி ஆளுநர்கள்,தற்போதைய ஆளுநர்கள், மத்திய வங்கி அதிகாரிகள், கணக்காய்வாளர் நாயகம் அடங்கலான பலரது சாட்சியங்கள் மற்றும் திறைசேரி முறி கொடுக்கல்-வாங்கல் தொடர்பான ஆவணங்கள், எழுத்து மூலமான ஆவணங்கள்,பிரதமர் நியமித்த காமினி பிடிபன குழுவின் அறிக்கை உட்பட 2 ஆயிரத்திற்கும் அதிகமான பக்கங்களை கொண்டதாக இந்த அறிக்கை அமைந்துள்ளது.

கோப் அறிக்கை கடந்த ஒக்டோபர் 28 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இது தொடர்பான விசாரணை கடந்த வருடம் மே 26 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இந்த 13 பாகங்களிலும் கணக்காய்வாளரின் அறிக்கை மத்திய வங்கி திறைசேரி முறி தொடர்பான முழுமையான அறிக்கை இது வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாதது குறித்து ஐ.ம.சு.மு பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்த அறிக்கையில் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் குற்றவாளியாக குறிப்பிடப்பட்டிருந்தார்.இது தொடர்பான ஆவணங்கள் பிரதமரினால் சட்டமா அதிபருக்கு கையளிக்கப்பட்டுள்ளதோடு சபாநாயகருடன் தொடர்பு கொண்டு சட்டமா அதிபர் தேவையான நடவடிக்கை எடுத்து வருவதாக பிரதமர் சபையில் அறிவித்திருந்தார். (இ-7-10)

## நல்லிணக்கத்திற்கான பயணம் மலர்ப்பாதையல்ல

# கிணற்றுத் தவளைகள் போன்று இனியும் நாம் வாழக்கூடாது

## அமைச்சர் மங்கள அறிவுறுத்து

(கொழும்பு)

கடந்த காலங்களைப் போன்று இலங்கையர்கள் தொடர்ந்தும்கிணற்றுத்தவளை போன்று வாழக் கூடாது என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவனத்தில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வில் உரையாற்றிய போது இதனைத் தெரிவித்தார்.

எதிர்காலம் பற்றி சிந்திக்க வேண்டிய காலம் மலர்ந்துள்ளது எனவும் யுத்தம் காரணமாக ஏற்பட்டிருந்த நெருக்கடியான நிலைமைகள் நீங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

பழைய விடயங்களில் தொடர்ந்தும் தங்கித் தேங்கியிருப்பது பொருத்தமாகாது எனவும் அதற்காக பழையனவற்றில் பாடம் கற்றுக்கொள்வதனை நிராகரிக்க வேண்டியதில்லை எனவும் குறிப்பிட்டுள்ள அவர் கடந்த காலங்களில் ஏற்பட்ட காயங்களை ஆற்றுவதற்கு ஒருவருக்கு ஒருவர் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

நல்லிணக்கத்திற்கான பயணம் மலர்ப்பாதையாக அமையாது எனவும் பல்வேறு சவால்கள் ஏற்படக் கூடுமெனவும் தெரிவித்துள்ள அவர் நாட்டின் குறைபாடுகளை பற்றி குற்றம் சுமத்துவதில் அதிக நேரத்தை செலவிடுவதாகவும் அவற்றை எவ்வாறு திருத்திக் கொள்வது என்பது குறித்து கவனம் செலுத்தப்படுவதில்லை என வும் குற்றம் சுமத்தியுள்ளார். (இ-7-10)

# நிதிமோசடி விசாரணைப் பிரிவை கலைத்துவிடுமாறு கோரிக்கை

(கொழும்பு)

நிதிமோசடி தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்கும் பொலிஸ் பிரிவை கலைத்துவிடுமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நிதி மோசடி தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்கும் பொலிஸ் பிரிவானது அரச துறையினர் மீது சுமையை மட்டுமே அதிகரிப்பதாகவும் தினேஷ் குணவர்த்தன சுட்டிக்காட்டினார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் 2017ஆம் ஆண்டிற்கான வரவு- செலவுத் திட்டத்தின் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சிற்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.

விவாதம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தினிடையே பிரதமரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன இந்தக் கோரிக்கையை முன்வைத்தார். (இ-7-10)

## வழக்கின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள

# நீண்டகால கைதிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க விசேட குழு

## அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு



கைது செய்யப்பட்டு நீண்டகாலமாக வழக்குத் தாக்கல் செய்யப்படாமல் சிறை வைக்கப்பட்டுள்ள கைதிகள் தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விசேட குழுவொன்றை அமைத்துள்ளதாக சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல இந்த தகவலை நேற்று நாடாளுமன்றத்தில் வெளியிட்டார். நல்லாட்சி அரசாங்கத்தின் 2017ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தின் சிறைச்சாலை கள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சிற்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதம் நேற்று நாடாளுமன்ற த்தில் நடைபெற்றது.

விவாதம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது எதிர்க்கட்சிப் பிரதம கொறடாவான ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, நீண்ட காலமாக வழக்கு தாக்கல் செய்யப்படாமல் சிறை வைக்கப்பட்டுள்ள கைதிகள் தொடர்பாக கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த சபை முதல்வரும், அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல, எவ்வித வழக்குத் தாக்கலும் செய்யப்படாத நிலையில் நீண்டகாலமாக சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் குறித்து [illegible] நடவடிக்கை எடுப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைப் படி விசேட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதாக பதி[illegible] (இ-7-10)

# புன்னைக்குடா கடலில் மூழ்கிய மாணவர்கள் இருவர் உயிரிழப்பு


சிவதர்ஷன்


பர்ஹான்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு, ஏறாவூர் புன்னைக் குடா கடற்கரையில் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை வேளையில் பொழுதுபோக்குக்காகச் சென்று நீராடிக் கொண்டிருந்த வேளையில் கடல் அலையில் சிக்கிய மாணவர்கள் மூவரில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

அவர்களில் ஒருவரின் சடலம் பிற்பகல் மீனவர்களின் வலையில் சிக்கியபோது மீட்கப்பட்டது.

ஏறாவூர் அலிகார் தேசிய கல்லூரியில் உயர்தர - முதலாம் ஆண்டு கலைப் பிரிவில் கற்கும் ஏறாவூரைச் சேர்ந்த மற்றும் அல்ம ஹர்தீன் பர்ஹான் (வயது 17) எனும் மாணவனின் சடலமே மீட்கப்பட்டுள்ளது. பங்குடாவெளியைச் சேர்ந்த சிவகுமார் சிவதர்ஷன் (வயது 17) என்பவரின் சடலத்தை தொடர்ந்தும் தேடி வருகின்றனர்.

இதேவேளை பேரலைகளால் இழுத்துச் செல்லப்பட்ட சேகுதாவூத் அக்ரம் (வயது 17) என்ற மற்றைய மாணவன் கடலில் மீனவர்களால் உயிருடன் காப்பாற்றப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

கடல் அலையில் அள்ளுண்டு காணாமற்போன மாணவனைத் தேடும் முயற்சியில் பொலிஸார், கடற்படையினர், மீனவர்கள் ஆகியோர் இரவு பகலாக ஈடுபட்டிருந்தமையைக் காணக்கூடியதாக இருந்தது.

மேற்படி மாணவர் உயிரிழப்பால் ஏறாவூர் மற்றும் பங்குடா வெளிப் பகுதிகளில் சோகமயமான சூழல் நிலவி வருகின்றது. (செ)

## அரசியல் கைதிகளுக்கு...

கலாம். எனினும் அவர்களுக்கு வழங்கப்படக்கூடிய தண்டனை 7 வருடங்கள் அல்லது அதற்கு குறைவானதாகும் என்று அனுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையில் அநுரகுமாரவின் யோசனையை தாம் பரிசீலிப்பதாக அமைச்சர் டி.எம் சுவாமிநாதன் உறுதியளித்தார். இதற்காக குழு ஒன்றும் அமைக்கப்படும் என்று சபை தலைவர் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல குறிப்பிட்டார்.

இதேவேளை விளக்கமறியல் சிறைகளில் உள்ள விடுதலைப் புலிகளின் சந்தேகநபர்களமாத்திரமன்றி ஏனையோருக்கும் ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என்று அனுர குமார திஸாநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார். (செ-11)


சிற்றி மெடிக்கல்ஸ் CITY MEDICALS

மருந்தாளர் தேவை (PHARMACIST)

மேற்படி மருந்தகத்துக்கு தகுதியான அனுபவம் வாய்ந்த மருந்தாளர் தேவைப்படுகின்றார்.

தொடர்புகளுக்கு

சிற்றி மெடிக்கல்ஸ் (CITY MEDICALS)

இல. 437, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே 021 222 3880

(6719)




245ம் நாள் நினைவுகளுடன்


பிறந்தநாள் நினைவுகள்

சூராவத்தை சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

### அம்பலவாணர் சிவலோகநாதன்

பிறப்பு - 27.11.1948 இறப்பு - 27.03.2016



எங்கள் உயிர் அப்பாவுக்கு...
எங்களை அடையாளம் காட்டிவிட்டு - எங்கே
போனீர்கள் அப்பா
எங்கள் முகம் பார்க்காமல் - போய்விட்டீர்களே
எங்கள் பாவத்தையோ வேதனையோ -
சொல்ல முடியவில்லை
எங்களை பார்க்கவோ நினைக்கவோ இல்லையோ அப்பா
நாங்கள் என்ன பாவம் செய்தோம்!
நீங்கள் தானப்பா எங்களை தூர இடம்விட்டு
சென்றுள்ளீர்கள்
இன்று உங்களை பார்க்கமுடியாத -
பாவியாகிவிட்டோம்
இன்று எங்களால் உங்கள் இழப்பை
தாங்கவே முடியவில்லை அப்பா
எங்களை பார்க்காமலே
போய்விட்டீர்களே அப்பா
அப்பா அப்பா என்று அழுது அழுது
எங்கள் வாழ்நாள் போகுதப்பா கண்ணீரோடு
மறு ஜென்மம் ஒன்று எங்களுக்கு
இருந்தால் எங்கள் அப்பாவுக்கு
பிள்ளைகளாக பிறக்கும் வரம் வேண்டும்

(C-6127)

சூராவத்தை.
சுன்னாகம்.

குடும்பத்தினர்


விற்பனைக்கு

கொங்கிறீற் கலவை இயந்திரம் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு

077 436 6704

(C-6492)

வீடு வாடகைக்கு உண்டு

47, மாட்டின் லேன், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் சகல வசதிகளுடன் அமைந்துள்ள வீடு வாடகைக்கு உண்டு

தொடர்புகளுக்கு

077 617 6716, 077 228 8987

(6724)

இன்று... 27.11.2016

NEW MATHS COLLEGE

இனால் நடத்தப்படும்

O/L மாணவர்களுக்கான

கணித பாட கருத்தரங்கு

ஆசிரியர் - k. உமாகரன்
நேரம் - பி.ப 2.00 - 6.00 (27.11.2016)
இடம் - NEW SCIENCE WORLD
Navalar Road - Brown Road Junction, Jaffna.

கட்டணம் - 200/=

(வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்)

தொடர்புகளுக்கு: 077 707 1961

(6725)

A/L 2017 Day Batch

PHYSICS R. குகன்

Mechanics

திங்கள் - வெள்ளி Batch I :-09.30 - 11.30
Batch II:-11.45 - 1.45

CHEMISTRY

DIAS B.Sc(Hons.)Spl.in Chem

Energetic சனி/ஞாயிறு 08.00 - 9.30

Chemical Calculation திங்கள் - வெள்ளி 09.30 - 11.30

NEW SCIENCE WORLD VICTORY MUST

NEW SCIENCE WORLD
NAVALAR ROAD-BROWN ROAD JUNCTION, JAFFNA
TP - 077 336 4055

DIPLOMA IN NURSING

Approved by the Private Health Services Regulatory Council, Ministry of Health, Sri Lanka

புதிய சுகாதார கற்கை நெறிகள் ஆரம்பம் 2017/2019

IMS

- தகைமை : க.பொ.த (உயர்தரம்) – எந்த துறையாயினும் 3 பாடங்களிலும் சித்தி.

அல்லது

க.பொ.த (சாதாரண தரம்) - 6 அடிப்படை பாடசித்தியுடன் குறைந்தது ஒருவருட அடிப்படை (Certificate level) சுகாதார கற்கை

அத்துடன்

எம்மால் ஒதுக்கப்படும் சிகிச்சை நிலையங்களில் பணிபுரியும் ஆர்வம்.

- பயிற்சிக்காலம் : மூன்று வருடம்.
- பயிற்சிக்கட்டணம்: வருடத்திற்கு 50,000/=

விண்ணப்ப படிவங்களை கீழ்வரும் முகவரி மற்றும் எமது இணைய தளத்திலும் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 10/12/2016 ற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டும்.

INSTITUTE OF MEDICAL SCIENCES

Green Memorial Hospital, Manipay
Email: theimsjaffna@gmail.com

Web site: www.theims.net

Tel: 0213203970/0212256335

Office time – 8.00am to 4.00pm

## திவிநெகும திணைக்களத்தைச் சேர்ந்த
# 8,100 ஊழியர்களுக்கும் ஊழியர் சேமலாப நிதி



## அரசாங்கம் இணக்கம்

திவிநெகும திணைக்களத்தைச் சேர்ந்த சுமார் 8100 ஊழியர்களுக்கும் 12 சதவீத ஊழியர் சேமலாப நிதியை வழங்குவதற்கு அரசாங்கம் இணங்கியுள்ளது.

ஜனாதிபதியின் பணிப்புரையின்பேரில் நியமிக்கப்பட்ட அமைச்சர்களைக் கொண்ட இவ்விசேட குழு நேற்று முன்தினம் பாராளு மன்றக் கட்டடத் தொகுதியில் கலந்துரையாடி இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வினைப் பெற்று தந்திருப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

இதன்படி 1995 ஆம் ஆண்டு சமுர்த்தி அதிகாரிகளாக உள்வாங்கப்பட்டு பின்னர் திவி நெகும திணைக்களத்துக்கு மாற்றம் செய்யப் பட்ட சுமார் 8100 ஊழியர்களுக்கும் அவர்கள் சேவையில் இணைந்து கொண்ட காலம் முத லான ஊழியர் சேமலாப நிதியம் அரசாங் கத்தால் வழங்கப்படுமென்றும் தெரிவித்தார்.

நிதி அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவிததபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்வேலைத் திட்டத்தை குழப்புவதற்கு பல தொழிற் சங்கவாதிகள் முயற்சித்த போதும் அவை வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டுள் ளன. இதற்கமைய ஊழியர்களின் சம்பளத் தில் இருந்து 8 சதவீதமும் எஞ்சிய 12 சதவீதம் அரசாங்கத்தினாலும் வழங்கப்படவுள்ளது.

அமைச்சர்களான லக்ஷ்மன் யாப்பா அபேவர்ததன, துமிந்த திசாநாயக்க, மகிந்த அமரவீர, எஸ்.பி திசாநாயக்க, டிலான் பெரேரா ஆகியோர் இக்குழுவில் அங்கம் வகித்தமை குறிப்பிடத்தக்கது. சமுர்த்தி அதிகாரிகளாக உள்வாங்கப்பட்ட இவ்வதிகாரி கள் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவி னால் திவிநெகும திணைக்களத்துக்கான அதி காரிகளாக பின்னர் மாற்றம் செய்யப்பட்டனர்.

எனினும் இவர்களுக்கு அரசாங்க உத்தி யோகத்தர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கப்படாமையினால் அவரகள் ஊழியர் சேமலாப நிதியம், ஓய்வூதியம் உள்ளி ட்ட நன்மைகளைப்பெற முடியாமல் இருந்தனர். கடந்த அரசாங்கமும் இதற்கான ஒத்து ழைப்பினை பெற்றுத் தரவில்லை. இந் நிலையில் இவ்வதிகாரிகளால் உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு முடிவுக்கமைய இந்த அரசாங்கம் அதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளமை குறிப் பிடத்தக்கது. (இ-7-10)


## பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கம் (வ-து)
## பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோரல்

01. பதவி, குறியீட்டு இல: களஞ்சிய முகாமையாளர் 208/15

சம்பள அளவுத்திட்டம்: 13515-110X10-120X10-15815.00 (13/2015இன் படி)

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:

அ. கூட்டுறவு ஊழியர் 16 ஆவது சம்பளத்திட்ட தொடர்பு பட்ட துறை பதவியொன்றில் 02 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப் பதவி ஒன்றில் 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவு பணியாளர் சாதாரண தரப் பத்திரம் அல்லது க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது எண் கணிதம் அல்லது வர்த்தக எண் கணிதம் அல்லது தூய கணிதம், கணிதமுடன் சிங்களம் அல்லது தமிழ் மொழி என்பவற்றை உள்ளடக்கிய 06 பாடங்களுடனான சித்தி அத்துடன் சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

02. பதவி:- கணனிப் பக்க உருவாக்குநர் 322/15

சம்பள அளவுத்திட்டம்:- 13515-110X10-120X10-15815.00 (13/2015 இன் படி)

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:-

க.பொ.த.சா/தர பரீட்சையில் சிங்களம் / தமிழ்மொழி மற்றும் கணிதம் / எண்கணிதம் உள்ளடங்கிய 06 பாடங்களில் சித்தியுடன் அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட கற்கை நிறுவனத்தில் 03 மாதங்களுக்கு குறையாத முழு நேர MS OFFICE அல்லது அதை ஒத்த கணனி பாடநெறி ஒன்றை பூர்த்தி செய்தமைக் கான தகைமை சான்றிதழ் அத்துடன் ஏதாவது ஒரு அங்கீகரிக்கப்பட்ட நிறுவ னம் ஒன்றில் ஓராண்டுக்கு குறையாத செயல் அனுபவம்.

பொதுவான நிபந்தனைகள்:

அ. வயதெல்லை:- 18-45 வரை (கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது)

ஆ. அடிப்படை சம்பளத்திற்கு மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட 15 % விசேட படியும் வாழ்க்கைச் செலவுப் படியும் வழங்கப்படும்.

இ. கூட்டுறவு சங்கங்களில் தற்பொழுது கடமையாற்றுபவர்கள் சங்கத்தின் ஊடாக சிபார்சு செய்து விண்ணப்பித்தல் வேண்டும்.

ஈ.சங்க எல்லை பரப்பினுள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

உ.விண்ணப்பங்கள் முழுப்பெயர், முகவரி, தே.அ.அ.இல., பிறந்த திகதி, தகைமைகள் , அனுபவம் என்பன உள்ளடங்கலாக சுயமாக தயாரிக்கப்பட்டு அல்லது சங்கத்தில் மாதிரி விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று பூர்த்தி செய்து கல்விச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ் , அனுபவ சான்றிதழ், மேலதிக தகைமை களுக்கான சான்றிதழ்களின் பிரதிகளை அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஊ.விண்ணப்பங்களை ஏற்கவோ நிராகரிக்கவோ நெறியாளர் குழுவிற்கு உரிமை உண்டு.

எ.விண்ணப்பங்கள் “தலைவர், பளை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் - கண்டி வீதி, பளை” எனும் முகவரிக்கு எதிர்வரும் 10.12.2016 ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஏ.தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், குறியீட்டு இலக்கம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும்.

தலைவர்,
பளை ப.தெ.வ.அ.கூட்டுறவு சங்கம்
26.12.2016

(6716)


# பயணித்துக்கொண்டிருந்த ஆட்டோவில் திடீரென தீ!



பயணித்துக் கொண்டிருந்த ஆட்டோவில் திடீரென தீப்பிடித்துக் கொண்ட சம்பவமொன்று பம்பலப்பிட்டிய பிரதேசத்தில் நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது.

தீப்பிடித்துக் கொள்ளும் போது அவ்வாகனத்தில் சிறிய பிள்ளையொன்றும் பெண் ஒருவரும் இருந்துள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. இவர்கள் இருவரும் ஆபத்துக்கள் இன்றி காப் பாற்றப்பட்டுள்ளனர்.

இருப்பினும் ஆட்டோ முழுமை யாக தீயில் எரிந்துள்ளதாகவும் தீயை அணைப்பதற்கு சுற்றியிருந்தவர்கள் எடுத்த முயற்சி பயனளிக்கவில்லை யெனவும் கூறப்படு கின்றது. (இ-7-10)


## தொழில்நுட்பவியலாளர்கள்/ விற்பனையாளர்கள்/ உதவியாளர்கள் தேவை

கொழும்பில் இயங்கி வரும் எமது டிஷ் ஆண்டெனா மற்றும் கேபிள் டிவி உபகரணங்கள் விற்பனை நிலையத் திற்கு கொழும்பில் தங்கி இருந்து வேலை செய்ய கூடிய டெச்னிசிங் மற்றும் டிஷ் ஆண்டெனா மற்றும் இலத்திர னியல் பொருட்கள் விற்பனையாளர்கள் மற்றும் ரிப்பேர்/ டிஷ் ஆண்டடெனா பொருத்துநர்கள் மற்றும் உதவியா ளர்கள் உடன் தேவை. தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ப சம்ப ளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் கிடைக்கும் உடன் தொடர்பு கொள்ளவும்.

(த-6467)

Contact:-0777710785

**SATS-TECH ENGINEERS (PVT) LTD**

No.51/ 102, Wolfendhal street, Colombo 13


# இராசி பலன்

27.11.2016

(கார்த்திகை 12, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு

திரயோதசி பிற்பகல் 1.50 மணிவரை

சுவாதி முன்னிரவு 7.29 மணிவரை

சுபநேரம் 9.12-10.42 மணிவ்வரை

இராகுகாலம் 4.42-6.12 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>ரேவதி, அச்சுவினி | | |
| செவ் | | | ராகு |
| புத சுக் | சூரி சனி | சந் | குரு |

**மீனம்:** உறவினர்கள் வழியில் சுப செலவுகள் ஏற்படலாம், உணர்ச்சிவசப்படுவதைத் தவிர்ப்பது நல்லது, மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும்.

**மேடம்:** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், ஒரு கடனை அடைக்க மற்றொரு கடனை வாங்கும் நிலை ஏற்ப டலாம், வழிபாட்டால் மகத்து வம் காண வேண்டிய நாள்.

**இடபம்:** பிரபலமானவர்களின் சந்திப் பால் பெருமையடைவீர்கள், உடல் நலன் சீராகும், கடன் சுமை குறையும், பூர்வீக சொத்துக்களால் ஆதாயமுண்டு, கெளரவமான நாள்.

**மிதுனம்:** சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும், பூர்வ புண் ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவம் உண்டு.

**கும்பம்:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறும் வாய்ப்புண்டு, புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**கடகம்:** வருமானத்தை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், வாகன சுகமுண்டு, தொலை தூரத்திலி ருந்து சுப தகவல்கள் வந்து சேர லாம், பெற்றோர் மீது பிரியம் கூடும், நண்பர்கள் சந்திப்பு உண்டு.

**மகரம்:** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், போசன சுக முண்டு, காரிய அனுகூலம் உண்டு, மகிழ்ச்சி தரும் தகவல் கள் வந்து சேரலாம், நண்பர் கள் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**சிம்மம்:** பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள்,அரசியல் ஈடுபாடு அதி கரிக்கும் நாள், நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், எடுத்த காரியங்கள் கைகூடும் வாய்ப் புண்டு.

**தனுசு:** பொது வாழ்வில் புகழ் கூடும், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலை மோதும் நாள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடை ப்பதற்கான வாய்ப்புண்டு. போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** எடுத்த காரியங்களை முடிக்க ஒருமுறைக்கு இருமுறை அலைய நேரிடலாம், ரோக பயமுண்டு, தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும்.

**துலாம்:** கொடுக்கல் வாங்கல்கள் ஒழு ங்காகும், சான்றோர்களின் சந் திப்பு இடம்பெறலாம், தொழில் ரீதியான பயணங் கள் இடம்பெறலாம், ஆழ்ந்த சிந்தனையுண்டு.

**கன்னி:** எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடித்து வெற்றி காண் பீர்கள், பணத் தேவைகள் பூர் த்தியாகும், தேகநலனில் முன் னேற்றமுண்டு, வார்த்தைகளில் நிதானம் தேவை.

## வடமராட்சி மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ். மாவட்ட மாணவர்கள் க.பொ.த. உயர்தரப் பிரிவில் விஞ்ஞானத்துறையைத் தெரிவு செய்வதனை ஊக்குவிக்கும் வகையில் முதல் கட்டமாக யாழ். மாவட்டத்தில் வடமராட்சி வலயத்திற்குட்பட்ட மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கு ஒன்றினை யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்களின் கருத்தாலோசனைகளுடன் நடத்துவதற்கு சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம்306 B1 தீர்மானித்துள்ளது.

அந்தவகையில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 24 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் வடமராட்சி வலயத்திற்குட்பட்ட மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கு இடம்பெறும் என மாவட்ட இணைப்பாளர் (தொழில் வழிகாட்டலும் தொழில்வங்கியும்) க.கமலேஸ்வரன் அறிவித்துள்ளார். (இ-7)

## யாழ். பல்கலை.மாணவர்களுக்கு அச்சுறுத்தல் கடற்றொழிலாளர் சம்மேளனம் கடும் கண்டனம்

யாழ்.பல்கலைக்கழக மாணவர் மீது விடுக்கப்பட்ட அச்சுறுத்தலை வன்மையாக கண்டிப்பதாக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்கள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு யாழ்மாவட்டகடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தலைவர் கருத்து தெரிவிக்கையில்,

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களை சுடுவோம் என பொலிஸார் அண்மையில் அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக அறிகிறோம். நல்லாட்சி அரசு உருவாகும் போது மக்களுக்குரிய பாதுகாப்பு இருக்கும் என்ற எதிர்பார்ப்பு அனைவருக்கும் இருந்தது. ஆனால் அது கேள்விக்குறியாகியுள்ளது. இந்த அரசு தமிழ் மக்களின் சுதந்திரமான வாழ்க்கையை உறுதி செய்ய வேண்டும்.

மாணவர்கள் மீது விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் ஒட்டு மொத்த தமிழ் சமூகத்துக்கும் விடுத்த அச்சுறுத்தல் என்றே கருதுகிறோம். எமது மாணவர்கள் இந்த பூமியில் தமது கற்றல் நடவடிக்கையில் சுதந்திரமாக ஈடுபட வேண்டும்.

எமது இனத்தை வேறாக பார்க்கும் நடவடிக்கைகளை தென்னிலங்கை அரசியல்வாதிகள் ஏற்படுத்தி வருகிறர்கள். அதற்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது. தற்போது நெருக்கடியான சூழ்நிலை காணப்படுகிறது. எனவே சுமுகமான நிலைப்பாட்டினை ஏற்படுத்தி கொடுப்பது அரசின் கடமை ஆகும். எமக்கு நல்ல அரசியல் தீர்வு வர வேண்டும். அத்தகைய சூழலை நல்லாட்சி அரசு ஏற்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## கருவி சமூக வள நிலையத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின விழா

(யாழ்ப்பாணம்)

கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூக நிலையத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினவிழா எதிர்வரும் டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இல.37, சேர்.பொன் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் (ராஜா கிறீம் கவுஸ்) நடைபெறவுள்ளது.

கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூகவள நிலையத் தலைவர் க.தர்மசேகரம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண விவசாய மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், கௌரவவிருந்தினர்களாக கிளிநொச்சி வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் திருமதி ஆரணி தவபாலன், நீர்கொழும்பு மாவட்ட பொது வைத்தியசாலை வைத்திய கலாநிதி இ.கோபித், தன்னார்வள ஆளணியினர் ம.செல்வின் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

## உண்மையைக் கூறும் அமர்வு யாழில்

இலங்கைத் தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையின் கீழ் யாழ்ப்பாணம், மன்னார், புத்தளம் ஆகிய மாவட்டங்களின் சர்வமதக் குழுக்களின் ஒழுங்கமைப்பில் வடமாகாணத்தின் உண்மையைக் கூறும் அமர்வு நாளை மறுதினம் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணிவரை யாழ். சரஸ்வதி மண்டபத்தில் நாச்சிமார் கோயில் முன்பாக நடைபெறும்.

கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக நேரடியாக அல்லது மறைமுகமாகப பாதிக்கப்பட்டோர் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரு சில பாதிக்கப்பட்டோரின் அனுபவங்களுக்குப் பொறுமையுடன் செவிமடுப்பதன் மூலம் ஒவ்வொருவருக்கிடையில் ஒத்துணர்வை ஏற்படுத்துதல் இவ்வுண்மை கூறும் குழுமத்தின் பிரதான குறிக்கோளாகும். அதேசமயம் இக்கதைகள்மூலம் வெளியிடப்படும் பாதிக்கப்பட்டோரின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் உரிய அதிகாரிகள் கவனத்தை ஈர்க்கவும் எதிர்பார்க்கின்றோம் எனவும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-7)

## வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் விவசாய போதனாசிரியர்களுக்கு தமிழகத்தில் பயிற்சி



வடமாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் வடக்கில் பணியாற்றும் விவசாயப் போதனாசிரியர்களுக்குத் தமிழகத்தில் திறன் விருத்திப் பயிற்சி நடைபெறவுள்ளது. அண்ணா பல்கலைக் கழகத்தின் தரமணி வளாகத்தில் இயங்கும் தேசிய வேளாண் நிறுவனத்தின் மூலம் இப்பயிற்சி வழங்கப்படவுள்ளது. இது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை விவசாய அமைச்சின் அலுவலகத்திலும் திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்திலும் இடம்பெற்றது.

வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடல்களில் தேசிய வேளாண் நிறுவனத்தைச் சேர்ந்த விவசாய விஞ்ஞானிகளான கலாநிதி எம். ஆர். இராமசுப்பிரமணியன், கலாநிதி எஸ்.வி. முருகன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இவர்களோடு விவசாய அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார்,பிரதி விவசாயப் பணிப்பாளர்கள் அஞ்சனா ஸ்ரீரங்கநாதன், தெ.யோகேஸ்வரன், பொ.அற்புதச்சந்திரன்,பூ. உகநாதன் ஆகியோரும் விவசாயப் போதனாசிரியர்களும் கலந்துகொண்டிருந்தனர். இக்கலந்துரையாடல்களின் போது விவசாயப் போதனாசிரியர்களுக்கு எத்தகைய பயிற்சிகளை தமிழகத்தில் வழங்குவது என்பது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

விவசாயப் போதனாசிரியர்கள் விவசாயிகளுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கான பரிந்துரைகளை வழங்க வேண்டியவர்கள். அந்த வகையில் விவசாயத்தின் புதிய தொழில்நுட்பங்கள் குறித்தும் பயிர்களைத் தாக்கும் நோய்கள் மற்றும் அதற்கான தீர்வுகள் குறித்தும் விவசாய உற்பத்திகளுக்கான சந்தைப்படுத்தல்கள் பற்றியும் தங்கள் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டியவர்களாக உள்ளார்கள். இதனைக் கருத்திற்கொண்டே வடக்கில் பணியாற்றும் விவசாயப் போதனாசிரியர்கள் அனைவருக்கும் தமிழகத்தில் திறன்விருத்திப் பயிற்சியை வழங்குவதற்கான முயற்சிகளை வடக்கு விவசாய அமைச்சு முன்னெடுத்துள்ளது.

பெப்ரவரி 2017இல் முதல் தொகுதி விவசாயப் போதனாசிரியர்கள் பயிற்சிக்காக அனுப்பி வைக்கப்படவுள்ளனர். 20 விவசாய போதனாசிரியர்கள் அடங்கிய இத் தொகுதியில் இவர்களுடன் பிரதி விவசாயப் பணிப்பாளர் ஒருவரும் விவசாயிகள் இருவரும் விவசாய அமைச்சின் ஆலோசனைக் குழுவில் இடம் பெற்றிருக்கும் மாகாண சபை உறுப்பினர்கள் இருவரும் இடம்பெற உள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய வேளாண் நிறுவன விஞ்ஞானிகள் மற்றும் விவசாயத் திணைக்கள அதிகாரிகள் அடங்கிய குழுவி



னர் வடக்கின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று விளை நிலங்களைப் பார்வையிட்டதோடு விவசாயிகளைச் சந்தித்து உரையாடியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ)

## 'கலைநிலம்' ஆக்கங்கள் கோரல்

வலிகாமம் தெற்கு, உடுவில் பிரதேச செயலர் பிரிவின் கலாசாரப் பேரவை 2016 ஆம் ஆண்டிற்கான பிரதேச மலர் ''கலைநிலம்'' எனும் நூலினை வெளியிடவிருப்பதால் அவற்றுக்கான ஆக்கங்களை தகுதி வாய்ந்தோரிடமிருந்து எதிர்பார்க்கின்றது.

இம் மலருக்கான ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக ''கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலகம், உடுவில்'' எனும் முகவரிக்கு தமது ஆக்கங்களை நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்க முடியும் என உடுவில் பிரதேச செயலர் மு.நந்த கோபாலன் அறிவித்துள்ளார். (இ-7)

## முதியோர்களுக்கான மருத்துவ பரிசோதனை

முதியோர்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை முகாம்எதிர்வரும் டிசெம்பர்மாதம் முதலாம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 8 மணி தொடக்கம் 10 மணிவரை பருத்தித்துறை சத்தியசாயி சேவா நிறுவன மண்டபத்தில்நடைபெறவுள்ளது.

ஐம்பது வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாருக்கும் இரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற நோய்களை இனங்கண்டு மருத்துவ ஆலோசனைகளை மனநல வைத்திய ஆலோசகர் (முன்னாள் வடபகுதி இரத்த வங்கி பொறுப்பாளர்) டாக்டர் ஆர்.சிவசங்கர் வழங்குவார். (இ-7)

## வணிகர் கழகங்களுடனான கலந்துரையாடல் யாழில்

யாழ். மாவட்டத்தில் இயங்கி வரும் வணிகர் கழகங்களுடனான கலந்துரையாடல் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி சனிக்கிழமை 165, மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள யாழ். வணிகர் கழகப் பணிமனையில் பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு யாழ். மாவட்டத்தில் இயங்கி வரும் வணிகர்கழகங்களைச்சேர்ந்த பிரதிநிதிகள் அனைவரையும் வருகை தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலதிக விபரங்களை 021 222 85 93 எனும்இலக்கத்துடன்தொடர்பு கொள்வதனூடாக அறியமுடியும் என யாழ். வணிகர் கழக செயலாளர் இ.ஜனக்குமார் அறிவித்துள் ளார். (இ-7)










யாழ்.வட இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சிவன் அறக்கட்டளை நிதிய ஸ்தாபகர் வி.கணேஸ்வரன், பேராசிரியர் எம். நடராஜசுந்தரம், பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை ஆய்வுகூட தொழில்நுட்ப உத்தியோகத்தர் எஸ்.அகிலன் ஆகியோர் கலந்து கொண்டனர். பாடசாலை அதிபர் எஸ். இரவீந்திரன் மங்கள விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினர் பரிசில் வழங்குவதையும் மாணவிகளது கலை நிகழ்வையும் படங்களில் காணலாம்.

25 YEARS OF SERVICE EXCELLENCE 1991-2016

**செய்மதி தொலைக்காட்சி சேவை**
**(Direct to Home)**

BIG SALE

டிஷ் அன்டெனா மூலம் (Digital SD/ HD) தரத்தில் இடையூறு அற்ற முறையில் குறைந்த கட்டணத்தில் (ரூபா 400/- தொடக்கம்) உங்கள் விருப்பம் போல் டிவி சானல்களை கண்டுகளிக்க கூடிய செட் 1 வருட உத்தரவாதத்துடன்*
அனைத்து டிவி ரிசார்ஜற்கும் RECHARGEக்கும் 20% வரை விலைக்கழிவு.

**Rs.2750/-***

**SATS-TECH ENGINEERS**
NO. 298 K.K.S.ROAD JAFFNA. PH:- 021 222 8812. Hotline : 0777710785

# சுவிஸில் மாவீரர் தின நிகழ்வுகள்



சுவிட்சர்லாந்தின் பல மாநிலங்களில் மாவீரர் தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் மாலை ஆரம்பமாகியுள்ளன.

அந்த வகையில் சூரிச்மாநிலத்தில் உள்ள சிவன் ஆலயம் மற்றும் லுட்சேர்ன் துர்க்கை அம்மன் ஆலயம் ஆகியவற்றில் தற்போது இறைவழிபாடுகள் ஆரமபமாகியுள்ளன. இந்நினைவு நாள் இறை வழிபாட்டில் உயிர் நீத்தவர்களை நினைத்து புலம்பெயர் தமிழ் உறவுகள் இறைவழிபாட்டில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும், இந்நிகழ்வுகளில் நூற்றுக்கும் மேற்பட்ட புலம்பெயர் தமிழ் மக்கள் கலந்துகொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)




யாழ். பருத்தித்துறை அச்சிய விளையாட்டுக்கழகத்திற்கு முன்பாக இவ்வாறு எழுதப்பட்டிந்தது. (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)

**Yarl Beauty & Language's Skills College**
YBLSC

**அழகுக்கலை**
**கேக் ஐசிங்**
**தையல்**

இவ்வருடத்திற்கான இறுதி புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.

சனி, ஞாயிறு பிரிவுகள் 04.12.2016 அன்று 10.00 மணிக்கு
கிழமை நாள் பிரிவுகள் 05.12.2016 அன்று 10.00 மணிக்கு

அணைத்து பயிற்சிகளும் மிகச்சிறந்த செய்முறை விளக்கத்துடன் இடம் பெற்று பயிற்சி முடிவில் சான்றிதழ்கள் வ்ழங்கப்படும்.

பயிற்சியின் நிறைவில் தொழில்வாய்ப்பு, சுய தொழில் ஆரம்பிப்பதற்கான வங்கி கடன் வசதிகள்என்பன ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

முதலில் இணைந்துகொள்ளும் 10 மாணவர்களுக்கு "Paper Art Designs" பயிற்சி முற்றிலும் இலவசம்.

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும்.

இல.17, 3ம் ஒழுங்கை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(ராசி கலெக்சனுக்கு அருகில் உள்ள ஒழுங்கை )

**அன்பு வாசகர்களே!**
**உங்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்**

நீங்கள் அறிந்த
- செய்திகள்
- புகைப்படங்கள்
- நிகழ்வுகள்
- பேசும் படங்கள்

போன்றவற்றை வலம்புரியில் வெளிவரச் செய்வதற்கு உங்கள் கைத்தொலைபேசியில் உள்ள VIBER செயலி மூலம் தகவல்களை இலகுவாக பரிமாறிக் கொள்ளுங்கள்.

VIBER செயலி இல
**076 636 3378**

Viber

**கல்யாண மாலை**

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/6515 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 14செவ் 7 இல்<br>உயரம்: 156cm<br>தகைமை/தொழில்:BSc<br>தொ.இ: G/6521 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 12 உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L/ அரசதொழில்<br>தொ.இ: B/6519 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 12செவ் 4 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:HNDIT/ அரசதொழில்<br>தொ.இ: G/6522 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>உயரம்: 154cm<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/6524 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 37செவ் 1 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:GAQ/வங்கியாளர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/6523 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 46 உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:பொறியியலாளர் சிங்கப்பூர்<br>தொ.இ: B/6527 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 56செவ் 1 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:LLB/சட்டத்தரணி<br>தொ.இ: G/6525 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00- 5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

இனிவரும் நாட்களில் கல்யாணமாலை ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை தினமாகும்.

## 200 கோடி ரூபாய் மோசடி

# இலங்கைத் தமிழர்கள் 76 பேர் நோர்வே பொலிஸாரால் கைது

நோர்வேயில் பாரிய நிதி மோசடிகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 76 இலங்கைத் தமிழர்கனை பொலிஸார் கைது செய்துள்ளனர். நோர்வேயில் பல்வேறு பகுதிகளிலும் வாழும் தமிழர்களைப் பயன்படுத்தி இவர்கள் நிதி மோசடியில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள நோர்வே அதிகாரிகள், துப்புரவு தொழில் செய்யும் 34 வயதுடைய பிரதான சந்தேகநபர் கடுமையாக உழைத்து முன்னேறிவரும் ஒருவராக தன்னை அடையாளம் காட்டி வந்துள்ளதாக தெரிவித்துள்ளனர். குறித்த நபர் 6 பேருடன் இணைந்து நோர்வேயில் வாழும் இலங்கைத் தமிழர்களின் அடையாளத்தை பயன்படுத்தி சுமார் 160 - 200 கோடி ரூபாய் வரையில் மோசடி செய்துள்ளனர்.

மோசடி செய்த தொகை இதனை விட பலமடங்கு இருக்கலாம் எனவும் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். அத்துடன், மோசடியுடன் தொடர்புடைய அனைவரையும் அடையாளம் காண்பது கடினமான காரியம் எனவும் அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தலைநகர் ஒஸ்லோவிற்கு அருகில் துப்புரவு தொழில் நிறுவனம் ஒன்றை நடத்தி வரும் இலங்கை தமிழ் ஒருவரின் ஆண்டு வருமானம் குறித்து 2014ஆம் ஆண்டு வருமான வரி திணைக்களத்தால் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. இதனையடுத்து இலங்கையர் சிலரின் நடவடிக்கை மீது சந்தேகம் கொண்ட அந்நாட்டு பொலிஸார் கடந்த 2 ஆண்டுகளாக கண்காணித்து வந்துள்ளனர். இவர்களை கண்காணித்து வந்ததில் முக்கிய 6 நபர்கள் மற்றும் பல தமிழர்களின் பெயரில் இவ்வாறு மோசடிகளை செய்து சொகுசாக வாழ்வதும், இதன் பின்னால் உள்ள மோசடியும் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனிடையே, சில தமிழ் இளைஞர்கள் போதிய வேலைவாய்ப்பு இல்லாத காரணத்தினால் விரும்பியோ விரும்பாமலோ குறித்த நிறுவனங்களில் இணைந்து செயற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இந்நிலையில், முக்கிய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். மேலும் பலர் விசாரணைகளை எதிர்நோக்கியுள்ளனர்.

இதேவேளை, குறித்த சம்பவத்தையடுத்து சுமார் 7 இளைஞர்கள் தற்காலிக வேலை அனுமதியை இழந்துள்ளதுடன், புகலிடக்கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படும் முன் இந்த மோசடி நிறுவனங்களில் வேலை செய்த பலரது அகதி விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-7-10)

# மாணவர்களின் கல்விக்காக பணிப் பகிஷ்கரிப்பு நிறுத்தம்



டிசெம்பர் முதலாம் திகதி நள்ளிரவு முதல் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ள தனியார் பேருந்துகளின் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக, கல்வி பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அனைத்து இலங்கை தனியார் பேருந்துச் சங்கத்தின் தலைவர் ஸ்டாலின் பெர்னாட்டோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாணவர்களின் பரீட்சை எதிர்வரும் 6 ஆம் திகதி ஆரம்பிப்பதாலேயே நாம் பணிப்பகிஷ்கரிப்பை டிசெம்பர் முதலாம் திகதி ஆரம்பிக்கின்றோம்.

எவ்வாறாயினும் குறித்த பிரச்சினைக்கான தீர்வு பரீட்சைக்கு முன்னர் கிடைத்துவிடும்.

அவ்வாறு கிடைக்கப்பெறாத பட்சத்தில் நாம் பணிப்பகிஷ்கரிப்பை நிறுத்திவிட்டு, பரீட்சைக் காலத்தில் சேவைகளை ஆரம்பிப்போம்.

மாணவர்களின் கல்விக்கு நாம் முக்கியத்துவத்தை அளிக்கின்றோம் என அவர் தெரிவித்தார்.

பேருந்துகள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டால் சாதாரணதர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பாதிக்கப்படுவார்கள் என இலங்கை அதிபர்கள் சங்கம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## 11.2016 27 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1703 - இங்கிலாந்து, டெவன் என்ற இடத்தில் உள்ள கலங்கரை விளக்கம் அங்கு நிகழ்ந்த பெரும் சூறாவளியினால் சேதமாக்கப்பட்டது.
- 1830 - அன்னை மரியா உலக உருண்டை மேல் நின்று கொண்டு கத்தரீன் லபோரேக்குக் காட்சியளித்தார்.
- 1895 - ஊர்ஃபா என்ற இடத்தில் 3,000 ஆர்மேனியர்கள் ஓட்டோமான் படைகளினால் உயிருடன் எரிக்கப்பட்டனர்.
- 1895 - பாரிசில் அல்பிரட் நோபல் நோபல் பரிசுக்கான திட்டத்தை தெரிவித்து தனது சொத்துக்களை அப்பரிசுக்கான மூலதனமாக அறிவித்தார்.
- 1935 - இரத்மலானை விமான நிலையத்துக்கு முதலாவது விமானம் மதராசில் இருந்து வந்திறங்கியது.
- 1940 - ருமேனியாவில் இரண்டாம் கரோல் மன்னனின ஆதரவாளர்கள் 60 பேரை தளபதி இயன் அண்டோனெஸ்கு கைதுசெய்து தூக்கிலிட்டான்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: ஸ்டஃபோர்ட்ஷயரில் ஆங்கிலேய விமானப்படைத் தளத்தின் ஆயுதக் கிடங்கில் ஏற்பட்ட பெரும் விபத்தில் 70 பேர் கொல்லப்பட்டனர்.
- 1964 - பனிப்போர்: இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு அணுவாயுதச் சோதனைகளை நிறுத்தும் படி ஐக்கிய அமெரிக்காவையும் ரஷ்யாவையும் கேட்டுக் கொண்டார்.
- 1971 - சோவியத்தின் மார்ஸ் 2 விண்கலம் தனது துணை விண்கோள் ஒன்றை செவ்வாய்க் கோளில் இறக்கியது. இது செவ்வாயில் மோதி செயலிழந்தது. செவ்வாயில் இறங்கிய முதலாவது கலம் இதுவாகும்.
- 1975 - கின்னஸ் உலக சாதனை நூலை ஆரம்பித்து வைத்த ரொஸ் மாக்வேர்ட்டர் ஐரியக் குடியரசு இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1983 - கொலம்பியாவின் போயிங் 747 விமானம ஸ்பெயின் தலைநகர் மாட்ரிட் அருகே வீழ்ந்து நொருங்கியதில் 183 பேர் கொல்லப்பட்டனர்.
- 1989 - ஈழப்போரில் இறந்த போராளிகளை நினைவுகூரும் முகமாக மாவீரர் நாள் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பினரால் அறிவிக்கப்பட்டது.
- 2001 - ஹபிள் விண்வெளித் தொலைநோக்கி மூலம் ஓசிரிசு கோளில் ஆவியாகக்கூடிய நிலையில் ஐதரசன் மண்டலம் கண்டுபிடிக்கப்பட்டது. சூரிய குடும்பத்திற்கு வெளியே உள்ள கோள் ஒன்றில் வளி மண்டலம் கண்டுபிடிக்கப்பட்டது இதுவே முதல் தடவை.
- 2005 - பிரான்சின் ஏமியென்சு நகரில் உலகின் முதலாவது மனித முகமாற்றுப் பொருத்து வெற்றிகரமாக இடம்பெற்றது.
- 2006 - கனடாவில் பிரெஞ்சு மொழி பேசும் மக்களை பெரும்பான்மையாக கொண்ட கியூபெக் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் தனியான ஹதேச இனம்" என்ற அங்கீகாரத்தை கனடிய நாடாளுமன்றம் வழங்கியது.
- 2007 - ஈழப்போர்: கிளிநொச்சியில் அமைந்துள்ள புலிகளின் குரல் வானொலியின் ஒலிபரப்பு நிலையம், நடுவப்பணியகம் ஆகியவற்றின் மீது இலங்கை வான்படையின் வானூர்திகள் வான்குண்டுத் தாக்குதலை நடத்தியதில் 9 பேர் கொல்லப்பட்டு 10 பேர் படுகாயமடைந்தனர்.
- 2007 - ஈழப்போர்: இலங்கை இராணுவத்தினர் கிளிநொச்சி மாவட்டம், ஐயன்கேணியில் நடத்திய கிளைமோர் தாக்குதலில் 9 பாடசாலைச் சிறுமிகள் உட்பட 11 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.
- 2009 - மாஸ்கோவிற்கும், சென் பீட்டர்ஸ்பேர்க்கிற்கும் இடையில் விரைவுத் தொடருந்து ஒன்றில் குண்டு வெடித்ததில் 28 பேர் கொல்லப்பட்டு, 96 பேர் காயமடைந்தனர்.

### பிறப்புக்கள்

- 1934 - யோசப் பரராஜசிங்கம், இலங்கை, மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர். (இ.2005)
- 1940 - புரூஸ் லீ, தற்காப்புக்கலை நிபுணர், நடிகர் . (இ. 1973)
- 1942 - ஜிமி ஹென்றிக்ஸ், அமெரிக்க கிட்டார் கலைஞர் . (இ. 1970)
- 1960 - யூலியா திமொஷென்கோ, உக்ரேனிய அரசியல்வாதி, பிரதமர்.
- 1963 - திலீபன், தமிழீழ விடுதலைப் புலிப் போராளி, உண்ணாநோன்பிருந்து உயிர்நீத்தவர் . (இ. 1987)
- 1965 - பிரிகேடியர் பால்ராஜ், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முதுநிலைத் தளபதி . (இ. 2008)
- 1980 - மைக்கேல் யார்டி, ஆங்கிலேயத் துடுப்பாட்ட வீரர்.
- 1986 - சுரேஷ் ரைனா, இந்தியத் துடுப்பாட்ட வீரர்.

### இறப்புகள்

- கிமு 8 - ஓராசு, இத்தாலியக் கவிஞர். (பி.கிமு65)
- 1852 - அடா லவ்லேஸ், ஆங்கிலேயக் கணிதவியலர் . (பி. 1815)
- 1982 - லெப்டினன்ட் சங்கர், ஈழப்போராட்டத்தில் இறந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் போராளி. (பி. 1960)
- 2008 - வி. பி. சிங், முன்னாள் இந்தியப் பிரதமர். (பி. 1931)
- 2014 - பிலிப் ஹியூஸ், ஆத்திரேலியத் துடுப்பாட்ட வீரர். (பி. 1988)

### சிறப்பு நாள்

- தமிழ் ஈழம் - மாவீரர் நாள்.

# தெஹிவளை விலங்கியல் பூங்காவை இரவுப் பூங்காவாக மாற்றத் திட்டம்

எதிர்வரும் 2017ஆம் ஆண்டு தேசிய புத்தாண்டுக்கு முன்னர் தெஹிவளை தேசிய விலங்கியல் பூங்காவை இரவுப் பூங்காவாக மாற்றுவதற்கான திட்டம் முன் வைக்கப்பட்டுள்ளதாக நிலையான அபிவிருத்தி மற்றும் வனஜீவ ராசிகள் அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா தெரிவித்துள்ளார்.

மிருகங்களை கூடுகளில் அடைத்து வைக்காது, அவை சுதந்திரமாக நடமாடும் வகையில் இந்த விலங்கியல் பூங்கா மூன்று கட்டங்களாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடந்த அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார்.

இந்த விலங்கியல் பூங்கா சுமார் 100 வருடங்கள் பழைமை வாய்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 80 | 100 | 70 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 120 | 140 | 100 | 20 | 100 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 50 | 50 | 35 | 80 | 50 | 80 | 60 |
| தக்காளி | 40 | 50 | 45 | 80 | 50 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 | 60 | 60 | 60 | 50 |
| கோவா | 40 | 50 | 100 | 80 | 60 | 80 | 50 |
| கரட் | 80 | 100 | 70 | 80-120 | 80 | 160 | 80 |
| பூசணி | 40 | 30 | 25 | 40 | 40 | 60 | 40 |
| புடோல் | 50 | 60 | 30 | 60 | 40 | 80 | 50 |
| வாழைக்காய் | 40 | 30 | 35 | 50 | 50 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 80 | 140 | 100 | 100 | 120 | 140 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 80 | 100 | 120 | 100 | 100 |
| பாகற்காய் | 180 | 200 | 90 | 160 | 120 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 70 | 80 | 60 | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 70 | 80 | 80 | 120 | 60 |
| பயற்றங்காய் | 130 | 100 | 80 | 140 | 100 | 160 | 120 |
| லீக்ஸ் | 80 | 100 | 90 | 20 | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 50 | 100 | 50 | 50 | 50 | 80 | 40 |
| கறிமிளகாய் | 150 | 100 | 105 | 120 | 120 | 160 | 120 |
| முருங்கைக்காய் | 150 | 40 | 30 | 100 | 60 | 120 | 100 |
| போஞ்சி | 180 | 250 | 180 | 200 | 160 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 60 | 50 | 30 | 60 | — | 80 | 60 |
| கீரை - 1பிடி | 30 | 50 | 20 | 30 | 20 | 40 | 30 |
| தேசிக்காய் | 350 | 300-350 | 400 | 500 | 550 | 500 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 50 | 15-35 | 50 | 25 | 30-40 | 50 |
| இராசவள்ளி | — | — | — | — | — | — | — |
| வெங்காயப்பூ | — | — | — | — | — | 200 | 200 |
| முள்ளங்கி | 60 | — | 30 | 60 | 50 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 30 | — | 15 | 30 | 40 | 40 | 30 |
| வல்லாரை | 15 | — | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | — | — | 60 | 50 | — | 80 |

# புதிய அரசியலமைப்பு தொடர்பாக மார்ச் மாதம் பொது வாக்கெடுப்பு

(கொழும்பு)

**புதிய அரசியலமைப்புத் தொடர்பான மக்கள் கருத்தறியும் பொது வாக்கெடுப்பு அடுத்த ஆண்டு மார்ச மாதம் நடத்தப்படவுள்ளதாக, அரசாங்கத் தரப்புத் தகவல்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

புதிய அரசியலமைப்பை தயாரிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், இந்த புதிய அரசியலமைப்பு யோசனைக்கு பொது மக்களின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

கடந்தவாரம் சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் நடத்தப்பட்ட கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் புதிய அரசியலமைப்புத் தொடர்பாக, பொதுவாக்கெடுப்பு நடத்துவது குறித்து நீண்ட நேரம் ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, அரசியலமைப்பு திருத்தம் தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள ஆறு உப குழுக்களினதும், பரிந்துரைகளுக்கு நாடாளுமன்றம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் அங்கீகாரம் அளித்த பின்னர், பொது வாக்கெடுப்புக்கான நாள் தீர்மானிக்கப்படும் என்று சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் பொதுவாக்கெடுப்பு நடத்த திட்டமிடப்பட்டுள்ளதால், உள்ளூராட்சித் தேர்தல மேலும் பிற்போடப்படும் வாய்ப்புகள் உள்ளதாகவும் கொழும்பு ஆங்கில நாளிதழ் மேலும் தெரிவித்துள்ளது. (இ-7-10)

## அரச பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்க புதிய நடைமுறை விரைவில்

அரச சேவையாளர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதற்கு புதிய நடைமுறை ஒனறை ஆரம்பிப்பதாக பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்தார்.

எதிர்காலத்தில் அரச சேவையாளர்களின் செயற்றிறனை அடிப்படையாகக் கொண்டு பதவி உயர்வு வழங்க நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கு முன்னர் காணப்பட்ட சேவைக் காலத்தின் அடிப்படையில் பதவி உயர்வு வழங்கும் நடைமுறையை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக,நேற்று முன்தினம் கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அரச சேவையை நவீனமயப்படுத்தும் வேலைத் திட்டத்திற்கு அமைவாக இந்நடவடிக்கையை முன்னெடுப்பதாக பொதுநிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர்



ரஞ்சித் மத்துமபண்டார மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## வாரம் ஒரு தகவல்

### கனிவுள்ளம்

ஐதராபாத் தெலுங்கானாப் பிரதேசத்தில் வறுமையாலும் ஏழ்மையாலும் குழப்பங்களும் கலவரங்களும் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. இப்பகுதிக்கு விநோபாவே வந்திருந்தார். கிராம மக்களும் ஏழைத் தீண்டாதவர்களும் பெருந்திரளாகக் கூடி விநோபாவை வரவேற்றார்கள்.

மக்களிடம் விநோபா உங்கள் குறை என்ன? ஏன் கலவரமும் குழப்பமும் உண்டாக்குகிறீர்கள் என்று கேட்டார்?

மக்கள் அவரிடம் பயிர் செய்ய எங்களுக்கு நிலம் வேண்டும். இது கிடைத்துவிட்டால் சண்டை சச்சரவுகள் தாமாக அடங்கிவிடும் என்று பதில் அளித்தார்கள்.

விநோபா மீண்டும் அவர்களிடம் உங்களுக்கு எவ்வளவு நிலம் தேவைப்படும் எனக் கேட்டார்?

கிழவர் ஒருவர் முன்னே வந்து நாங்கள் அனைவரும் உழைத்துச் சாப்பிட 80 ஏக்கர் நிலம் எங்களுக்குத் தேவைப்படுகின்றது என்று தங்கள் தேவையை வெளியிட்டார்.

விநோபா அவரிடம் அப்படியானால் நீங்கள் அனைவரும் சேர்ந்து இதை எழுதிக் கையொப்பம் செய்து கொடுங்கள் என்று வேண்டிக்கொண்டார். அவர்களும் அப்படியே செய்து கொடுத்தார்கள். இவர் இந்த 80 ஏக்கர் நிலத்தையும் எப்படித் தரப்போகிறார் என்ற ஐயம் அவர்களுக்கு.

குடியான மக்களிடமிருந்து இக்கையொப்பத்தைப் பெற்றுக் கொண்ட விநோபா, கூட்டத்தில் குழுமியிருந்த நிலக்கிழார்களைப் பார்த்து இந்த ஏழைத் தீண்டாத மக்களுக்கு உங்களில் யாருக்கேனும் 80 ஏக்கர் நிலம் கொடுக்க முடியுமா? என வினவினார்.

அக்கூட்டத்திலிருந்து ஒரு குரல் தொனித்தது. ஒரு மனிதர் எழுந்து நின்று நான் கொடுக்கிறேன் 100 ஏக்கர் நிலம் என்று கூறினார். இதைக் கேட்ட கூட்டத்தினர் வியப்படைந்தனர். இந்த அளவுக்கு வன்மையும் கனிவும் உள்ள ஒரு நெஞ்சம் இருக்கிறதா என எண்ணி மகிழ்ந்தனர். அவரை வாயார வாழ்த்தினர். அம்மனிதரே ராமச்சந்திரரெட்டி என்னும் வன்மையாளர்.

**கவிஞர் தே.ப.பெருமாள்**

## முன்னாள் அதிரடிப்படைத் தளபதி கைதுக்கு ஹெல உறுமய கண்டனம்

(கொழும்பு)

ஓய்வுபெற்ற பின்னர் பொலிஸ விசேட அதிரடிப் படைக்கு சொந்தமான வாகனத்தை பயன்படுத்தியமையினால் சுமார் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபா வீணடிப்பு செய்த சம்பவம் தொடர்பில் விசேட அதிரடிப்படையின் முன்னாள் கட்டளையதிகாரியான பிரதி பொலிஸ்மா அதிபர் கே.எல். எம். சரத்சந்திர கைது செய்யப்பட்டுள்ளமை ஏற்றுக் கொள்ள முடியாது என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் முன்னாள் கட்டளையதிகாரி மிக திறமையான அதிகாரி என்பதுடன் தேசிய பாதுகாப்பு மற்றும் முக்கிய பிரமுகர் பாதுகாப்பு பிரிவில் செயற்பட்டு நாட்டிற்கு சேவையாற்றியுள்ளதாகவும் ஜாதிக ஹெல உறுமய வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அநத அறிக்கையில்மேலும குறிப்பிடப்பட்டுள்ளதாவது, நாட்டில் போர் இடம்பெற்ற காலப்பகுதியில் கிழக்கின் பாதுகாப்பு தொடர்பில் செயற்பட்டது மாத்திரம் அன்றி தேசிய பாதுகாப்பு மற்றும் முக்கிய பிரமுகர்கள் பாதுகாப்பு தொடர்பில் திறமையாக செயற்பட்டு பாரிய சேவையினை முன்னெடுத்தவர். நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பிலும் முக்கிய பிரமுகர்கள் பாதுகாப்பு தொடர்பிலும் பாரிய சேவையாற்றியவரை பொலிஸ் திணைக்களத்திற்கு சொந்தமான வாகனத்தை பயன்படுத்தியமை தொடர்பில் சிறையிட்டமை ஆச்சரியம் மிக்க ஒரு விடயமாகும்.

நாட்டில் போர் வெற்றிக்குள மறைந்து கொண்டு தேசப்பற்றாளராக காட்டிக கொண்டு பல கோடி ரூபா தேசிய நிதியைப் பலர் சூறையாடியுள்ளனர்.

மோசடியான அரசியல் வாதிகள் சுதந்திரமாக ஊடகங்கள் முன் வீராப்பு பேசுகையில், இவ்வாறான சிறிய சம்பவங்களுக்கு குறித்த அதிகாரியை சிறைவைத்தமையை மக்கள் அனுமதிக்க மாட்டார்கள் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவக்கப்பட்டுளளது. (இ-7-10)

## உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இந்த அரசு நடத்தப்போவதில்லை

### விமல் வீரவன்ச விரக்தி

அரசாங்கம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விரைந்து நடத்தப்போவது இல்லையென தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

விமலின் மனைவி சசி வீரவன்ச, போலி ஆவணங்களைப் பயன்படுத்தி கடவுச் சீட்டு தயாரித்தார் என்ற குற்றச்சாட்டு தொடர்பிலான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் கொழும்பு நீதவான் நீதிமன்றில் நடைபெற்றது.

இந்த வழக்கு விசாரணைகளை அவதானிக்கும் வகையில் நீதிமன்ற வளாகத்திற்கு வருகை தந்திருந்த விமல் வீரவன்சவிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.



"உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அரசாங்கம் விரைவில் நடத்தப்போவது இல்லையென எங்களுக்கு தகவல் கிடைத்துள்ளது. எனினும் நகரசபைத் தேர்தலில் ஓரளவு வெற்றியை பெற்றுக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையில் அந்த தேர்தலை மாத்திரம் நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிய வருகின்றது. எந்த தேர்தல் வந்தாலும் அந்தச் சவாலை எதிர்கொள்ள கூட்டு எதிர்க் கட்சியில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள், புதிய கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் தயார்.

போலி ஆவணங்களைப் பயன்படுத்தி கடவுச் சீட்டு தயாரித்ததாக விமல் வீரவன்சவின் மனைவி சசி வீரவன்ச மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பிலான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் கொழும்பு நீதவான் நீதிமன்றில் நடைபெற்றது.

கடந்த மாதம் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சசி வீரவன்ச குற்றத்தை ஒப்புக்கொள்ள மறுத்தமை காரணமாக வழக்கு நேற்று முன்தினம் வரை ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசாரணைகளை அடுத்து, வழக்கு அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 8ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

# இனவாதம் கக்கும் பௌத்த பிக்குகள்

இலங்கையின் அதிகாரத்துவ பெரும்பான்மை பௌத்த சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் இடையில் தொடரப்பட்ட குருதி தோய்ந்த உள்நாட்டு யுத்தமானது மே 2009இல் நிறைவுக்கு வந்தது.

இந்த யுத்தம் முடிவடைந்து ஏழு ஆண்டுகள் கடந்த நிலையில் தற்போது இவ்விரு இனத்தவர்களுக்கும் இடையில் மீளிணக்கம் ஏற்படுத்தப்படுகிறது.

ஆனால் தமிழ் மக்களுக்கு எதிராக சில பௌத்த பிக்குகளால் அண்மையில் இனவாதம் கலந்த வசைமொழிகள பேசப்பட்டதானது நாட்டில் எச்சரிக்கை ஒலியை எழுப்பியுள்ளது.

தமிழ் கிராம சேவகர் ஒருவரை பௌத்த பிக்கு ஒருவர் இனத்துவேசம் நிறைந்ததாக வார்த்தைகளால் திட்டி அவரை எச்சரிக்கின்ற அந்தக் காட்சியை, பொலிஸார் எந்த நடவடிக்கையும் எடுக்காது, வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பதை உள்ளடக்கிய காணொலி ஒன்று இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இதேபோன்று 'சிங்களவர்களின் மீட்பர்' எனத் தன்னைத் தானே கூறிக் கொண்ட ஒருவர் கைது செய்யப்பட்ட போது, அதனை எதிர்த்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பௌத்த மதகுரு ஒருவர் இந்த ஆர்ப்பாட்டம் இரத்தக்களறிக்கு வழிவகுக்கும் என எச்சரிக்கை செய்த பிறிதொரு சம்பவமும் நடந்து உள்ளது.

இவ்வாறான இனவாதத் தாக்குதல்கள் மதம் என்பதற்கு அப்பால் இனவாதத்தைத் தூண்டுவதாக அமைந்துள்ளது.

கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த தமிழர்கள், இந்து மதத்தைச் சேர்ந்த தமிழர்கள் மற்றும் தமிழ் பேசும் முஸ்லிம்கள் என அனைவரும் இலக்கு வைக்கப்பட்டு தாக்கப்படுகின்றனர்.

இலங்கையின் மக்கள் தொகையில் 70 சதவீதமானவர்கள் பௌததர்களாவர். அத்துடன் 13 சதவீதத்தினர் இந்துக்களாகவும், கிட்டத்தட்ட 10 சதவீதத்தினர் முஸ்லிம்களாகவும் உள்ளனர்.

மதத் தலங்கள் மீதான தாக்குதல்கள், சிறுபான்மை மத சமூகங்கள் மீதான தாக்குதல்கள் போன்றன வன்முறைச் சம்பவங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால் இது வரை காலமும் இவ்வாறான தாக்குதல்களில ஈடுபட்ட எவருக்கும் தண்டனை வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை என்பது மிகவும் மோசமான ஒரு செய்தியாகும்.

'இலங்கையில் வாழும் அனைத்துக் குடிமக்களும் சமமாகவும் பாரபட்சமற்ற வகையிலும் மதச்சுதந்திரத்துடனும் தத்தமது மதங்களை சுதந்திரமாக வணங்குவதற்குமான உரிமையைக் கொண்டுள்ளனர் என நாட்டின் அரசியல் சாசனத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் வாழும மத மற்றும் சிறுபான்மை மக்களுக்கு எதிராக பெரும்பான்மை சமூகத்தால் மேற்கொள்ளப்படும் வன்முறைச் சம்பவங்களுக்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பௌத்த பிக்குகளே தலைமை தாங்குகின்றனர். ஆனால் இவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.



இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக சிவில் சமூகக் குழுக்கள் தொடர்புபட்ட அதிகாரிகளுக்கு அறிக்கையிட்டுள்ளனர். எனினும் இவ்வாறான வசைமொழிகளையும் இனவாதக் கருத்துக்களையும் கூறும் பௌத்த பிக்குகளுக்கு எதிராக இலங்கை சட்டத்தின் கீழ் எவ்வித தண்டனைகளும் வழங்கப்படவில்லை' என உலகத் தமிழர் பேரவையின் தலைவர் அருட்தந்தை எஸ். ஜே.இமானுவேல் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெறும் பாரபட்சங்களுக்கு எதிராகவும் பௌத்த பிக்குகள் உட்பட இனவாதம் மற்றும் வசைமொழி பேசுபவர்களை இனங்கண்டு அவர்களை நீதியின் முன்நிறுத்த வேண்டும் என கத்தோலிக்க மற்றும் இந்து மத தமிழ்க் குழுக்கள் அழைப்பு விடுத்துள்ள போதிலும் இது இன்னமும் நிறைவேற்றப்படவில்லை.

இலங்கையானது தற்போது பல பத்தாண்டு கால உள்நாட்டு யுத்தத்தின் பாதிப்புக்களிலிருந்து தன்னை மீட்டெடுத்து வருகிறது. உள்நாட்டு யுத்தத்தில் பாதிக்கப்பட்டுள்ள அதிலிருந்து மீண்டெழுந்தவர்கள் இனிவருங்காலங்களில் நம்பிக்கையுடன் வாழ்வதற்கேற்ற வகையில் சட்டங்களும் நிறுவகங்களும் செயற்பட வேண்டிய காலகட்டமாகும்.

ஆனால் இனிவருங்காலங்களில் அதாவது போருக்குப் பின்னான முதலாவது தலைமுறையினர் இலங்கையின் ஆட்சிப்பீடத்திற்கு வரும் போது என்ன நடக்கும் என்பதற்கு இவ்வாறான இனவாத பௌத்த சிங்களவர்களால் சிறுபான்மையினருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் முதலாவது சமிக்ஞையாக உள்ளது.

இஸ்லாமிய அரசு என அழைக்கப்படும் ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகளுடன் இணைவதற்காக இலங்கையைச் சேர்ந்த 32 முஸ்லிம்கள் சிரியாவிற்குப் பயணம் செய்துள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ சுட்டிக் காட்டியிருந்தார்.

'இந்த 32 முஸ்லிம்களும் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. இவர்கள் படித்த மற்றும் செல்வந்த முஸ்லிம் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாவர்' எனவும் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்த நாட்டில் ஐ.எஸ். தொடர்பாக பாரியதொரு அச்சம் காணப்படுகிறது. இந்த நாட்டிலும் இவ்வாறானதொரு தீவிரவாதத்தை விதைக்க யாராவது முற்பட்டால் அதனை நாம் இன்றிலிருந்து தடுத்து நிறுத்த வேண்டும்.

இந்த நாட்டுச் சட்டமானது பௌத்த பிக்குகளுக்கோ அல்லது சாதாரண மக்களுக்கோ வேறுபட்டதல்ல' என விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

இலங்கை முஸ்லிம் பேரவை நீதி அமைச்சரின் இந்தக் கருத்தை முற்றிலும் நிராகரித்தது. 'நாங்கள் அமைச்சரின் இத்தகைய தவறான கருத்தை ஏற்க மறுக்கிறோம். அமைச்சரின் இந்தக் கருத்தானது ஒரு ஆண்டின் முன்னர் இலங்கையைச் சேர்ந்த ஒருவர் ஐ.எஸ்.ஐ.எஸ். உடன் இணைந்து போராடி மரணித்த போது ஊடகங்களில் வெளியிட்ட கருத்துக்களாகும்.

இதன் பின்னர் இவ்வாறு எவரும் இந்த அமைப்புடன் இணைந்ததற்கான சாட்சியங்கள் வெளியிடப்படவில்லை.

ஆகவே இந்நிலையில் அமைச்சரின் கருத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்' என முஸ்லிம் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையானது தற்போது உள்நாட்டு யுத்தத்திலிருந்து மீண்டு வரும் ஒரு நாடாகும். இந்த நாட்டில் வாழும் பௌத்தர்கள், இந்துக்கள், கத்தோலிக்கர்கள் மற்றும் முஸ்லிம்கள் என அனைவரும் இந்த யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களாவர்.

இந்த மக்கள் உள்நாட்டு யுத்தத்திலிருந்து கற்றுக் கொண்ட பாடங்களின் அடிப்படையில் புதிய சட்டங்களையும் புதிய நிறுவகங்களையும் உருவாக்க முயற்சிக்கின்றன. இவ்வாறானதொரு பயங்கரம் இந்த நாட்டில் மீண்டும் ஏற்படாத வண்ணம் இந்தச் சட்டங்கள் இருக்க வேண்டும்.

புதிய தலைமுறையினர் ஆட்சிக்கு வரும் போது இவ்வாறான மத மற்றும் இனவாத வேறுபாடுகள் நீக்கப்படும். ஆகவே தற்போது நாட்டில் முன்னெடுக்கப்படும் நல்லிணக்க முயற்சிகளுக்கு குந்தகம் விளைவிக்க சில தீய சக்திகள் முயற்சிக்கின்றன.

ஆங்கிலத்தில் - JOHN J. XENAKIS
வழிமூலம் -Breitbart
மொழியாக்கம் -நித்தியபாரதி

### அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய

# கியூபாவின் புரட்சித் தலைவர் பிடல் காஸ்ட்ரோ காலமானார்



**அமெரிக்க ஏகாதிபத்தியத்தை இறுதி வரை எதிர்த்த கியூபா நாட்டின் புரட்சித் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான பிடல் காஸ்ட்ரோ தனது 90 ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.**



அமெரிக்கா தனது ஏகாதிபத்திய கொள்கையின் மூலம் கியூபாவிலும் தனது கொடியை நாட்டியிருந்தது. ஆனால் அமெரிக்காவால் அங்கு நெடுங்காலம் நிலைத்து நிற்கமுடியவில்லை. அமெரிக்காவின் பல பெரு முதலாளிகள் கியூபாவில் கால்பதித்து கியூபா நாட்டு அரசின் துணையுடன் அங்கு தொழில் செய்து கியூபா நாட்டு மக்களையும் அதன் செல்வத்தையும் சுரண்டிக் கொண்டிருந்தனர்.

இதனைக்கண்டு கொதித்தெழுந்த பிடல் காஸ்ட்ரோ கியூபாவின் அரசிற்கு எதிராக போராட்டத்தில் குதித்தார். அவர் தனது போராட்டத்தை முன்னெடுத்து செல்ல தேர்ந்தெடுத்த கொள்கைதான் கம்யூனிசம். பிடல் காஸ்ட்ரோ கல்லூரியில் படிக்கும் பொழுதே கம்யூனிசக் கட்சியில் இணைந்து பல போராட்டங்களில் ஈடுபட்டு சிறை சென்றார்.

அவரது தொடர் போராட்டத்தின் விளைவாக 1959 ஆம் ஆண்டு புல்ஜென்சியோ பாட்டிட்ஸ்டாவின் ஆட்சியை வீழ்த்தி தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்றார். 1959 முதல் 1976 வரை கியூபாவின் பிரதமராகவும், 1976 முதல் 2008 ஆம் ஆண்டு வரை கியூபாவின் ஜனாதிபதியாகவும் பொறுப்பு வகித்தார்.

இவர் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு அமெரிக்காவிற்கும் கியூபாவிற்கும் நேரடி மோதல்கள் வெடித்தன. முதலில் காஸ்ட்ரோவை அமெரிக்கா தனது பக்கம் இழுக்க நினைத்து திட்டங்களை தீட்டியது.

ஆனால் அதனுடைய திட்டங்கள் அனைத்தும் தோல்வியில் முடிந்தன. கியூபாவின் வளங்கள் அனைத்தும் கியூபா மக்களுக்கே சொந்தம் என காஸ்ட்ரோ அறிவித்தார். மேலும் கியூபாவில் உள்ள தொழிற்சாலைகள் அனைத்தையும் பொதுவுடைமையாக அறிவித்தார் காஸ்ட்ரோ. அதனால் கடும் கோபம் கொண்ட அமெரிக்கா கியூபாவின் மீது பொருளாதாரத் தடை விதித்தது.

கியூபாவில் தயாரிக்கப்பட்ட பொருட்கள் அனைத்தும் கியூபாவிலேயே தேங்கும் நிலை ஏற்பட்டது. அப்பொழுது பிடல் காஸ்ட்ரோவுக்கு கைகொடுத்தது ரஷ்யா. கியூபாவின் பொருட்களை ரஷ்யா இறக்குமதி செய்ய ஒப்புக்கொண்டது. மேலும் கியூபா மக்களும் தங்கள் நாட்டிற்காக கடுமையாக உழைத்தனர்.

இதனால், அமெரிக்க நிறுவனங்கள் வெகுவாக பாதிக்கப்பட்டன. எனவே காஸ்ட்ரோவை கொலை செய்ய அமெரிக்காவின் சி.ஐ.ஏ. அமைப்பு தீவிரமாக செயற்பட்டது. ஒருமுறை இரண்டு முறை அல்ல மொத்தம் 638 முறை பிடல் காஸ்ட்ரோவை கொலை செய்ய திட்டமிட்டு அமெரிக்கா தோல்வியை தழுவியது.

பிடல் காஸ்ட்ரோவுக்கு விசம் கொடுப்பது, இரசாயனம் தெளிப்பது, குண்டு போடுவது, துப்பாக்கியால் சுட்டுக் கொல்வது, சுருட்டில் விசம் தடவுவது, விபத்து ஏற்படுத்துவது, விச மாத்திரை கொடுப்பது என பல முயற்சிகளை மேற்கொண்டது. பிடல் காஸ்ட்ரோவை கியூபாவில் உள்ள மாஃபியா கும்பலை வைத்து கொல்ல அமெரிக்கா முடிவு செய்தது. ஆனால் அந்த முயற்சியும் தோல்வியில் முடிந்தது.

இந்நிலையில், கியூபாவுடன் நட்பு பாராட்டுவது என்று அமெரிக்காவின் தற்போதைய ஜனாதிபதி பராக் ஒபாமா முடிவு செய்து அதற்கான முயற்சிகளையும் செய்தார். 54 ஆண்டுகள் கழித்து அமெரிக்காவில் கியூபா நாட்டு தூதரகம் திறக்கப்பட்டது. அதேபோன்று கியூபாவில் அமெரிக்க தூதரகம் திறக்கப்பட்டது. இதை தொடர்ந்து அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கடந்த மார்ச் மாதம் கியூபாவுக்கு சென்றார்.

கியூபாவின் முன்னாள் ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோவின் தம்பியான தற்போதைய ஜனாதிபதி ரவுல் காஸ்ட்ரோவை, ஒபாமா சந்தித்தார். இந்தச் சந்திப்பின்போது இருநாட்டு நல்லுறவு உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

உடல்நலம் குன்றிய நிலையில் சக்கர நாற்காலியின் துணையின்றி நடமாட முடியாத நிலையில் இருந்த கியூபா கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான பிடல் காஸ்ட்ரோ - ஒபாமாவை சந்தித்துப் பேச மறுத்து விட்டார்.


13-8-1962 அன்று பிறந்தவர் தான் பிடல் காஸ்ட்ரோ. செல்வச் செழிப்பான குடும்பத்தில் பிறந்திருந்தாலும் கியூபா மக்களின் அடிமை நிலையைக் கண்டு தனது வசதியான வாழ்க்கையை விட்டுவிட்டு மக்களுக்காக அமெரிக்கா என்னும் மிகப்பெரிய ஏகாதிபத்திய நாட்டை எதிர்த்துப் போராட ஆரம்பித்தார்.

உலகில் உள்ள அனைத்து நாடுகளையும் தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள அமெரிக்கா முடிவு செய்தது. ஆனால், கியூபாவில் அமெரிக்காவின் ஆதிக்கத்தை நிலைநாட்ட முடியவில்லை. அதற்கு முட்டுக்கட்டையாக இருந்தவர்தான் பிடல் காஸ்ட்ரோ.

சுமார் 600 இற்கும் மேற்பட்ட கொலை முயற்சிகளில் இருந்து தப்பி அமெரிக்காவிற்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய பிடல் காஸ்ட்ரோ நேற்று தனது 90 ஆவது வயதில் காலமானதாக அந்நாட்டின் அரசு தொலைக்காட்சிகள் செய்தி வெளியிட்டுள்ளன.

யாருக்கும் தலைவணங்காத அந்த தன்மானத் தலைவனின் மரணம் தொடர்பான செய்தி உலகம் முழுவதும் வாழும் பலரை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. (இ-7-10)

## 20 ஆம் நூற்றாண்டின் மாமனிதர் பிடல் காஸ்ட்ரோ பிரதமர் மோடி இரங்கல்



கியூபாவில் ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலம் பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் பதவி வகித்தவர் பிடல் காஸ்ட்ரோ. இவர் வயோதிபம் காரணமாக கடந்த 2008 ஆம் ஆண்டு ஆட்சியை ஒப்படைத்து விட்டு ஓய்வு எடுத்து வந்தார். பெரும்பாலும் பொது நிகழ்ச்சிகள் எதிலும் தோன்றுவதில்லை.

உடல் நலக்குறைவினால் பாதிக்கப்பட்டிருந்த பிடல் காஸ்ட்ரோ நேற்றுக் காலமானார்.

90 வயதான பிடல் காஸ்ட்ரோ உடல் நலக்குறைவால் மரணம் அடைந்ததாக அவரது சகோதரரும் ஜனாதிபதியுமான ராவுல் காஸ்ட்ரோ தெரிவித்தார்.

பிடல் காஸ்ட்ரோவின் மறைவுக்கு உலகம் முழுவதும் உள்ள தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் பிடல் காஸ்ட்ரோ மறைவுக்கு தனது டுவிட்டரில் இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளார்.

தனது டுவிட்டரில் பிரதமர் கூறியிருப்பதாவது, "பிடல் காஸ்ட்ரோவை இழந்து வாடும்கியூபா அரசுக்கும் அந்நாட்டு மக்களுக்கும்ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன். அவரது ஆன்மா சாந்தி அடைய பிரார்த்திக்கிறேன். இந்த துக்கமான நேரத்தில் கியூபா அரசுக்கும் அந்நாட்டு மக்களுக்கும் இந்தியா துணை நிற்கும். 20 ஆம் நூற்றாண்டின் மாமனிதர்களில் பிடல் காஸ்ட்ரோவும் ஒருவர். இந்தியா தனது உற்ற நண்பனை இழந்து தவிக்கிறது" இவ்வாறு அவர் தெரிவித்தார். (இ-7-10)

## ஓட்டோ புயலுக்கு 9பேர் பலியாகினர்

நிகாராகுவா மற்றும் கோஸ்ட்டரிக்காவை தாக்கிய ஓட்டோ புயலுக்கு 9 பேர் பலியானதாகவும் பல்லாயிரக் கணக்கானவர்கள் வீடுகளை இழந்து தவிப்பதாகவும் தெரியவந்துள்ளது.

பசுபிக் பெருங்கடல் பகுதியை ஒட்டியுள்ள மத்திய அமெரிக்க கண்டத்தில் அமைந்துள்ள நிகாராகுவா மற்றும் கோஸ்ட்டரிக்காவை நேற்று முன்தினம் அதிவேக 'ஓட்டோ' புயல் தாக்கியது, இரண்டாம் எண் எச்சரிக்கையுடன் அடையாளம் காணப்பட்டு பசுபிக் பெருங்கடல் பகுதியை அச்சுறுத்தி வந்த 'ஓட்டோ' புயல் சுமார் 110 கிலோ மீற்றர் வேகத்தில் நேற்று முன் தினம் கரையைக் கடந்தது.

முன்னதாக.இதே பசுபிக் பெருங் கடல்பகுதியை 7ரிக்டர்அளவிலான நில நடுக்கமும் அதைத்தொடர்ந்து சுனாமிப் பேரலைகளும் தாக்கியிருந்தன.

இந்நிலையில், கோஸ்ட்டரிக்கா நாட்டின் கடலோரப் பகுதிகளில் புயல் மற்றும் மழையைத்தொடர்ந்து சரிந்து விழுந்த மரங்களால் பல கட்டடங்கள் சேதம் அடைந்ததாகவும் புயல் மற்றும் மழைசார்ந்த விபத்துகளில் 9 இற்கும் மேற்பட்டவர்கள் பலியானதாகவும் தற்காலிக முகாம்களில் தங்கியுள்ள பல்லாயிரக் கணக்கான மக்கள் கடும் அவதிக்குள்ளாகி இருப்பதாகவும்அமெரிக்க ஊடகங்கள்செய்திவெளியிட்டுள்ளன.(இ-7-10)

## ரயில்கள் மோதிய விபத்தில் 31 பேர் பரிதாபமாகப் பலி!



ஈரானில் நேற்று முன் தினம் ரயில்கள் மோதிய விபத்தில் உயிரிழப்பு 31 ஆக அதிகரித் துள்ளது. பலர் படுகாயங் களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஈரான் நாட்டின் செம் னான் மாகாணம் ஹாப்ட் - கான் ரயில் நிலையம் வழியாக சென்ற இரண்டு ரயில்கள் உள்ளூர் நேரப் படி நேற்று முன்தினம் காலை 7.50 மணியளவில் மோதி விபத்துக்குள்ளாகின. இதில், மோதிய வேகத்தில் இரு ரயில் களின் இயந்திரப் பெட்டிகள் மற்றும் சில பயணிகள் பெட்டிகள் தடம் புரண்டு தீப்பிடித்து எரிந்தன.

இந்த கோர விபத்தில் 15 இற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்ததாகவும், பலர் காயம் அடைந்ததாகவும் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

மேலும் ஏராளமானோர் படுகாயங்களுடன் வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக இருந்தது.

இந்நிலையில், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மேலும் சிலர் உயிரிழந்ததைடுத்து பலி எண்ணிக்கை 31 ஆக உயர்ந்துள்ளது.

31 பேர் பலியானதை மாகாண ஆளுநர் முகமது ரேசா கப்பாஸ் உறுதி செய்தார். மேலும் 70இற்கும் மேற்பட்டோர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7-10)

## மாவீரர் துயிலும் இல்லத்தில்

# உறவினர்களுக்கு விளக்கேற்றி அஞ்சலி செலுத்த முடியவில்லை

### புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளியொருவர் தீ மூட்டி தற்கொலை

(மல்லாவி)

மாவீரர்களான தனது உறவினர்களுக்கு விசுவமடு தேராவிலில் உள்ள மாவீரர் துயிலும் இல்லத்தில் விளக்கேற்றி அஞ்சலி செய்ய முடியவில்லை என்று ஊர்மக்கள், உறவினர்கள் ஆகியோரிடம் கூறி மனவிரக்தியுற்ற நிலையில் புனர்வாழ்வு பெற்று சமூகமயப்படுத்தப்பட்ட முன்னாள் போராளி ஒருவர் தனக்குத் தானே மண்ணெண்ணெய் ஊற்றி தீ மூட்டிய நிலையில் உறவினர்களால் மீட்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் மரணமடைந்தார்.

இச் சம்பவம் கடந்த 24 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் தனக்குத்தானே தீ மூட்டிய நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் மரணமடைந்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

தமிமீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சாள்ஸ் அன்ரனி படைப் பிரிவில் இருந்த நிலையில் கடந்த 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின் போது இராணுவத்தினரிடம் சரணடைந்து புனர்வாழ்வு பெற்ற நிலையில் சமூகமயப் படுத்தப்பட்ட மூங்கிலாறு உடையார் கட்டு கிராமத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான சிவசுப்பிரமணியம் சிவசீலன் (வயது - 45) என்ற முன்னாள் போராளியே தனக்குத் தானே தீ மூட்டி தற்கொலை செய்து கொண்டவராவார்.

இவரது சடலம் கிளிநொச்சி மாவட்ட சட்ட வைத்திய அதிகாரியின் உடற் கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப் பட்டுள்ளது. (2-15)




## பொலிஸ் நடமாடும் சேவை

# இறுதி நாள் நிகழ்வு இன்று

### மு/வேணாவில் அ.த.க. பாடசாலையில்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்திற்குட்பட்ட புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தின் கீழ் நடைபெற்று வரும் தேசிய பொலிஸ் மாத நடமாடும் சேவையின் (ஒக்டோபர் 30 தொடக்கம் நவம்பர் 30 வரை) இறுதி நாள் நிகழ்வாக நடமாடும் வைத்திய சிகிச்சை முகாம் உட்பட பல்வேறு தேவைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் புதுக்குடியிருப்பில் உள்ள மு/வேணாவில் அ.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

ஒரு மாத காலமாக நடைபெற்று வந்த தேசிய பொலிஸ் மாத நடமாடும் சேவையின் இறுதி நிகழ்வான வைத்திய சிகிச்சை முகாம், இரத்ததானம், பொலிஸின் பல்வேறுபட்ட சேவைகள், வீதி விபத்து தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்குகள், சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குதல், மென்பந்து துடுப்பாட்டப்போட்டி என பல்வேறுபட்ட நிகழ்வுகள் நடைபெற இருப்பதால் பொது மக்கள் இதில் . கலந்து கொண்டு பயன்பெறுமாறு புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

## 92 இலட்சம் ரூபா நிதியுதவியில்

# அமைக்கப்பட்ட உரக்களஞ்சியங்கள் ஊடாக முதல் கட்ட உர விநியோகம் நாளை ஆரம்பம்

### ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவிப்பு

(மல்லாவி)

யு.என்.ஹபிராட் நிறுவனத்தின் நிதியான 92 இலட்சம் ரூபா நிதியுதவியுடன் ஒலுமடு கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட மாங்குளம், திருமுறிகண்டி, புலுமச்சி நாத குளம் ஆகிய இடங்களில் புதிதாக அமைக்கப்பட்ட உரக் களஞ்சியங்கள் ஊடாக முதல் கட்ட உர விநியோகம் ஒலுமடு கமநல சேவை நிலையத்தில் நடைபெறவுள்ளதாக ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

விவசர்யிகளின் நலன் கருதி விவசாயிகளின் வாழ்விடங்களுக்கு அண்மையாக மூன்று இடங்களில் உரக் களஞ்சியங்கள் அமைக்கப் பட்டுள்ளன.


இக்களஞ்சியங்கள் ஊடாக முதலாம் கட்ட உர விநியோகம் நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை திருமுறிகண்டி உரக் களஞ்சியத்தில் நடைபெறும்.

எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை புலுமச்சிநாதகுளம் உரக் களஞ்சியத்திலும் மறுநாள் புதன் கிழமை ஏ-9 வீதி மாங்குளம் நகரப் பகுதியிலுள்ள உரக் களஞ்சியத்தில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரையும் உர விநியோகம் நடைபெறும்.

இந்த உரக் களஞ்சியங்களின் ஊடாக நிர்ணயிக்கப் பட்ட விலையில் அனைத்து வரையான உரங்களும் விநியோகம் செய்யப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

## வீர மறவர்கள் துயில் கொள்ளும் வன்னிவிளாங்குளத்திலும் துப்புரவு பணி

### கல்லறைகள் இருந்த இடங்கள் அடையாளம்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்திலும் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா, வடகக்கு மாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் வ.கமலேஸ்வரன் ஆகியோரும் இந்த சிரமதானப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

மாவீரர் துயிலும் இல்ல பகுதியில் ஒன்றுகூடிய மக்கள் பற்றைக்களை அகற்றி மாவீரர்களுடைய கல்லறைகள் இருந்த இடங்களை அடையாளப்படுத்தி வருகினறனர்.

கிளிநொச்சி, முழங்காவில் ஆகிய இடங்களில் மாவீரர் துயிலும் இல்லங்கள் இரண்டாவது நாளான நேற்றும் சிரமதானப் பணிகள் இடம்பெற்று வரும் நிலையில் அதனை தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களை துப்புரவு செய்யும் பணிகளில் பொதுமக்கள் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-281)

#### முந்திச் செல்லும் போட்டியில்

# தனியார் பேருந்து விபத்துக்குள்ளானது பயணிகள் மயிரிழையில் உயிர் தப்பினர்

### மன்னார் பிரதான பாலத்தில் சம்பவம்

(மன்னார்)

யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னாருக்கு பயணிகளை ஏற்றிக்கொண்டு பயணித்த தனியார் மற்றும் அரச பேருநதுகள் மன்னார் பிரதான பாலத்தில் போட்டி போட்டு ஓடியதன் காரணமாக ஏற்பட்ட பாரிய விபத்தின் போது தனியார் பேருந்து பாரிய வபத்திற்கு உள்ளாகிய நிலையில் பயணிகள் சிறு காயங்களுடன் மயிரிழையில் உயர் தப்பினர்.

இவ் விபத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 7.05 மணிக்கு மன்னார் பிரதான பாலத்தில் இடம் பெற்றுள்ளது.

குறித்த விபத்து தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.50 மணியளவில் தனியார் பேருந்தும் அதனைத் தொடர்ந்து சுமார் 40 நிமிட இடைவெளியில் அரச பேருந்தும் 5.30 மணியளவில் பயணிகளை ஏற்றிக்கொண்டு மன்னார் நோக்கி பயணித்துள்ளன.

குறித்த பேருந்துகள் இரண்டும் சில மணி நேரங்கள் ஒன்றை ஒன்று முந்திக் கொண்டு போட்டி போட்டு மன்னாரை நோக்கிச் சென்று கொண்டிருந்தன.

குறிப்பாக பின்னால் பயணித்த அரச பேருந்து முன்னால் சென்ற தனியார் பேருந்தை முந்தியடித்துக் கொண்டு செல்ல முற்பட்ட வேளை போட்டி ஏற்பட்டது.

தனியார் பேருந்தில் சுமார 7 பயணிகள் வரை யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னார் நோக்கி பயணித்துள்ளனர்.

இதன்போது அரச மற்றும் தனியார் பேருந்துகள் பாதையை விடாது ஒன்றை ஒன்று முந்திக் கொண்டு செல்ல முற்பட்ட போது இரவு 7.05 மணியளவில் மன்னார் பிரதான பாலத்தில் தனியார் பேருந்து பயணிகளுடன் பாதையை விட்டு விலகி விபத்திற்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்தின் போது தனியார் பேருந்தில் பயணித்த பயணி ஒருவரும் குறித்த பேருந்தின் நடத்துநரும் காயம் அடைந்தனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த மன்னார் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாகவும் பயணிகளின் பிரச்சினைகள் தொடர்பாகவும் பல முறைப்பாடுகள் வடக்கு மாகாண வீதி போக்குவரத்து அமைச்சரிடம் முன்வைக்கப்பட்ட போதும், அதனைக் கருத்தில் கொள்ளாது சுயநலத்துடன் நடந்து கொள்வதாகவும் பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர். (2-9)

# பிரபாகரனின் பிறந்த தினத்தை முன்னிட்டு புகைப்படம் தாங்கிய துண்டுப்பிரசுரங்கள்




(மல்லாவி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்த நாளையொட்டி கிளிநொச்சியில் பல பிரதேசங்களில் துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

விசுவமடுவை அண்டிய பகுதியில் இரவு துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டுள்ளன. பிரபாகரனின் புகைப்படம் தாங்கிய துண்டுப் பிரசுரங்கள் இவ்வாறு வீசப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (2-15)

மனிதன் செய்யும் பெருமையும் சிறுமையும் அவனவன் இதயத்துக்குள் இருக்கின்றன.
*– சீனப் பழமொழி*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கல்லறையிலும் நிம்மதியாய் உறங்கவிடாக் கயவர் கொண்ட நாடு

இன்று மாவீரர் நாள். தமிழ் மக்களின் விடுதலைக்காக தம் அருமந்த உயிரைத் தியாகம் செய்தவர்களை நினைவுகூருகின்ற நாள்.

மாவீரர் துயிலும் இல்லங்களில் விளக்கேற்றி அவர்களை நினைவுகூருகின்ற அந்த நாளுக்கும் தடை விதிக்கப்பட்டது.

மாவீரர்கள் துயிலும் இல்லங்களைத் தகர்த்தெறிந்து அந்த நினைவுகளுக்கே இடமிருக்கக் கூடாது என்று நினைத்த கயவர்கள் வாழும் இந்த நாட்டில் கல்லறையில் கூட நிம்மதியாக இருக்க முடியாது என்றாயிற்று.

துட்டகைமுனுவின் பரம்பரை என்று மார்தட்டுகின்றவர்கள் எல்லாளன் மன்னனை வணங்கிச் செல்ல வேண்டும் என்ற கட்டளை பிறப்பித்த துட்டகைமுனுவின் பரம்பரையாயின் மாவீரர் துயிலும் கல்லறைகளை உடைத்தெறிந்தது ஏன்? போரில் விழுப்புண் அடைந்து உயிர் துறந்தவனை மாவீரனாகப் போற்றும் பண்பாடு உலகம் முழுமைக்கும் உரியது. எனினும் அந்தப் பண்பாடு இலங்கையில் தமிழர்களுக்கு மட்டும் மறுக்கப்பட்டது ஏன்? என்று கேட்பதற்கு இன்று யாருமே நமக்கு இல்லை என்றாயிற்று.

தமிழர்கள் தங்கள் உரிமைக்காகப் போராட வேண்டிய சூழ்நிலையைத் தோற்றுவித்தவர்கள் யார் என்பதை மறந்து அல்லது அதுபற்றி அறிந்து கொள்ளாமல் தமிழ் இளைஞர்கள் அரசுக்கு எதிராக ஆயுதம் ஏந்தினார்கள் என்று கூறுவது எந்தவகையிலும் நியாயமாகாது.

காலத்துக்குக் காலம் இந்த நாட்டில் தமிழ் மக்கள் பேரினவாதிகளால் கொன்றொழிக்கப்பட்டனர். தமிழ் அரசியல் தலைவர்கள் இதுபற்றி இலங்கைப் பாராளுமன்றத்தில் குரல் கொடுத்தனர். அகிம்சை வழியில் போராட்டம் நடத்தினர்.

தந்தை செல்வநாயகம் அவர்கள் இலங்கைப் பாராளுமன்றத்தில் மிகத் தெளிவாகக் கூறினார். தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணத் தவறினால் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடுவார்கள் என்று தந்தை செல்வநாயகத்தின் தீர்க்க தரிசனத்தை அன்றைய சிங்கள ஆட்சியாளர்கள் ஏற்றிருந்தால் அதைக் கவனத்தில் எடுத்து சீர்படுத்தியிருந்தால் இந்த நாட்டில் மிகப்பெரிய மனித அழிவுகள் இடம்பெறாமல் இருந்திருக்கும்.

நாட்டில் நடந்த யுத்தத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் உயிரிழக்க வேண்டியதாயிற்று என்ற நிலைமை ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணம் சிங்கள ஆட்சியாளர்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை.

மாவீரர்கள் விடுதலைப் புலிகள் என்று கூறுவோர் மாவீரர்களை – விடுதலைப் புலிகளை உருவாக்கியவர்கள் சிங்கள ஆட்சியாளர்கள் என்பதை மறந்து விடக்கூடாது.

விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் அவர்களுடன் பேசி வடக்கையும் கிழக்கையும் இணைக்கவும் பொலிஸ், காணி அதிகாரங்களைத் தரவும் தயாராக இருந்த இலங்கை ஆட்சியாளர்கள் இன்று அதனை வழங்க மறுக்கின்றனர்.

இப்போது விடுதலைப் புலிகள் இல்லை. அப்படியானால் ஏன்? தமிழ் மக்களுக்கு உரிமை கொடுக்க வேண்டும் என்று இந்த நாட்டை ஆட்சி செய்தவர்கள் கேட்கிறார்கள் என்றால்,

தமிழர்கள் ஆயுதம் ஏந்தினால்தான் நாங்கள் உரிமை கொடுப்போம் என்ற மனநிலை பேரினவாதிகளிடம் இன்னமும் இருப்பது உறுதியாகிறதல்லவா?

தங்களைத் திருத்தி இந்த நாட்டில் இன ஒற்றுமையை ஏற்படுத்த விரும்பாத பேரினவாத ஆட்சியாளர்களின் கடைகெட்ட வேலைதான் மாவீரர் துயிலும் இல்லங்களைத் தகர்த்தெறிந்த அநியாயம்.

மாவீரர்கள் கல்லறையில் இல்லை. தமிழ் மக்களின் இதயவறைகளில் – ஒவ்வொரு மூச்சிலும் வாழ்கின்றார்கள் என்பதே உண்மை.

இதை உணராதவர் தியாகம் உணராதவர்கள் என்பதே பொருளாகும்.

## கியூபாவின் முன்னாள் ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ ஒரு அடையாளச் சின்னத்தின் தலைவர்-ஜனாதிபதி

கியூபா நாட்டின் முன்னாள் ஜனாதிபதியான புரட்சியாளர் பிடல் காஸ்ட்ரோ ஒரு அடையாளச் சின்னத்தின் தலைவர் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இரங்கல செய்தி வெளியிட்டுள் ளார்.

கியூபா நாட்டின் முன்னாள் ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ தனது 90ஆவது வயதில் காலமானார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தன்னுடைய இந்த இரங்கலை தனது உத்தியோகபூர்வ வலைத்தளமான டுவிட்டர் கணக்கில் பதிவேற் றம் செய்துள்ளார்.

உலக புரட்சியின் சின்னமாக திகழ்ந்த தலைவர் பிடல் காஸ்ட்ரோவின் ஆத்ம சாந்திக்காக தான் பிரார்த்திப்பதாக மைத்திரி தனது இரங்கலை வெளியிட்டுள்ளார்.

சமீபத்தில் அவர் உடல் நலக்குறைவினால் பாதிக்கப்பட்டு இருந்தார், இந்த நிலையிலேயே பிடல் காஸ்ட்ரோ காலமானார்.

கடந்த 2008ஆம் ஆண்டு பிடல் காஸ்ட்ரோ, தனது பதவியில் இருந்து விலகினார்.

தனது நாட்டுக்காகவும் மனித இனத்துக்காகவும் இந்தப் பூமிக்காகவும் கியூபா நாட்டின் ஒவ்வொருவரும் தமது கடைசி மூச்சு இருக்கும் வரை போராட வேண்டும் எனக் கூறிய மாமனிதர் தான் பிடல் காஸ்ட்ரோ என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## காட்டுப்பகுதியில் சடலம் ஒன்றின் எச்சங்கள் மீட்பு

புத்தளம் 2ஆம் கட்டை மதுரகம பிரதேசத்தின் காட்டுப் பகுதியிலிருந்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சடலம் ஒன்றின் எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் அவசர பிரிவுக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வழங்கப்பட்ட தகவலின் அடிபபடையில், ஸ்தலத்துக்கு விரைந்த புத்தளம் பொலிஸார், குறித்த சடலத்தின் எச்சங்களை மீட்டுள்ளனர்.

குறித்த சடலத்தின் எச்சங்கள் அடையாளம் காணமுடியாதவாறு உருக்குலைந்துள்ளதாகத் தெரிவித்த புத்தளம் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருவதாக தெரிவித்தனர். (இ)

## அண்ணாவை வீட்டுக்கு அனுப்புவேன்; தம்பி சூளுரை

ஒன்றிணைந்த எதிர்க் கட்சியைச் சேர்ந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எம்.பியான மகிந்தானந்த அளுத்கமகேவை எதிர்வரும் தேர்தலில் வீட்டுக்கு அனுப்புவேன் என்று அவரது சகோதரரான ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட எம்.பியான ஆனந்த அளுத்கமகே நேற்று முனதினம் வெள்ளிக்கிழமை சபையில் சூளுரைத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற காணி அமைச்சு மீதான வரவு-செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே ஆனந்த அளுத்கமகே இந்த விடயத்தை தெரிவித்தார்.

எதிர்வரும் தேர்தல் தொகுதிவாரி முறையில் நடைபெறவிருக்கின்றமையால் நாவலப்பிட்டிய தொகுதியில் மகிந்தானந்த அளுத்கமகேவை தாம் தோற்கடிக்க செயற்படுவேன் என்று அவர் தெரிவித்தார்.

"கடந்த பொதுத் தேர்தலில் 12 ஆயிரம் மேலதிக வாககுகளினால் நான் வெற்றி பெற்றேன். எதிர்வரும் தேர்தல்தொகுதிவாரிமுறைமையின் கழ் நடைபெறவுள்ளது. ஆகவே, மகிந்தானந்தவை தோற்கடித்து வீட்டுக்கு அனுப்புவேன். அவர் மகிநத ராஜபக்ஷ ஆட்சியில் பல மோசடிகளில் ஈடுபட்டார். அவர் திருடர் என அவரது மனைவியே பொலிஸாரிடம் முறைபபாடு செய்துள்ளார் என்றும் அவர தெரிவித்தார். (இ-7-10)

## இரண்டு அல்லது அதற்கும் கூடுதலான மாகாணங்களை ஒன்றிணைப்பதற்கான பிரேரணை

மாகாண மக்களின் விருப்பத்தின் மீதான கருத்துக் கணிப்பு ஒன்றின் அடிப்படையில் அம் மாகாணங்கள் இரண்டையோ அல்லது அதற்கும் கூடுதலானவற்றையோ ஒன்றிணைத்து ஒரே நிர்வாக அலகாக செயற்பட அனுமதிப்பது பற்றிய பிரேரணை ஒன்றினை பாராளுமன்ற உப செயற்குழு ஒன்று முன்வைத்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளுறுப்பினர்களின் கலந்தாலோசனையுடன் புதிய அரசியலமைப்பை உருவாக்கும் நோக்கத்தின் பெயரில் ஆலோசனை வழங்கவென நியமிக்கப்பட்ட 6 செயற்குழுக்களும் தமது ஆலோசனைகளை அறிக்கைகளாக நவம்பர் 19 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தன.

இவ்விதமான குழுவொன்று சம்பந்தப்படுகின்ற மாகாணங்களைச் சேர்ந்த மக்களது சம்மதத்துடன் இரண்டோ அல்லது அதற்கும் கூடுதலான மாகாணங்களையோ சேர்ந்திணைத்து ஒரே நிர்வாக அலகாகச் செயற்படுவதற்கு அனுமதிக்கும் ஏற் பாடுகளையும் உள்ளடக்கியதாக ஆலோசனைகள் இருத்தல் வேண்டுமென்றும் பிரேரித்துள்ளது. மாகாண ஆளுநர்களது அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டுமென்றும் அது பிரேரித்துள்ளது.

முன்வைக்கப்பட்ட சிபார்சுகளில் ஒன்று ஜனாதிபதி அதிகாரங்கள் ஒழிக்கப்படுவது பற்றி வலியுறுத்திக் கூறியுள்ளது.

இந்த விதத்தில் மாகாணங்களுக்கான ஆளுநர்களை நியமிக்கும் அதிகாரம் பிரதமரிடைமே இருக்குமென்றும் இவ் விதமான பிரேரணையொன்று நிறைவேற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுமென்றால் முதலமைச்சர்களது ஆளுமைகூடுதல் சுதந்திரமான விதத்தில் வலுப்படுத்தப்படுவதாய் அமையும்.

இப்போது ஆளுநர்கள் ஜனாதிபதியினாலேயே நியமிக்கப்படுகின்றனர் என்பதுடன் அவர்களது மாகாண சபையில் நிறைவேற்றப்படும் நிலையியற் கட்டளைகளை அங்கீகரிக்கும் அதிகாரங்களும் அவர்களுக்கு உண்டு.

தற்போதைய அரசியலமைப்பின்கீழ் மத்திய மற்றும் மாகாண அரசுகளின் ஒருமித்த அவதானத்தின் கீழ் கொண்டிருக்கும் குறிப்பான சில விடயங்களுக்கான அட்டவணை ஒழிக்கப்பட வேண்டுமெனவும் இக் குழு சிபார்சு செய்கின்றது. கல்வி – சுகாதாரம் – சுற்றாடல் போன்றவை இவற்றுள் சிலவாகும்.

வருகின்ற ஜனவரி 2 ஆவது வாரத்தில் அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் பற்றி பாராளுமன்றத்தில் மூன்று நாள் விவாதமொன்று இடம்பெறவுள்ளது.

## தெற்காசிய தொழில்நுட்ப, மருத்துவக் கல்வி ஸ்தாபனத்தின் (SAITM) தனியார் கல்வித் தகைமைகள் மட்டில் அரசாங்கத்தின் கொள்கை என்ன?

(கொழும்பு)

மேற்படி மருத்துவக் கல்வி ஸ்தாபனத்தினால் வழங்கப்படும் மருத்துவப் பட்டப்படிப்பு தகைமைகள் அங்கீகரிக்கப்படமாட்டாதென்ற இலங்கை மருத்துவ சபையின் தீர்மானத்தையடுத்து SAITM கல்வி ஸ்தாபனத்தைச் சேர்ந்த மருத்துவ மாணவர்கள் இலங்கை உச்ச நீதிமனறத்தில் மருத்துவ சபைத தீர்மானத்திற்கெதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த விதத்தில் இலஙகை உயர்கல்வி மட்டில் தமது முதலீடுகளை ஆரம்பிக்க ஆர்வங்கொண்டுள்ள அக்கல்வி ஸ்தாபனத்தைச் சேர்ந்த மேலும் ஐந்து தனியார் மருத்துவக் கல்லூரிகள் மேற்படி உச்சநீதிமன்ற தீர்ப்பினை எதிர்பார்த்து காத்திருப்பதாக இலங்கை உயர்கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல நேற்றுக் கூறியிருந்தார். இலங்கை அரச பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்படி SAITM அமைப்பின் கீழ் இயங்கும் தனியார் கல்லூரிகளுக்கு இங்கு இயங்குவதற்கான அனுமதி அளிக்கப்படலாம் என பாராளுமன்ற செயற்குழுவொன்று பரிந்துரை செய்திருப்பதாக தெரிகிறது.

ஆயினும் ஜே.வி.பி. போன்ற அமைப்புக்கள் இவ்வித தனியார் கல்லூரிகள் அமைக்கப்படுவதற்கு தொடர்ந்தும் தமது எதிர்ப்பினை தெரிவித்து வருகின்றன.

## மின் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநி யோக மார்க்கங்களின் கட்ட மைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திஙகட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 6 மணி வரை யாழ். பிரதேசத்தில் ஊரி, களபூமி, CTB காரைநகர், காரைநகர் கடற்படைமுகாம், தோப்புக்காடு ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் குருமன்காடு பிரதேசம், நேரியகுளத்திலிருந்து செட்டிகுளம்வரை, செட்டிகுளம்வைத்தியசாலை, செட்டிகுளம் இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், வலயம் 6 ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும். (இ-9)

### வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2016

"பூட்டன் நாட்டிய பனைமரம் காய்க்கிறது
பாட்டன் நட்ட பலா மரம் பூக்கிறது
வெட்டி எரித்ததன்றி நீயென்ன நிழல் வைத்தாய்
மாசடையாச் சூழல் சாவடையா வாழல்!"
*–கவிஞர் புதுவை இராசரத்தினதுரை*

### பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்

JSAC
யாழ். சமூக செயற்பாட்டு மையம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
16
2016

வறுமையும் வன்முறையும் தாக்குவது பெண்களையே
வறுமையை ஒழிப்போம். வன்முறையை தடுப்போம்.
சமத்துவமான சமுதாயத்திற்காய் ஒன்றுபட்டு உழைப்போம்

# சாய்னா நேவாலை முந்தினார் பி.வி.சிந்து



மகளிர் பட்மின்டன் ஒற்றையர் பிரிவு தரவரிசையில் இந்தியாவின் சாய்னா நேவாலை, சக வீராங்கனை பி.வி.சிந்து முந்தியுள்ளார்.

சமீபத்தில் நடந்த சீன ஓபனில், சிந்து முதல் முறையாக சுப்பர் சீரிஸ் அந்தஸ்து சம்பியன் பட்டத்தை கைப்பற்றி அசத்தினார். இந்த வெற்றியால், நேற்று முன்தினம் வெளியான ஒற்றையர் பிரிவு தர வரிசை பட்டியலில் அவர் 2 இடம் முன்னேறி 9 ஆவது இடத்தை பிடித்தார் (38,490 புள்ளி). காயம் காரணமாக நீண்ட ஓய்வுக்குப் பிறகு விளையாடத் தொடங்கியிருக்கும் சாய்னா (38, 080 புள்ளி) 5 இடம் பின்தங்கி 11 ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

இவர்கள் ஆண்டு இறுதி சுப்பர் சீரிஸ் பைனல்சுக்கு தகுதி பெறுவது, ஹொங்காங் ஓபன் செயற்பாட்டை பொறுத்து அமையும். ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் அஜய் ஜெயராம் 4 இடம் முன்னேறி 19 ஆவது இடத்தையும், பிரனாய் 2 இடம் முன்னேறி 25 ஆவது இடத்தையும் பிடித்துள்ள னர். ஸ்ரீகாந்த் 12 ஆவது இடத்தில் உள்ளார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து; புனே அணியை வென்றது கேரளா




இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து போட்டியில நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற ஆட்டத்தில் கேரளா பிளாஸ்டர்ஸ் அணி புனேயை வீழ்த்தி 18 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்துக்கு முன்னேறியது.


3 ஆவது இந்தியன் சுப்பர் லீக் காற்பந்து தொடரில் கொச்சியில் நடந்த 48ஆவது லீக் ஆட்டத்தில் கேரளா பிளாஸ்ட்ரஸ்- புனே சிட்டி அணிகள் மோதின. 7ஆவது நிமிடத்திலேயே கேரள அணி கோல் அடித்து குழுமியிருந்த 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரசிகர்களை உற்சாகத்தில் ஆழ்த்தியது. டக்கென்ஸ் நஜோன் இந்த கோலை அடித்தார.




பிற்பாதியில் 57 ஆவது நிமிடத்தில் சி.கே.வினீத் தட்டிக்கொடுத்த பந்தை, கேரள கப்டன் ஆரோன் ஹியூஸ் தலையால் முட்டி கோலாக்கினார். பதில் கோல் திருப்ப போராடிய புனே அணி கடைசி நிமிடத்தல் (90-வது நிமிடம்) ஒரு கோல் போட்டது. 'பிரீ கிக்' வாய்ப்பில் அந்த அணியின் அனிபால் ரோட்ரிகஸ் இந்த கோலை அடித்தார். அதனால் எந்த பிரயோசனமும் இல்லை.

முடிவில் கேரளா பிளாஸ்டர்ஸ் அணி 2-1 என்ற கோல் கணக்கில் புனேயை வீழ்த்தி 18 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்துக்கு முன்னேறியது. சொந்த ஊரில் கேரள அணி தொடர்ச்சியாக பெற்ற 4 ஆவது வெற்றி இதுவாகும். (க)

# வடமாகாண கபடி போட்டிக்கு வெற்றிக்கிண்ணங்கள் அன்பளிப்பு



மன்னார் பெரியகமம் எவகிரீன் விளையாட்டுக்கழகம் நடத்தவுள்ள வடமாகாணம் தழுவியதான கழகங்களுக்கு இடையிலான கபடி சுற்றுப்போட்டிக்கு வழங்கப்படவுள்ள வெற்றிக்கேடயங்களை வடக்கு மாகாண கிராமஅபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் தனது 2016 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான நன்கொடை (CBG) நிதியில் இருந்து ஒரு தொகை நிதியை ஒதுக்கி குறித்த சுற்றுப் போட்டிக்கான முதல் மூன்று மற்றும் விசேட வெற்றிக்கிண்ணங்களை வழங்கியுள்ளார். கொள்வனவு செய்து குறித்த கழகத்தின் பிரதிநிதிகளிடம் கையளிக்கும் நிகழ்வு 25-11-2016 வெள்ளி பிற்பகல 1:30 மணியளவில் மன்னாரில் உள்ள அமைச்சரது உப அலுவலகத்தில் இடம்பெற்றதைப் படத்தில் காணலாம் (க-281)

# கொம்மாந்தறை இளைஞர் வி.க. இறுதிப்போட்டிக்கு தெரிவாகியது



கழுகுகள் வி.கழகம் நடத்தும் தெரிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையிலான மென்பந்து சுற்றுப்போட்டியில் குழு A இல் அனைத்துப் போட்டிகளிலும் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு நுழைந்தது கொம்மாந்தறை இளைஞர் வி.கழகம். அண்மையில் நடைபெற்ற முதலாவது போட்டியில் கழுகுகள் விளையாட்டுக்கழகத்தை அபாரமாக வெற்றி கொண்டும் இரண்டாவது போட்டியில் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது கொம்மாந்தறை இளைஞர் வி.கழகம். (க)

# மீண்டும் தந்தையானார் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரீசாந்த்



இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வேகப்பந்து வீச்சாளராக வலம் வந்து கொண்டிருந்தார் ஸ்ரீசாந்த்.

2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ணம் வென்ற இந்திய அணியிலும் இடம்பெற்றிருந்தார். இந்த நிலையில் 2013 ஆம் ஆண்டு ஐ.பி.எல். போட்டியில் சூதாட்ட பிரச்சினையில் சிக்கி இந்திய அணியில் இருந்து நிரந்தரமாக ஓரங்கட்டப்பட்டார்.

பல்வேறு பிரச்சினைகளிலும் அவருக்கு ஆதரவாக இருந்தவர் அவருடைய காதல் மனைவி சன்விகா. இவர்களுக்கு கடந்த ஆண்டு மே மாதம் பெண் குழந்தை பிறந்தது. இந்நிலையில் தான் மீண்டும் அப்பாவாகி விட்டதாக டுவிட்டரில் குதூகலித்துள்ளார் ஸ்ரீசாந்த். இந்த முறை அவருக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது. தாயும், குழந்தையும் நலமாக இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். (க)

# இன்று மாவீரர் நாள்...

இன்று மாலை 6.05 மணியளவில் ஒட்டு மொத்த தமிழர்களும் தமது வீடுகளில், கோவில்களில் அல்லது பொது இடத்திலோ விளக்கேற்றி விடுதலை வேட்கையில் உயிர் நீத்தவர்களை நினைவு கூருமாறு பொது அமைப்புக்களும் தமிழ்க் கட்சிகளும் அழைப்பு விடுத்துள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனால் ஆரம்பிக்கப்பட்ட விடுதலைப் போராட்டத்தில் வீர மரணம் அடைந்த ஒட்டுமொத்த போராளிகளின் கூட்டு நினைவாக மாவீரர் நாள் பிரகடனப்படுத்தப்பட்டது. இந்த மாவீரர் நாள் ஒவ்வொரு வருடமும் கார்த்திகை மாதம் 27 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

யுத்தத்திற்கு பின்னரான காலப பகுதியில் மாவீரர்களை பகிரங்கமாக நினைவு கூருவதற்கு இராணுவ கெடுபிடிகளால் பொதுமக்கள் அஞ்சினார்கள். எனினும் அந்த நிலை சற்று மாற்றமடைந்துள்ள நிலையில் எவ்வித தூண்டுதல்களும் இன்றியும் தாமாகவே மாவீரர்களை நினைவுகூர அனைவரும் ஆரம்பித்துள்ளனர். புலம்பெயர் நாடுகளில் வழமை போன்று பகிரங்கமாக பெரும் எடுப்பில் நினைவேந்தல்கள் நிகழ்த்தப்பட்டு வந்தாலும் தாயகத்து நினைவு நிகழ்வுகளுக்கே முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் இம்முறை தாயகத்தில் மாவீரர் நாள உணர்வுபூர்வமாக பல இடங்களில் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இன்றைய தினம் வடக்கு மாகாண உறுப்பினர் சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் நல்லூர் கந்தன் ஆலயம் முன்பாக விளக்கேற்றி மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதே போன்று வடமராட்சி உக்கிளாங்குளம், கிளிநொச்சியிலுள்ள கனகபுரம் மற்றும் முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லங்களிலும் இன்று மாலை 6.05 மணியளவில் விளக்கேற்றி அனுஷ்டிக்கவுள்ளனர். நேற்றுமுன்தினமும், நேற்றைய தினமும் பற்றைகள் படர்ந்திருந்த குறித்த மாவீரர் துயிலுமில்லங்கள் பொது மக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளால் சிரமதான முறையில் துப்புரவு செய்யப்பட்டிருந்தன.

இதேபோன்று முல்லைத்தீவில் மாகாண சபை உறுப்பினரின் ஏற்பாட்டிலும், மன்னாரில் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டிலும் வவுனியாவில் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டிலும் நினைவு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. யாழ். பல்கலைக் கழகத்தில் நேற்று முன்தினம் மாவீரர்கள் நினைவாக சுடரேற்றி எழுச்சியுடன் அனுஷ்டித் திருந்த நிலையில் இன்றைய தினமும் யாழ். பல்கலையில் சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்படவுள்ளது. குறிப்பாக கிளிநொச்சியிலும் மன்னாரி லும் முல்லைத்தீவிலும் வவுனியாவிலும் யாழ்ப்பாணத்தில் நல்லூரிலும் இடம்பெறும் நினைவு நிகழ்வுகளில் பொது மக்களைக் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மாவீரர் நாள் என்பது தேசத்தின் விடுதலைக்கான நாள். சத்திய இலட்சியத்திற்காக போராடியவர்களை நினைவுகூரும் நாள். தமிழருக்காகவும் தமிழ்தேசத்திற்காகவும் வாழ்ந்தவர்களின் நினைவுகளை மீட்டிப் பார்க்கும் நாள். தங்களது சுய விருப்பு வெறுப்புகளையும், சுகபோகங்களையும் மறந்து தமிழ் சமூகத்திற்காக உயிரை தியாகம் செய்த மாவீரர்களுக்கான நாள். அவர்களுக்காக மாவீரர் நாளனறு ஏற்றபபடும் சுடரில் உள்ள அக்கினி கொழுந்தில் மக்களும் தியாக வீரர்களின் உறவினர்களும் அந்த தியாகிகளை பார்க்கிறார்கள்.

தமிழர்களுக்காக அவ்வீரர்கள் தங்களது தனிப் பற்று, சுகபோகம் என்பவற்றை இழந்திருக்கிறார்கள். தமிழர்களுக்காக பாடுபட்டவர்களை தமிழர்கள் புனிதர்களாகவே நினைவு கூருகின்றார்கள். இந்த வீரர்கள் மரணித்திருந்தாலும் கூட காலத்தினால் சாகாதவர்கள். இவர்கள் மக்களின் விடிவிற்காகவும், நாட்டின் சுதந்திரத்திற்காகவும் பாடுபட்டிருக்கிறார்கள்.

இவர்களின் சாவு ஓர் சரித்திரம். ஆனால அவர்களால் உருவாக்கபபட்ட இலட்சிய நெருப்பு அழிவதில்லை. சாவுககு அஞ்சாத எதையும் தாங்கும் இதயம கொண்ட வீரர்கள் அவர்கள். இவ்வாறான வீரர்களின் நினைவு நாளில், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் உள்ள துயிலுமில்லங்களில் அந்த வீரர்களுக்கான அஞ்சலி செலுத்தப்பட்டு வருகின்றது. இதில் மக்கள் பங்கேற்க வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளார்.

இதேபோன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராசா ஆகியோரும் விடுதலை போராட்டததில் உயிர்நீத்த உறவுகளை நினைவுகூர அழைப்பு விடுத் துள்ளனர்.

ஜனநாயக போராளிகள் கட்சியும் மாவீரர்களை துயிலுமில்லங்களில் நினைவு கூருமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எமது உள்ளத்தில உள்ள விடுதலை வேட்கையை உலகிற்கு கூற அனைவரும் ஒன்று திரண்டு வருமாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர திருமதி அனந்தி சசிதரன் அழைப்பு விடுத்துள்ளார். முன்னைய காலத்தைப் போன்று காணப்பட்ட அச்சுறுத்தலான நிலைமை தற்போது ஓரளவு நீங்கியிருக்கின்ற சூழலில் நினைவு கூரல்களில் மக்கள் குழப்பங்களின்றி அவதானத்துடன் பங்கேற்க வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (செ-4)

## மரண அறிவித்தல்

### திருமதி வீரசிங்கம் சொர்ணாம்பிகை



இல.42, மானிப்பாய் வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வீரசிங்கம் சொர்ணாம்பிகை 24.11.2016 (வியாழக்கிழமை) அன்று சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.11.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் காலை 10 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.42, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

(6723)

# பிரபாகரனை வாழ்த்தி...

பேஸ்புக், ருவிட்டர் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தும் உலகத் தமிழர்கள் பலரும் தத்தமது சொந்த பதிவுகளில் தேசியத் தலைவரின் படங்களைத் தரவேற்றி அவருக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவிப்பதுடன் அவரது வீரம் தொடர்பான செய்திகளையும் தரவேற்றியிருந்தனர். இதிலும் குறிப்பிடத்தக்க விடயமாக, போராட்ட காலத்தில் சிறுவர்களாக இருந்தவர்கள், தலைவர் தொடர்பாக அதிகம் அறியாதவர்களாக இருந்தவர்களாக காணப்பட்டவர்கள் கூட பிரபாகரனின் வரலாற்றை அறிந்து வாழ்த்திக்கொண்டிருக்கின்றமையை அவதானிக்கக் கூடியதாக விருந்தது.

1954ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி வல்வெட்டித்துறை மண்ணில் பிறந்த தேசியத் தலைவர், தமிழ் மக்களுக்கு சர்வதேச முகவரியை ஈட்டித்தந்த அந்த பெருந் தலைவராவார். உலகில் ஒப்பற்ற வீரத்தை நிலைநாட்டிய தலைவனை உலகம் பூராகவும் உள்ள தமிழ் மக்கள் வாழ்த்துகின்ற நிலையில், அந்த தலைவனின் வழியில் நாம் விரைவில் சுதந்திரத்தை முழுமையாக அனுபவிப்போம் என்ற நம்பிக்கை பிறந்துள்ளதாக தாயகத்தில் உள்ள இளைஞர்கள் நமபிக்கையுடன் பதிவுகளை வெளியிட்டுள்ளனர்.

இந்தியாவை சேர்ந்த திரைப்பட நடிகர்கள், இயக்குநர்கள், அரசியல்வாதிகள் என பலரும் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். பா.ம.க நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் தனது டு விட்டர் பதிவில், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அறுபத்து இரண்டாவது பிறந்த நாளில் அவர் பல்லாண்டு வாழவும், விடுதலைப்போரை மீண்டும் முன்னெடுக்கவும் வாழ்த்துகின்றேன் என தெரிவித்துள்ளார். இதைவிட பழ.நெடுமாறன், சீமான், திருமாவளவன், வைகோ உள்ளிட்ட தமிழக அரசியல் தலைவர்கள் பலரும் பிரபாகரனுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்களை தெரி வித்துள்ளார். இவ்வாறு குவியும் பிறந்த நாள் வாழ்த்துக்களால் முகநூல் மற்றும் டு விட்டர்களில் பிரபாகரனது புகைப்படங்கள் நிரம்பி காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்றையதினம் மாணவர்களால் கொண்டாடப்பட்ட பிரபாகரனின் பிறந்த நாள் நிகழ்வு புகைப்படங்களும் சமூக வலைத்தளங்களில அதிகம் பகிரப்பட்டுள்ளன. (செ-4)

# நல்லூர் ஆலய...

த்த நிலையில் 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாவீரர்கள் தமது உயிரை தியாகம் செய்துள்ளார்கள். ஓர் இலட்சத்துக்கும் அதிகமான பொதுமக்களை அரச படைகள் படுகொலை செய்தது.

எமது இனத்தின் விடுதலைக்காக உயிர்நீத்த இவர்களின் ஆத்மசாந்திக்காக பிரார்த்தனை செய்து அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவது ஒவ்வொருவரினதும் கடமை ஆகும். இதற்கு யாரிடமும் அனுமதி கோரவேண்டிய அவசியம் இல்லை.

அந்த வகையில்மாவீரர் நாளானது இன்று காலை 9.30 மணியளவில் நல்லூர் ஆலய முன்றலில் மாவீரரை நினைவு கூர்ந்து அவர்களுக்கு அகவணக்கமும் அஞ்சலியும் செலுத்தப்படும் என சிவாஜிலிங்கம் அறிவித்துள்ளார்.

அதனை தொடர்ந்து வடமராட்சியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் மாலை 5 மணியளவில் பொதுமக்களை ஒன்றிகூடுமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார் இந்த அஞ்சலி நிகழ்வில் அனைத்து உறவுகளும் கலந்து கொள்வது வரலாற்று கடமை எனவும் சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். (செ-9)

# யுத்தத்தில் எவரும்...

அநியாயமாக பாடசாலை கட்டடங்கள் யுத்தத்தில் அழிவடைந்துள்ள. இந்த அழிவை மனிதர்களும் எதிர்நோக்கியுள்ளார்கள். யாழில் எழுக தமிழ் என்று சொல்லி ஒரு திட்டம் இருக்கிறது. அது நல்ல திட்டம். நல்லா படிக்க வேணும். நல்லா வேலை செய்து சம்பாதிக்க வேணும். அபிவிருத்தி வேலை செய்ய வேணும் இவற்றின் மூலமே எம்மால் திருப்பி எழ முடியும் என வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்தார் மேலும் யாழ்ப்பாணம் வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட 12 பாடசாலைகள் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் இருக்கின்றன. இதனை தற்போதைய நல்லாட்சி மாணவர்களின் நன்மைக்காகப் பெற்றுத்தரவேண்டும் என வலிகாமம் கல்விப்பணிப்பாளர் செ.சந்திரராஜா வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயிடம் இதன்போது கோரிக்கை விடுத்துள்ளார். எமது கல்வி வலயத்திலுள்ள 144 பாடசாலைகளில் தற்போது 2600 ஆசிரியர்களுடன், 101 அதிபர்கள் தலைமையில் இந்தப் பாடசாலைகள் இயங்கிவருகின்றன.

இதேவேளை, 12 பாடசாலைகளில் கல்வி கற்பதற்கான சூழலிருந்தாலும் அதற்கான அங்கீகாரம் இல்லை. எனவே இதற்கான தகுந்த நடவடிக்கையினை எடுத்து மாணவர்களின் நலனுக்காக பாடசாலைகளை மீண்டும் பெற்றுத்தரவேண்டும்.

மாணவர்கள் தற்போது தூர இடங்களிலிருக்கின்ற பாடசாலைகளுக்குச் சென்று கல்வி கற்று வருகின்ற நிலைமை மிகவும் வருத்தத்தினைத் தருகின்றது என தெரிவித்தார். (செ-4)

# வேலைநிறுத்த...

அறிவித்த போதும் எந்தவிதமான தீர்வுகளும் வழங்கப்படவில்லை என்பதன் காரணமாக கடந்த ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

அப்போராட்டத்தின் போதும் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் மற்றும் பதிவாளருக்கு வழங்கப்பட்ட கடிதத்தில் மேற்குறித்த காலவரையற்ற வேலைதிறுத்தம் தொடர்பாக தெரிவித்திருந்த போதும் உரிய தரப்பினரிடம் இருந்து தீர்வுகள் வழங்கப்படாமையினால் மேற்குறித்த காலவரையறையற்ற போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

எனவே அனைத்து ஊழியர்களையும் நாளை 28ஆம் திகதி காலை 8.30 மணியளவில் இராமநாதன் மண்டப முன்றலில் ஒன்று கூடுமாறும், ஒவ்வொரு நாளும் ஊழியர் சங்க வரவு பதிவேட்டில் கையொப்பமிடுவது கட்டாயம் எனவும் யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது

மேலும் பாதுகாப்பு ஊழியர் சீருடை இன்றியும் நீர்வழங்கல் சேவை ஊழியர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கடமைகளையும் ஆற்றுவர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)

# அரசு மீது மக்கள்...

க்கும் பொறுப்பை நிறைவேற்றுவதாகவும் பாணந்துறை நகரிலும பிற்பகல் நடைபெற்ற பாணந்துறை ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுப்புரிமை மேம்படுத்தல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசியல்வாதிகள் ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகள் இல்லாத நபர்களாக மாற வேண்டும் என குறிப்பிட்ட ஜனாதிபதி, நாட்டையும் மக்களையும் நேசிக்கும், நாட்டை கட்டியெழுப்பும் தூய்மையான எண்ணமுடைய எவரும் மக்கள் பணத்தையும் அரச வளங்களையும் தனிப்பட்ட நலன்களுக்காக பயன்படுத்த முடியாது எனவும் மேலும் தெரிவித்தார். (செ-11)

# மாவீரர் துயிலும்...

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களையே விடுவிக்குமாறு நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற காணி அமைச்சு தொடர்பான குழுநிலை விவாதத்தின் போது அமைச்சர் விஜயகலா வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் பெரும்பான்மையின மக்களுக்கு உள்ள அனைத்து உரிமைகளும் சிறுபான்மையின மக்களுககு உள்ளதாக தெரிவித்த அவர், சிறுபான்மை மக்கள் இனவாதத்தை துண்டவில்லையெனவும் குறிப்பிடடார். அதேவேளை, வலிகாமம் வடககில் 6ஆயிரம் ஏக்கர் காணி இராணுவத்தினர் வசம் காணப்படுவதாகவும, அவை இன்னும் விடுவிக்கப்படவல்லையெனவும் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு வலிகாமம் வடக்கில் பல கோயில்கள் மூடப்பட்டுளளமையினால் மக்கள் வழிபாடுகளை மேறகொள்ள முடியாத இக்கட்டான சூழல காணப்படுவதாகவும் சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார். (செ)

## அனைத்து நாடுகளுக்குமான விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK-550*/=Kg

DELIVERY IN 3 - 5 DAYS *(நிபந்தனைகளுக்குட்பட்டது)

மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு: 0768226243

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- நெல்லியடி
- வல்வெட்டித்துறை

V2 TRAVELS (C-6359)

## காணி விற்பனை

01.குளப்பிட்டி றோட் C.C.T.MS வீதியில் 05 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
02.இராசாவின் தோட்ட வீதியில் 05 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
03.இராசபாதை வீதியில் 25 பரப்பு காணி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. (6722)

தொடர்பு: 0771671174,0777286061

## நடமாடும் மிருக வைத்திய சேவை

தாவடிக்கு அண்மையில் மிருக வைத்திய சேவைகளுக்கு தொடர்பு: Dr.K.கிருபாகரன்



Cell : 077 973 8802
Ph : 021 224 2102

காலை 09-12 PM 446, நாவலர் வீதி, நல்லூர் (6713)

## கடுவெல நிறுவனங்களுக்கு

- வேலை நேரம் 12 மணித்தியாலம்
- நாள் ஒன்றிற்கு 1000/-
- வேலை செய்யும் போது உணவு இலவசம்
- அடையாள அட்டை மாத்திரம்
- தங்குமிடம் உண்டு

Tamil Situation

077 99 35 461 | 077 68 38 231

No. 469/8, Palihena Building, Bus Stand, Kaduwela.

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## Colombo Docyard (Private Sectory)

*18-35 ஆண்கள் தேவை.
*பயிற்சி இலவசம்.
*தங்குமிடம் உண்டு.
*வேலை செய்யும் போது உணவு இலவசம்

35000/- சம்பளம் தொழிலுடன்

No. 157, Thekkawaththa. Anuradhapura Road, Vavniya

077 817 70 17 | 077 12 62 571

## A1 English Exam/IELTS LIFE SKILL Coaching Class

கொழும்பு விரிவுரையாளரால் புதிய நடைமுறைகளுக்கு அமைய A1 English test இற்கு உரிய பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

Home Visit / Group Class அடிப்படையில் கற்பிக்கப்படும்.

Exam, registration செய்து கொடுத்து பயிற்சியும் வழங்கப்படும், உங்கள் வசதிக்கேற்ப நேரம் தீர்மானிக்கலாம்!

பயமின்றி நம்பிக்கையுடன் A1 English test செய்திடுங்கள். (6700)

தொடர்பு : 071 156 0137

## யாழ் REGISTER NOW!

Java Programming Classess with practicals

weekdays 9-11am 7-9 pm
weekends 9-12am 8-9.30 pm

0777861677 (6660)

## CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



அழையுங்கள் - 077 29 31 062

CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை) (C-6489)

## அகரம் கல்வி நிலையம்

மல்லாகம் கொக்குவில்

தரம் 06 - O/L வரையான ஆங்கில, தமிழ் மொழிமூல வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

**புதிய கல்வியாண்டு 2017இற்கான வகுப்புக்கள் ஆரம்பம் 05/12/2016**

**மீண்டுமொரு மாவட்ட முதனிலைச்சாதனை**

2015 க.பொ.த சா/தர பரீட்சை முடிவுகளின்படி யாழ் மாவட்ட முதனிலை மாணவனாக செல்வன் நி.பிருந்தாபன் (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி) தெரிவுசெய்யப்பட்டுள்ளார். என்பதனை எமது சாதனைப் பதிவாக பதிவுசெய்வதில் அகரம் இறும்பூதெய்துகின்றது.

நேரம்
தரம் 6,7,8 - காலை 09.10
தரம் 9,10,11 - காலை 10.10

"அகரம் எம் தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்" (6709)

## நத்தார் மற்றும் புதுவருடத்தை முன்னிட்டு நாம் மகிழ்ச்சியுடன்...

எமக்கு ஆதரவளித்த வாடிக்கையாளர்கள், நண்பர்கள் ஆகிய நீங்களும் எங்களுடன் சேர்ந்து மகிழ்ந்திட....

**அனைவருக்கும் சிறப்புத் தள்ளுபடி**

**BANNER (பனர்)**

ஒரு சதுர அடி **35/-**

போட்டோ குவாலிட்டி பனர் பிறிண்டிங் விலை குறைவால் தரம் குறைவு என்று நினைக்கதேவையில்லை

தரம் மற்றும் சேவையில் என்றும் முதலிடம்

ID CARDS One Side / Two Side




Rs.100 without desiging

VISITING CARD One Side / Two Side



Rs.3.50 without desiging

VOUCHERS




Rs.9.50 without desiging

MUG PRINTING



Rs.300 50 மக்குக்கு மேல...

DURO FRAME



Rs.950 without desiging

CERTIFICATE




Rs.20.00 without desiging

ஒருமுறை வாருங்கள் வித்தியாசத்தை உணர்வீர்கள்

தரமான வடிவமைப்பு
கண்ணியமான கருசனை

**Smart Digital Printing** (6715)


#255, Stanley Road, Jaffna. Tel : 021 221 2958, Mob : 07 1650 1650, e.mail : smartjaffna@gmail.com


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.11.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# வலம்புரி
## சங்குநாதம்

நாதம் 93

வள்ளுவர் ஆண்டு 2047 | 27.11.2016 | தொலைபேசி : 021 222 3378


உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் அறிவித்ததும் அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

இறைவணக்கம் செலுத்தி ஆலடியில் அனைவரும் அமர்ந்திருந்தாலும் எவரும் எதுவும் பேசாமல் இருந்தனர்.

கனடாவில் இருந்து அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்த சாத்திரியார் சதாசிவத்திற்கு ஆலடி மாநாட்டில நிலவுகின்ற அமைதிக்கான காரணத்தை உடன புரிந்து கொள்ள முடியாவிட்டாலும் எல்லோருடைய அமைதிபோல தானும் அமைதியாக இருந்தார்.

நேரம் மாலை 6 மணி 05 நிமிடம். ஆலடிப்பிள்ளையார் கோயில் கண்டாமணி மெதுவாக அசைந்து ஒலியெழுப்புகிறது. என்ன இண்டைக்கு கோயில் மணி ஒரு மாதிரியாக அடிக்குது. வழமையில கோயில் மணி அடிக்க ஆலடி மாநாடு முடிவடையும். ஆனால் இண்டைக்கு கண்டாமணி அடிக்க ஆலடி மாநாடு ஆரம்பமாகிறது. என்ன சங்கதி என்று சாத்திரியார் சதாசிவத்தால் புரிந்து கொள்ள முடியாமல் போயிருந்தாலும் ஆலடி மாநாட்டில நிலவக்கூடிய ஒரு வித்தியாசமான சூழ்நிலையைப் புரிந்து கொண்டு அவரும் மௌனமாக இருந்தார்.

**வாத்தியார்:** இண்டைக்கு நவம்பர் 27. தங்கட இன்னுயிர்களை எங்கட வாழ்வுக்காகத் தியாகம் செய்தவர்களை நினைவுகூருகின்ற நாள். நாங்கள் அனைவரும் உயிரிழந்த எங்கட தியாகிகளையும் பொதுமக்களையும் நினைவுகூருவோம்.

(இப்படி வாத்தியார் கூறியதும் ஆலடியில் இருந்த அனைவரும் எழுந்து நின்றனர். ஆலடியில் வைக்கப்பட்டிருந்த நினைவுச்சுடரை விதானையார் விசுவலிங்கம் ஏற்றினார்.

அந்தச் செக்கல் பொழுது ஆலடியில் ஏற்றப்பட்ட ஒற்றைத்தீபம்; கடந்து போன எங்கள் வரலாற்றை பேசி நிற்கிறது. துயிலும் இல்லங்களின் ஞாபகங்களை மீட்டுக்கொள்கிறது.

என்ன செய்யிறது எங்கட இனத்திற்கு இப்படியொரு தலைவிதி... துயிலும் இல்லங்களையாவது



## ஆலடி மாநாட்டில் உள்ளத்து நினைவேந்தல்

விட்டு வைத்திருக்கலாம். இறந்து போனவர்களை நினைவுகூருவதற்குக் கூட தமிழர்களுக்கு அனுமதி கொடுக்கக்கூடாது என்பதற்காகத்தானே துயிலும் இல்லங்களைப் புரட்டி எடுத்தவியள். இதுக்கெல்லாம் என்றோ ஒருநாள் கடவுள் தண்டனை கொடுப்பான்.

இந்த உணர்வுப் பிரக்ஞை ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஓடிக்கொண்டிருக்கிறது.

எழுந்து நின்று மௌனமாக நிலம் நோக்கும் அந்த வழிபாட்டு அஞ்சலியில் விதானையார் விசுவலிங்கத்தின் கண்கள் கண்ணீரைச் சொரிவது அவரின் விம்மல் ஒலியில், ஒற்றைத் தீபத்தின் ஒளியில் தெரிகிறது.

தொடர்ந்து வாத்தியார், பண்டிதர், சாத்திரியார், மூப்பர், கங்காணி என அனைவரும் கண்ணீரால் நில மகளை- தமிழ் மண்ணை நனைத்துக் கொள்கின்றனர். அந்நேரத்தில்

...சந்தனப் பேழைகளே...

என்ற பாடல் வரிகளின் இசை கேட்கிறது.

எங்கும் நிசப்தம். ஆல மரமும் தன் அஞ்சலிப்பின் பங்களிப்பாய் இலைகளை உதிர்த்துக்கொள்கிறது.

நவம்பர் 27 யார் தடுத்தாலும் தமிழர் இதயங்கள் அஞ்சலிக்கின்ற நாள். அந்தப் புனிதமான நாளை ஏற்று அதற்கான அங்கீகாரத்தை வழங்கி அதற்குரிய மதிப்பைக் கொடுப்பதுதான் நல்லாட்சிக்கு அழகாகும் என்ற வார்த்தைகள் வீசும் குளிர்க்காற்றின் உட்பொருளாய் இருந்தன.

ஆலடி மாநாட்டில் நினைவேந்தல் நிறைவுற்று அனைவரும் அமர்ந்த போதிலும் தன் மகனின் நினைப்பில் இருந்து விதானையார் விசுவலிங்கத்தால் மீளவே முடியவில்லை. சிறிது நேரம் ஆலடியில் அமைதி நிலவியது.

அந்த அமைதியை முடித்து வைப்பதுபோல பண்டிதர் பரமலிங்கம் குரல் கொடுத்தார்.

**பண்டிதர்:** எங்கட இனம் வாழவேணும் எங்கட மொழி வாழவேணும். நவம்பர் 27 போதும். தமிழினம் ஒன்றுபட்டு, ஒருமித்து தன் இலட்சியத்தை அடைவதற்கான உறுதிமொழியை எடுப்பதற்கு.

**சாத்திரியார்:** உண்மைதான் பண்டிதர் ஐயா. தமிழினத்தின்ர ஒற்றுமை என்பது எங்கட உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கு மிகவும் அவசியம். ஆனால் இன்றிருக்கின்ற நிலைமையைப் பார்க்கும்போது பதவி ஆசை தமிழ் அரசியலை ஆட்டிவைப்பது தெரிகிறது. தன்ர இனம் வாழவேணும் என்பதற்காக உடலில கெந்தகக் குண்டைக் கட்டிக் கொண்டு சென்றவர்களின்ர தியாகம் நிறைந்த இந்த மண்ணில இப்ப பொய்யும் புரட்டும்... கடவுளே! ஏன்தான் இப்படி... வாத்தியாரின் பெருமூச்சோடு மாரியின் குளிர் காற்றிலும் மெல்ல அனல் ஏறியது.

**கங்காணி:** வாத்தியார் 2017 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தை நிதியமைச்சர் பாராளுமன்றத்தில சமர்ப்பித்திருக்கிறார். அதில போக்குவரத்து ஒழுங்கு விதிமுறைகளுக்கு மாறாக வாகனம் செலுத்தினால் அபராதத் தொகை 25 ஆயிரம் ரூபா எண்டு நிர்ணயம் செய்திருக்கினமல்லோ. இப்படி எண்டால் நிலைமை என்னவாகும்.

**மூப்பர்:** பொலிஸாரின் தலா வருமானம் அதிகரிக்கும்.

**சாத்திரியார்:** என்ன மூப்பர் சொல்லுறியள். வாகனத்துக்குத் தண்டம் 25 ஆயிரம் ரூபா எண்டால் அது அரசுக்கல்லோ வருமானம் கூடும். பொலிஸாரின்ர தலா வருமானம் எப்படி அதிகரிக்கும்.

**மூப்பர்:** சாத்திரியார் போக்குவரத்து ஒழுங்கு விதிமுறைகளை மீறினால் அதற்குத் தண்டம் 25 ஆயிரம் ரூபா எண்டால் என்ன செய்ய முடியும். ஒருநாளைக்கு ஐந்நூறு ரூபாவுக்கு ஓட்டம் கிடைக்கிறதே பெரும்பாடு என்றிருக்கின்ற ஆட்டோக்காரர் என்ன செய்யலாம்.

**வாத்தியார்:** மூப்பர் சொல்லுறதும் சரிதான். சில மோட்டார் சைக்கிள்களை விற்றாலே 25 ஆயிரம் ரூபா தேறாது. இந்நிலையில 25 ஆயிரத்தைத் தண்டமாகக் கட்டுறது எண்டால் நிலைமை எப்படி இருக்கும்.

**மூப்பர்:** அதுதான் சொல்லுறன் 25 ஆயிரம் ரூபா தண்டம் கட்டுறதைவிட பொலிஸாரின்ர காலில கையில விழுந்து ஐயா ஐயாயிரம் பத்தாயிரம் தாறன் எப்படியும் என்னைக் காப்பாற்றுங்கோ என்று கேட்கிறதைத் தவிர வேறு வழியில்லை தானே.


**பண்டிதர்:** உண்மைதான். இலங்கையில பொலிஸ் சேவையில இருக்கிற ஒருத்தரும் இலஞ்சம் வாங்குவதில்லை எண்டிருந்தால் 25 ஆயிரம் ரூபா தண்டம் அரசுக்கு வருமானத்தையும் தரும், விபத்தையும் குறைக்கும். ஆனால் எங்கட பொலிஸார்...

**வாத்தியார்:** தண்டப் பணத்தை அதிகரித்து விபத்தைக் தடுக்கிறதை விட வெளிநாடுகள் போல வீதிகளில வாகனம் செலுத்துவோரை கண்காணிக்கிற கமராக்கள் பொருத்தி, சட்டத்தை மீறுவோருக்கு தண்டம் விதித்தால் எல்லாம் சரிவரும்.

இப்படி வாத்தியார் கூற அதை ஆமோதிப்பது போல ஆலடிப்பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# மகிந்த தரப்பின் பிரசாரத்தை நல்லாட்சி முறியடிக்குமா?



மாவீரர்களை நினைவு கூருவதற்கு நல்லாட்சியிலும் அனுமதியில்லை.

மாவீரர்களை நினைவு கூருவது தொடர்பில் தமக்கு ஆட்சேபனை இல்லையாயினும் அதனை மையப்படுத்தி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்பினர் நல்லாட்சிக்கு எதிராகக் கடும் பிரசாரம் செய்யத் தலைப்படுவர்.

இதனால் தென்பகுதியில் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படுவது மட்டுமன்றி மைத்திரி - ரணில் ஆட்சியில் மீண்டும் விடுதலைப்புலிகள் தோற்றம் பெற்றுவிட்டனர் என்ற பிரசாரம் கட்டவிழ்த்து விடப்படும் என்பது நல்லாட்சியின் நிலைப்பாடாகும்.




நல்லாட்சியினினின் நிலைப்பாட்டில் நியாயமுண்டு என எடுத்துக் கொண்டால், தமிழ் மக்களின் அபிலாஷைகள் தொடர்பில் தென்பகுதி மக்கள் எப்போதுதான் புரிதலுக்கு உட்படுவர் என்ற கேள்வி எழுவதும் நியாயமானதே.

நல்லாட்சியிணைப் பொறுத்தவரை விடுதலைப்புலிகள் மீண்டும் வந்து விட்டனர் என்ற பிரசாரத்துக்கு இம்மியும் இடம் கொடுக்கக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர்.

அதேவேளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்போ மைத்திரியின் ஆட்சியில் மீண்டும் விடுதலைப்புலிகள் எழுச்சி பெறுகின்றனர் என்பதாக தமது பிரசாரத்தை மேற்கொள்ள வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றனர்.

அதாவது விடுதலைப் புலிகளை தோற்கடித்து வெற்றிவிழாக் கொண்டாடிய எங்களை வீட்டிற்கு அனுப்பியதால் மீண்டும் விடுதலைப் புலிகள் தோற்றம் பெற்றுள்ளனர்.

எனவே இந்தப் பயங்கரத்திலிருந்து நாட்டை மீட்பதாக-காப்பதாக இருந்தால் அதற்கான ஒரே வழி மீண்டும் மகிந்த ஆட்சிப் பீடம் ஏறுவதுதான் என்பதாக மகிந்த தரப்பினரின் பிரசாரம் அமைக்கப்பட்டுள்ளது.

ஆக, இலங்கைத் திருநாட்டில் ஆட்சிப் பீடம் ஏறும் நோக்கில் ஒரு தரப்பு விடுதலைப் புலிகள் மீண்டும் எழுச்சி பெற்றுள்ளதாக பிரசாரம் செய்ய, மறு தரப்பு அந்த பிரசா ரத்தை முறியடிப்பதாக கருதி தமிழ் மக்களின் உரிமைகள்- உள்ளக்கிடக்கைகள், அபிலாஷைகள் என அனைத்தையும் அமிழ்த்தி விட வேண்டும் என நினைக்கின்றது.

இப்படியான ஒரு சூழ்நிலை இந்த நாட்டில் என்றுமே இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணப் போவதில்லை என்பது சர்வ நிச்சயம்.

இன்றைய நல்லாட்சியும் முன்னைய மகிந்த ஆட்சியும் தங்களைக் காப்பாற்றும் நோக்கில் அமைக்கின்ற வியூகம் தமிழ் மக்களுக்கு எதிரானதாக இருக்கின்றதே தவிர தமிழ் மக்களுக்கு மீட்சியைக் கொடுப்பதாகத் தெரியவில்லை.

நவம்பர் 27 இல் மாவீரர் தினத்தை தமிழ் மக்கள் அனுஷ்டித்தால் அது விடுதலைப் புலிகள் மறு அவதாரம் எடுப்பதாக அமையும் என்று சிறியன சிந்திக்கும் சிறுமைத்தனத்திற்கு எவருமே முடிவு கட்டுவதாக இல்லை.

மாவீரர் என்போர் விடுதலைப் போரில் இறந்து போனவர்கள். அவர்கள் மாவீரர்கள் என்று அழைக்கப்பட்டாலும் தமிழ்த் தாய் பெற்ற பிள்ளைகள்.

அவர்களின் பெற்றோர்கள், சகோதரர்கள், உறவுகள் அவர்களை நினைவுகூருவது என்பது எக்காலத்திலும் தவிர்க்க முடியாதது.

எனினும் இந்த உண்மைகள் மறைக்கப்பட்டு மாவீரர்களை நினைவுகூருவது விடுதலைப் புலிகளை நினைவுகூருவதாக அமையும் என்று கருதிக் கொள்வது பேரினவாத சிந்தனையின் அடிப்படையே அன்றி வேறில்லை எனலாம்.

விடுதலைப் போராட்டத்தில் உயிரிழந்த மாவீரர்களை நினைவுகூருவதில் தவறில்லை.

அது தமிழ் மக்களின் உரிமை என்ற உண்மையை சிங்கள மக்களிடம் எடுத்துக் கூறுவதன் மூலமே விடுதலைப் புலிகள் என்று தொடர்ச்சியாக பிரசாரம் செய்வோரை முறியடிக்க முடியும்.

எனினும் தமிழ் மக்களின் நிலைப்பாட்டை உள்ளத் தூய்மையோடு சிங்கள மக்களுக்கு எடுத்துரைக்கும் எந்த முயற்சிகளும் இதுவரை நடைபெறவில்லை.

வன்னி யுத்தம் முடிவுற்று போர் வெற்றியை சிங்கள ஆட்சியாளர்கள் கொண்டாடிக் கொண்டிருந்த சமநேரத்தில் தென்பகுதி சிங்கள மக்கள் வடக்கிற்கு அரச உதவியுடன் சுற்றுலா என்ற பெயரில் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இத்தகைய சுற்றுலா வடக்கிற்கும் தெற்கிற்குமான பாலமாக அமையும் என்று கூறிக் கொண்டாலும் அரசாங்கம் நிதி உதவி செய்து ஒவ்வொரு கிராமமாக சிங்கள மக்களைத் திரட்டி அவர்களை வடக்கிற்கு அழைத்து வந்ததன் உள்நோக்கம் உறவுப் பாலம் அன்று.

மாறாக வடக்கு சிங்கள மக்கள் வாழ்ந்த இடம் நயினாதீவு , மாதகல், கந்தரோடை போன்ற இடங்களில் காலத்தால் முந்திய பௌத்த விஹாரைகள் உள்ளன.

ஆக, வடக்கும் சிங்களவர்களுக்குரியது என்பதை தெரியப்படுத்தவும் இராணுவத்தில் இருக்கும் உங்கள் பிள்ளைகள் - எங்கள் படையினர் வடக்கில் எங்கெல்லாம் முகாம் அமைத்து, விஹாரை கட்டியுள்ளனர் பாருங்கள்.

நாட்டை மீட்பதற்காகப் போராடி உயிர்நீத்த படையினரின் நினைவிடங்களை தரிசியுங்கள்.

இதற்காகவே அந்தச் சுற்றுலாவின் ஏற்பாடுகள் அமைந்திருந்தன.

உண்மையில் இனப் பிரச்சினைக்கான தீர்வு சாத்தியமாக வேண்டுமாகவிருந்தால் தமிழ் மக்களுக்கு உரிமை கொடுக்கப்பட வேண்டும் என்ற பிரசாரத்தை சிங்கள மக்களிடம் மேற்கொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் தொடர்பில் பேரினவாதிகள் எத்தகைய பிரசாரம் செய்தாலும் அது கண்டு சிங்கள மக்கள் மசியமாட்டார்கள் என்ற உறுதியான நிலைப்பாட்டை ஏற்படுத்தாத வரை ஒவ்வொரு தேர்தல் காலங்களிலும் தீர்வு முயற்சிகளிலும் பேரினவாத சக்திகள் தமிழ் மக்களுக்கு எதிராக விசமத்தனமான பிரசாரங்களை மேற்கொள்ளவே செய்யும்.

தமிழ் மக்கள் தொடர்பில் சிங்கள மக்களிடம் ஒரு புரிதலை ஏற்படுத்த வேண்டிய தார்மீகப் பொறுப்பை அரசும் தென்பகுதி ஊடகங்களும் மதபீடங்களும் தொண்டு நிறுவனங்களும் செய்யத் தவறியமை மிகப் பெரும் துரதிர்ஷ்டம்.

அந்தத் தவறு நீடிப்பது நல்லதல்ல என்பதால் தமிழ்த் தரப்பு அந்தப் பிரசாரத்தை மேற்கொள்ள வேண்டும்.

சிங்கள - தமிழ் உறவு ஏற்பட வேண்டும் என உள்ளத்தால் விரும்புகின்ற சிங்கள மக்களை ஒன்றிணைத்து அவர்களின் உதவியுடன் இன ஒற்றுமைக்கான பிரசாரம் மேற்கொள்ளப்படுவது கட்டாயமானது.

இதன் ஒரு முன்னேற்பாடாக தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் கடந்த 22 ஆம் திகதி கொழும்பில் ஊடகவியலாளர் மாநாடு நடத்தப்பட்டுள்ளது.

இப் பத்திரிகையாளர் மாநாடு சிங்கள - தமிழ் - முஸ்லிம் மக்களிடையே நல்லுறவை - புரிதலை ஏற்படுத்தும் என நம்பலாம்.

இந்த முயற்சி தென்பகுதி முழுவதிலும் தமிழ் மக்களின் உரிமையை வழங்குதல், அதன் மூலம் இன ஒற்றுமை, நாட்டின் அபிவிருத்தி என்றவா றான பிரசாரம் முன்னெடுக்கப்பட வேண்டும்.இந்த முன்னெடுப்பை தமிழ் மக்கள் பேரவை செய்தாகு வது தவிர்க்க முடியாததாகும்.

**விதுரன்**




# திருட்டுப்பட்டம்

"மகாத்மா காந்தி நினைவு" பாடசாலையில் அடுத்த வாரம் பாடசாலை ஆண்டு விழா வருகிறது.

அந்த விழாவிற்கு புதிதாக வந்திருக்கும் பொலிஸ் அதிகாரி ஜீவானந்தம் விருந்தினராக வருகிறார் என்று பாடசாலை தலைமையாசிரியர் அறிவித்தார்.

அங்குள்ள மாணவர்களுக்கு ஒரே மகிழ்ச்சி.

ஏனென்றால் ஜீவானந்தம் இந்த ஊருக்கு மாற்றலாகி வந்த மூன்று மாதத்திலேயே பல நல்ல செயல்களை செய்து புகழ் பெற்று விட்டார்.

அந்த ஊரில் அதுவரை தொடர்ந்து நடந்து வந்த வழிப்பறிகள், கொள்ளைகள் போன்ற தீய செயல்களை பெருமளவு குறைத்து விட்டார்.

அது மட்டுமல்ல அவருடைய மகன் ராம் பிரசாத் இந்தப் பாடசாலையில்தான் ஏழாம் வகுப்பில் சேர்ந்துள்ளான்.

இதனால் மாணவர்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி.

ராம் பிரசாத்துடன் நட்பு வைக்க நான் நீ என்று போட்டி கூட நடந்தது.

ராம் பிரசாத்தின் பெற்றோர் பரம்பரை யாகவே பணக்காரர்களாக இருந்ததால் அவன் கொஞ்சம் செலவாளியாக இருந்தான்.

மற்றப்படி அமைதியான மாணவன்.

அவன் உட்கார்ந்திருக்கும் வாங்கில் மோகன், சாமிநாதன் என்று இரு மாணவர்கள் உட்கார்ந்திருந்தனர்.

மூவரும் நல்ல முறையில் நட்புடன் இருந்தனர்.

மோகனின் அப்பாவும் நல்ல உத்தியோகத்தில் இருந்தார்.

அதனால் மோகனும் தினமும் காரில் தான் பாடசாலைக்கு வந்து இறங்குவான்.

சாமிநாதனின் அப்பா ஒரு சாதாரண உத்தியோகத்தில் இருந்தார்.

சாமிநாதனுக்கு ஒரு தம்பியும் தங்கையும் இருந்தனர்.



இவர்கள் மூவரையும் படிக்க வைக்க அவன் அப்பா மிகுந்த சிரமப்பட்டுக் கொண்டிருந்தார்.

சாமிநாதனும் அப்பாவின் கஷ்டம் தெரிந்ததால் ஆடம்பரமாக இருப்பதை தவிர்த்தான்.

தினமும் அவனிடம் இருந்த பழைய சைக்கிளிலேயே பாடசாலைக்கு சென்று கொண்டிருந்தான்.

இன்னும் மூன்று நாட்களில் பாடசாலை ஆண்டு விழா வருவதால், அப்பொழுது நடக்கும் கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள மாணவ, மாணவிகளுக்கு பயிற்சிகள் நடந்து கொண்டிருந்தன.

இதனால் ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் மாணவர்களும் மாணவிகளும் பயிற்சிகளுக்கு அடிக்கடி வகுப்பை விட்டு வெளியே சென்று வந்து கொண்டிருந்தனர்.

ராம் பிரசாத்தும் மோகனும் பேச்சுப்போட்டியிலும் நடனப்போட்டியிலும் கலந்து கொண்டிருந்தனர்.

அதனால் அவர்கள் இருவரும் சாமிநாதனிடம் அவர்கள் புத்தகப்பையை பார்த்துக் கொள்ள சொல்லிவிட்டு பயிற்சிக்குச் சென்றனர்.

பயிற்சி முடிந்து வகுப்பறைக்கு வரும்போது மாலை நான்கு மணி ஆகிவிட்டது.

அதன் பின்னர் நாலரை மணிக்கு பாடசாலை முடிந்தவுடன் ராம்பிரசாத் மோகனையும் சாமிநாதனையும் தன்னுடன் கூட வரும்படியும் வழியில் உள்ள ஒரு கடையில் ஏதாவது சாப்பிட்டு விட்டு செல்லலாம் என வற்புறுத்தினான்.

மோகன் சம்மதித்து விட்டான்.

சாமிநாதன் என்னை மன்னித்துக்கொள் இன்று அப்பாவும் அம்மாவும் வெளியே செல்கிறார்கள். தம்பி தங்கைகளை நானதான் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லி விடை பெற்றுச் சென்று விட்டான்.

சரி என்று மோகனும் ராம்பிரசாத்தும் கடைக்குச் சென்று விருப்பப்பட்டதை சாப்பிட்டனர்.

பின் பணம் எடுப்பதற்காக தனது புத்தகப்பையைத் திறந்து பணம் எடுக்கப் போனான். ஆனால் பணம் தட்டுப்படவேயில்லை. திடுக்கிட்டு தன் புத்தகப்பையிலிருந்து அனைத்து புத்தகங்களையும் எடுத்து தேடிப் பார்த்தான்.

பணம் தட்டுப்படவேயில்லை.

என்ன செய்வது என்று கையை பிசைந்தான். மோகன் பணம் தொலைந்து விட்டது.

இப்ப என்ன செய்வது? என்று கேட்டான். மோகன் என் கையிலும் பணமில்லையே என்று விழித்தான்.

பாடசாலைச் சீருடையில் இவர்கள் இருவரும் விழித்துக்கொண்டு உட்கார்ந்திருப்பதைப் பார்த்த கடைக்காரர் மெல்ல இவர்களிடம் வந்து என்ன தம்பி பணமில்லையா? என்று கேட்டார்.

அவரும் இதே பாடசாலையில் படித்து வந்தவர்தான்.

இவர்கள் இருவரும் மெல்ல எழுந்து ஐயா நான் பொலிஸ் அதிகாரியின் பையன். இவனின் அப்பா பெரிய அதிகாரி.

நாங்கள் எங்கள் புத்தகப்பையில் பணம் வைத்திருந்தோம்.

அதனால்தான் தைரியமாக இங்கு சாப்பிட வந்தோம்.

நீங்கள் அனுமதி கொடுத்தால் வீட்டுக்குச் சென்று பணத்தை எடுத்து வந்து தந்து விடுகிறோம் என்றனர்.

கடைக்காரர், அதனாலென்ன? நாளை காலையிலேயே பணம் கொண்டு வந்து கொடுங்கள்.

உங்கள் புத்தகப்பையை யாரிடமாவது கொடுத்து வைத்தீர்களா? என்று கேட்க.

இருவருக்கும் அப்பொழுதுதான் சாமிநாதனிடம் புத்தகப்பையை பார்த்துக்கொள்ளச்சொல்லி சொன்னது ஞாபகம் வந்தது.

சாமிநாதன் மேல் சந்தேகப்படுவதா? என்று சிந்தித்தாலும், அவன் அவசரமாக வீடு செல்ல வேண்டும் என்று சொன்னது இவர்கள் மனதை சந்தேகப்பட வைத்தது.

மறுநாள் பாடசாலைக்கு வந்தவுடன் ராம் பிரசாத்தும் மோகனும் அவர்கள் வகுப்பாசிரியரைப் பார்த்து நேற்று நடந்ததை தெரிவித்தனர்.

புத்தகங்களை சாமிநாதனிடம் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டு சென்றதையும் சொன்னார்கள். வகுப்பாசிரியர் திகைத்தார்.

சாமிநாதன் முதல் வகுப்பிலிருந்து இங்கு படித்து வருபவன்.

இதுவரை அவனைப்பற்றி எந்தப் பழிச் சொல்லும் வந்ததில்லை. இப்பொழுது என்ன செய்வது? நேராக தலைமையாசிரியரைப் பார்க்கச் சென்றார்.

இருவரும் நீண்ட நேரம் கலந்து பேசி சாமிநாதனை விசாரித்து விடுவது என முடிவு செய்தனர்.

சாமிநாதனுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

இதுவரை இப்படி ஒரு பழிச் சொல் வந்ததில்லை.

தலைமையாசிரியர் கூப்பிட்டு இவனை விசாரித்தவுடன் நிலை குலைந்து போனான்.

புத்தகப்பையில் வைத்த பணம் காணவில்லை.

புத்தகப்பையை இவன் தான் பார்த்துக் கொண்டிருந்தான்.

அதனால் தொலைந்த பணத்துக்கு இவன் பதில் சொல்லியாக வேண்டும்.

என்ன செய்வது? நான் எடுக்கவில்லை என்று சொன்னால் பணம் எப்படி புத்தகப்பையிலிருந்து காணாமல் போகும் என்று கேள்வி கேட்பார்கள்.

நாளை மறுநாள் ஆண்டு விழா.

ஆண்டு விழாவில் என்ன நடந்திருக்கும் என அடுத்த இதழில் பார்ப்போம்.

(தொடரும்)





## வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532



### மழை இன்னும் வருமா?

### இலங்கையிலும் நாணயத்தாள்கள் செல்லாது என்று சட்டம் வந்தால்?

### மாவீரர் நாள் பற்றி உங்கள் கருத்து?

**தமிழ்** — பருத்தித்துறை

**மாவீரர் நாள் பற்றி உங்கள் கருத்து?**

ஒரு இனத்தின் விடிவுக்காய் போராடுபவர்களை மாவீரர் என்று போற்றுவது வழமை. நினைவு கூரக்கூடாது என தடை விதிக்க அவர்கள் ஒன்றும் வானத்தில் இருந்து குதித்தவர்கள் அல்ல.

ஒரு தாய் - தகப்பனின் பிள்ளை, ஒரு தங்கை-தம்பியின் அண்ணன், ஒரு தமக்கை - தமயனின் தம்பி. இப்படி உறவுகளுடன் பின்னிப் பிணைந்தவர். தன் மக்களின் விடிவுக்காய் உயிர் நீத்தவரை நினைவுகூர வேண்டாம் எனத் தடுப்பது என்பது பேரின வாதம் இன்னும் தலைதூக்கி நிற்கிறது என்பதை எடுத்துக் காட்டும்.

**தாவீதன்** — சங்கானை

**உலகில் சிறந்தது எது?**

உன்னால் உன் தாய் தந்தையை பெருமை கொள்ள வைப்பது. உன் மகனால் நீ பெருமை கொள்வது.

**சிறி** — பருத்தித்துறை

**மழை இன்னும் வருமா?**

விதைத்த நெல் முளைக்கவும் கதிர்விட்டு நல்ல விளைச்சல் தரவும் போதுமான மழை பெய்துவிட்டது. இனி அதை அழிக்க ஒரு மழை வருவது வழக்கம் தானே. விளைந்ததை வீடுகொண்டு செல்வதற்கு இயற்கையும் தமிழனைத் தண்டிக்கிறது என்றபோது தான் மனம் வேதனையில் தவிக்கின்றது.

**நந்தகுமார்** — மானிப்பாய்

**ஜனாதிபதியின் இணையத்தளத்தை ஊடுருவிய மாணவருக்கு பரிசு வழங்கப்பட்டதே?**

ஜனாதிபதியின் பெருந்தன்மையைக் காட்டுகிறது. இதே ஒரு தமிழ் மாணவன் செய்திருந்தால்கூட ஜனாதிபதி அப்படி செய்திருக்க வாய்ப்புக்கள் இருக்கிறது. ஏனெனில் அவர் மிகச் சிறந்த மனிதர்.

இதையேதமிழ்மாணவன்ஒருவன்செய்திருந்தால்... மகிந்த குத்தி முறிந்திருப்பார், போராட்டங்கள் வெடித்திருக்கும், ஆர்ப்பாட்டங்கள் நடந்திருக்கும் விடுதலைப் புலிகள் இன்னும் உயிரோடு தான் இருக்கிறார்கள்எனமேடைகள்முழங்கியிருக்கும்.

**ஜெரோன்** — பருத்தித்துறை

**படித்தது மறக்கிறதே?**

அவசர அவசரமாக புல்லை மேயும் மாடுகள் ஆறுதலாக ஓர் இடத்திலிருந்து அசை மீட்டுகிறதே பார்த்திருக்கிறாயா? படிப்பதனால் மனதில் பதியாது ராஜா. படித்ததை மீண்டும் மீண்டும் மீட்டிப் பார். மறதி என்பது காணாமல் போய்விடும்

**வர்ணி** — யாழ்ப்பாணம்

**நவம்பர் மாதம் பற்றி?**

கார்த்திகை தமிழின் பெருமை மாதம். தமிழன் பெருமை கொள்ளும் மாதம். எமக்காக தம்மை தீயிலிட்ட வீரர்களின் நினைவு மாதம்.

பட்டாம்பூச்சி சிறகடிக்க பருவமங்கையை தேடும் வயதில் தன் இனத்தின் விடிவுக்காய் தன்னையே தியாகம் செய்த, கற்பனையிலும் சித்திரிக்க முடியாத, நம் கண் முன்னே வாழ்ந்து மடிந்த வீரரை அகத்தில் நினைக்கும் அந்த நாள் தமிழரின் பொன்னாள்.

**வீ.என்.குமார்** — பருத்தித்துறை

**ஆண்டிறுதிக்குள் சம்பந்தக் கலப்பு சரி வருமா?**

தமிழர்கள் முட்டாள்கள். எது சொன்னாலும் நம்பி விடுவார்கள் என்பது சம்பந்த புறோக்கருக்கு தெரியுமப்பா. அதனால் மாப்பிள்ளை பகுதி (பெரும்பான்மை) , பொம்பிளை (தமிழர்) கொஞ்சம் கறுப்பாம், கட்டையாம், படிப்புக் குறைவாம், எதுக்கெடுத்தாலும் கோபம் வருதாம், நாகரிகம் தெரியவில்லையாம். இப்படி சில பல காரணங்களினால் மறுத்துவிட்டார்கள். இருந்தும் நாங்கள் சோர்ந்தவர்களல்ல. அடுத்த (2018) ற்குள் இந்த சம்பந்தத்தை நடத்தியே தீருவோம் என்று ஒரு மாநாடு. கண்மூடிப் பால் குடிக்கும் பூனைகளுக்குத் தெரியாது கண்திறந்தபடி மனிதர்கள் இருக்கிறார்கள் என்று. குடியுங்கள் பாலை நாங்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

**கனகா** — சுழிபுரம்

**இலங்கையிலும் நாணயத்தாள்கள் செல்லாது என்று சட்டம் வந்தால்?**

வரவேண்டும். அப்படி வந்தால்தான் பணம் ஓரிடத்தில் முடங்குவதைத் தடுக்க முடியும். இப்படி ஒரு விடயத்தை கேள்விப்பட்டாலே எங்களில் பலர் சுடுதண்ணீர் குடித்த நாய் போலவும் இஞ்சி தின்ற குரங்கு போலவும் அலைந்து திரிவதை காண முடியும்.

**ராதி - வினோ** — வத்தளை

**மற்றவருக்காக உங்களை மாற்றியுள்ளீர்களா?**

பச்சோந்திகளுக்காய் ஒருநாளும் என் நிலையை மாற்றியது இல்லை. ஆனால் நல்ல மனிதர்களுக்காய், நல்லது நடப்பதற்காய் என்னை பலமுறை மாற்றி அமைத்திருக்கிறேன். மாற்றத்துக்காய் மாறுவதில் ஒன்றும் தவறில்லை.

**உங்கள் கேள்விகளை SMS செய்யுங்கள் 021 567 1532**

**காயத்திரி** — வத்தனை

**பல்லி சொல்வதில் உங்களுக்கு நம்பிக்கை உண்டா?**

தன் துணைக்கு அன்பாய் அழைப்பு விடுவதையும் எதிரிகளை கண்டால் எச்சரிக்கை செய்வதையும் வழக்கமாகக் கொண்ட பல்லியை மனித வாழ்க்கையாடு பொருத்தி தொடர வேண்டிய நல்ல காரியங்களை தடுக்கும் இந்த மூடக் கொள்கைக்கு எதிரானவன் நான்.

**திவி-மது**

**காதலன்-காதலி இரண்டு வாசகம் அமைக்குக?**

காதலன் காதலியுடன் ஓட்டம் எடுத்தான் காதலியின் கணவன் தேடித்திரிந்தான்.

**லக்சன்** — யாழ்ப்பாணம்

**வியாசரே உங்கள் காதல் அனுபவம் எப்படி?**

கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் செய்வதில் பயனில்லையே. இப்போதைக்கு அதைவிட்டு விடுவோமே. அதைவிட எனது மனைவிவேறு கோபக்காரியப்பா.

**ஜெனார்தனன்** — மட்டுவில்

**வாழ்க்கை எவ்வாறு அமைய வேண்டும்.**

வாழ்க்கை இவ்வாறு அமைய வேண்டும் என அமைத்து வாழ்வது வாழ்வல்ல. வாழ்வில் எமக்கு வரும் சவால்களை சரிசெய்து வெற்றி கொள்வதே வாழ்க்கை.

**தனு** — அல்வாய்

**கல்வியைவிட பணமிருந்தால் எதனையும் செய்யலாமா?**

செய்யலாம்.ஆனால் கற்றறிந்த சபையில் நீ ஒரு சாண் கட்டைதான்.

**அச்சுதன்** — கோண்டாவில்

**நேர்மறை சிந்தனை பற்றி?**

என்ன செய்ய. அந்தநாசமறுப்புத்தான்வீட்டில் இருந்து நாடு வரை பரவிப் பற்றிப் பிடித்துக் கிடக்கிறது.

**குணசிங்கம்** — கரவெட்டி

**கிழக்கு மாகாணம் பறிபோகும் என்கிறாரே சம்பந்தர்?**

வடக்கு, கிழக்கு என்று பிரிக்கப்பட்டதோ அன்றைக்கே கிழக்குப் பறிபோகும் என்ற உண்மை யாருக்கும் புரியவில்லை என்பது தான் கொடுமையிலும் கொடுமை. இன்று நிலைமாறி பௌத்த துறவி கிழக்கு சிங்களவர் பூமி என்று போராடுகின்றார். ஒரு பௌத்த துறவியின் போராடும் குணத்தில் எம் தமிழ் அரசியல்வாதிகளுக்கு சிறிதும் இல்லையென்று நினைக்கும் போது இதயம் வெடித்து விடுகிறது எம் தமிழர் எதிர்காலத்தை நினைத்து.

# தாயின் சிகிச்சைக்காக தன்னை விற்ற பெண்





பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த தாய், நோயால் கண்முன்னே அவதிப்படுவதைக் கண்டால் யாருக்குத்தான் கண்ணீர் வராது? எப்படியாவது தாயைக் காப்பாற்றிவிட வேண்டும் என்றுதான் அனைவரும் நினைப்போம். அதுபோலதான் சீனாவைச் சேர்ந்த ஓர் இளம்பெண், புற்றுநோய் பாதிப்பால் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் தன் தாயைக் காப்பாற்ற, தான் எடுத்த வியக்க வைக்கும் முடிவால், சீன மக்களிடையே பரபரப்பாக பேசப்பட்டுவருகிறார்.

அப்படி என்ன செய்தார் தெரியுமா?!

தெற்கு சீனாவின் கவாங்மு நகரைச் சேர்ந்தவர், 19 வயது காவோ மேங்வான் சாதாரண விவசாயக் குடும்பத்துப் பெண். விவசாய வேலைசெய்து அவரையும், அவரின் நான்கு சகோதர, சகோதரிகளையும் காப்பாற்றி வந்தார் காவோவின் தாய். 45 வயதான அவர் சருமப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு கடந்த சில நாட்களாக படுத்த படுக்கையாகிவிட்டார். இவருக்கு சிகிச்சை செய்துவரும் மருத்துவர்கள், "உங்கள் அம்மாவைக் காப்பாற்றவேண்டும் என்றால் சுமார் 30 இலட்சத்துக்கு மேல் செலவாகும் என்று சொல்லிவிட்டனர்.

அவ்வளவு பெரிய தொகைக்கு எங்கு போவது, யாரிடம் கேட்பது என்று குடும்பமே சோகத்தில் ஆழ்ந்திருக்க, ஐந்து பிள்ளைகளில் மூத்தவளான காவோ, தாயைக் காப்பாற்றும் பொறுப்பை தான் ஏற்றுக்கொள்வதாகக் கூறினார். என்றாலும், அவ்வளவு பெரிய தொகைக்கு என்ன வழி என்று தெரியாத நிலையில், தன்னைத் தானே ஒன்லைனில் விற்க முடிவெடுத்துள்ளார்.

சீனா சோஷியல் மீடியாக்களில், "என் தாயின் சிகிச்சைக்காக ரூபாய் 30 இலட்சம் அவசரமாகத் தேவைப்படுகிறது. அந்தத் தொகைக்கு மேல் தந்து உதவுபவர்களுக்கு நான் வாழ்நாள் முழுக்க அடிமையாகி சொன்னபடி நடந்து கொள்ளத் தயார் என்று ஓர் அறிவிப்பை வெளியிட்டார்.

காவோவின் இந்த தியாகம் வைரலாகப் பரவி அனுதாப அலையை ஏற்படுத்த, இதைக் கேள்விப்பட்ட ஒருவர், இப்போது காவோவின் தாய்க்கு உதவ முன்வந்துள்ளார்.

# வாழ்த்துக்கள் தாத்தா



சீனாவைச் சேர்ந்த 80 வயது தாத்தா ஒருவர் பிரபலமடைந்துள்ளார். வோக்கிங் ஸ்டிக் பிடித்து நடக்கும் இந்த வயதில், பஷன் ஷோ நிகழ்ச்சியில் இவர் ஒய்யாரமாக நடந்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியதுதான் இதற்குக் காரணம்.


வாங்க் தேஷன் என்ற இந்தத் தாத்தா ஒரு நடிகரும், பஷன் ஷோ மொடல்களுக்கான வகுப்பு எடுப்பவரும்கூட. பளபளக்கும் சில்வர் நிறக் கூந்தலும், சிக்கென்ற உடம்பும் கொண்ட இந்தத் தாத்தா சமீபத்தில் 80 வயதை நிறைவு செய்திருக்கிறார். கடந்த ஆண்டு முதன் முறையாகத் தானே மொடலாகக்களமிறங்கி நாடு முழுவதும் பேசப்பட்டவர். இவர் சட்டையைக் கழற்றிப் போட்டுவிட்டு காத்தோட்டமாக பஷன் ஷோவில் நடந்ததில், சீனாவின் டீன் ஏஜ் பியூட்டிகள் முத்தங்களைப்பறக்கவிட்டுள்ளனர்.

இணையத்தில் இவருக்கு சீனாவின் Hottest Grandpa என்ற செல்லப் பெயரும் கிடைத்திருக்கிறது.

ஒரு நாளைக்கு மூன்றுமணி நேரம் உடற்பயிற்சி செய்து உடலை பிட்டாக வைத்திருக்கும் இந்தத் தாத்தா பிடித்த விடயங்களைச் செய்ய வயது ஒரு தடையே இல்லை என்பதற்கு உதாரணமாகத் திகழ்கிறார்.

சீனாவில் மட்டுமன்றி உலகம் முழுக்க இவருக்குத் தற்போது வாழ்த்துகள் குவிந்து கொண்டிருக்கின்றன!

# பறக்கும் கார்



ஆம்பள பட விஷாலையும், இயக்குநர் ஹரியையும் இனிமே யாருமே குறை சொல்ல முடியாத அளவுக்கு ஒரு கார் வந்திருக்கு. கார் எப்படி வானத்துல பறக்கும்னு இவங்களைப் பார்த்து கேட்டவங்களுக்கெல்லாம் இந்த கார்தான் பதில். ஏரோமொபைல் நிறுவனம் தயாரித்திருக்கும் புதிய அறிமுகம் தான் பறக்கும் கார். ஸ்லோவாக்கியன் ஸ்டார்ட் அப் தான் இந்த காரை தயாரிச்சிருக்காங்க.

இந்த கார் தரையிலிருந்து 650 அடி உயரம் வரை மேலெழும்பிப் பறக்கும் திறன் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் எரிபொருள் கலனை முழுமையாக நிரப்பினால் 430 மைல் தூரம் வரை பயணிக்கலாம்.

தரையிலிருந்து 164 அடி உயரத்தில் இருக்கும்போதுகூட தரையிறக்க முடியும். அதேபோல் சமதளத்தரை அனை த்திலும் தரையிறக்க முடியுமாம்.

பக்கவாட்டுக் கதவுகள் இறக்கைகளாக மாறும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ள இந்தக் கார் மணிக்கு 124 மைல் வேகத்தில் பறக்கக்கூடியது.

இது தரை மற்றும் ஆகாய மார்க்கத்தில் பயணிக்கூடியதாக இருப்பதால் ஓட்டுநர் பைலட் லைசென்ஸ் பெற்று ஓட்ட வேண்டும். விமானப் போக்குவரத்துத்துறையின் அனுமதிக்குக் காத்திருக்கும் இந்தத் தயாரிப்பு 2017இல் விற்பனைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இராணுவம், பொலிஸ் மற்றும் மருத்துவ சேவைகளுக்கு இது மிகவும் உதவும் என இதன் தயாரிப்பாளர்கள் கூறுகிறார்கள்.

# துப்பாக்கிச் சூட்டில் அசத்தும் பாட்டி



பாட்டிய வெத்தல பாக்கு நசுக்கிப் பாத்திருப்ப. சமையல் செஞ்சு பாத்திருப்ப... ஏன் தடிய எடுத்துட்டு அடிக்க ஓடி வர்றதக்கூட பாத்திருப்ப. துப்பாக்கி எடுத்து சுடுறதை பார்த்திருக்கியா? என்று பஞ்ச் பேசலாம் போல் இருக்கிறது சந்திரா தாமஸ் பாட்டியைப் பார்க்கும்போது! உத்திரப்பிரதேசம் மாநிலத்தில் வசிக்கும் இந்தப்பாட்டி தினமும் காலை 8 மணியிலிருந்து 12 மணி வரையிலும் துப்பாக்கி சுடுவதில் பிஸி! 78 வயது ஆகும் பாட்டிக்கு ஆறு பசங்களும் 15 பேரக் குழந்தைங்களும் இருக்கிறார்கள். குறி பார்த்து சுடுவதில் கில்லியான இந்தப் பாட்டி துப்பாக்கியைப் பிடிக்க ஆரம்பித்ததே 65 வயதில் தானாம்!

பேத்திக்கு 11 வயதாக இருக்கும்போது துப்பாக்கி சுடும் பயிற்சிக்குத் துணையாக பாட்டியும் போயிருக்கிறார். பேத்தி பயந்து நடுங்குவதைப் பார்த்து கடுப்பான பாட்டி ஒரு கட்டத்தில் நேராக ரேஞ்சுக்குள் போய் துப்பாக்கியைக் கையில் எடுத்து டுமீல் டுமீல் என இலக்கைக் குறிவைத்து சுட்டிருக்கிறார். ஷார்ப்பான அந்த ஷொட்ஸைப் பார்த்த பயிற்சியாளர் ஆச்சர்யமாகி பேத்திக்குப் பதில் பாட்டிக்குக் கோச்சிங் கொடுக்க 78 வயசிலும் உ.பி அறிந்த பிரபலமாகி விட்டார் பாட்டி! 40 வயசானாலே கை நடுங்கும்போது இந்தப் பாட்டி எப்டி இப்டி? ராத்திரில எல்லாரும் தூங்கினதுக்கு அப்புறம் ஒரு கைல ஜக்கில் தண்ணிய வெச்சிட்டு ஒரு மணி நேரம் நின்னு பிராக்டீஸ் செய்றது பிடிக்கும். ஒரு சொட்டு தண்ணிகூட சிந்தாது என்று சொல்லும் பாட்டிதான் அந்தக் குடும்பத்துக்கு மூத்த மருமகளாம்! தாத்தாக்களோட வீரத்தைச் சொல்ற மாதிரி யாராச்சும் பாட்டிங்களோட வீரத்தைச் சொல்ற படம் எடுத்தா இந்தப் பாட்டி நிச்சயம் ஒரு ரோல் மொடலா இருப்பாங்க..!

# கவிதைக் கலசம்



## ஏழையின் ஏக்கம்

உலகில் விஞ்ஞானம்
விழுந்து கொண்டிருக்கின்றது
எமக்கு மட்டும் பொழுதுகள்
விடியவில்லை
நாம் ஏழைகள் தான்
ஆனால் பூமியை துளைக்கும்
வேர் நாங்கள்
நல்லதைச் சொல்லி வாழ
வைக்க வையகத்தில்
யாருமில்லை எங்கள்
மீது வெளிச்சம் காட்டுங்கள்
எமக்கும் நாகரிகம்
சொல்லித் தாருங்கள்
நாமும் மனிதர்கள்தான்
எங்கள் ஏழைக் குடிசையில்
மட்டும் ஏன் வசந்தம்
உட்கார மறுக்கின்றது

த.சர்மினி
புதிய கற்பகபுரம்

## றவாத கணக்கு

முந்து பறித்த கைகள்
ந்து சோர்ந்து
விறைப்படைந்து விட்டன!
கருகிப்போன
தேயிலைச் செடிகளாய்...?
விதிசெயப் பிறந்த இனம்
சிதையாய் வீழ்வதேன்?
விட்டு விடுங்கள் அவர்களை
கசக்கிப் பிழிந்து
உதிரம் உறிஞ்சுவதை...
இனக்கணக்கு சுட்டிக்கும்
இணக்கமற்ற அரசியற்கும்
கணக்குப் போட மறப்பதில்லை
மலையகத்து மாந்தர்களை
எமது அரசு– ஆனால்
மண்சரிவும்
மாறாத லயங்களும்
மகிழ்வற்ற வாழ்வும் சூழ்ந்து
சோகங்களால்
தொடுக்கிறது– மாலை
மலைத்தொடர்களாய்...!

மடத்துக்கடவை
த.மோகன்ராஜ்

## முயற்சிகள் முற்றுப்புள்ளியற்றவை

உடைத்தெறி
உனக்கும்
தோல்விக்குமான உறவை
விழித்திரு...
வியர்த்திரு...
வீழ்ந்தாலும்
வீறு கொண்டெழு
சோர்ந்திருந்து
சோகம் இசைக்க
சோம்பேறி அல்லவே– நீ...
சுடர்விட்டெரியும்
தூண்டாவிளக்கு
அலுக்காது கரை உரசும்
அலைகள் கண்டு,
சலிக்காது வாழ்க்கையை
வாழக்கற்றுக்கொள்
இதயம் இளைப்புறாவரை
இறுதிமூச்சு சொந்தமில்லை
முயற்சிகள் முடியாதவரை
முன்னேற தடையுமில்லை
எண்ணங்களில் ஏணி செய்...
ஏகாந்தத்தை உடனிருத்து...
மின்னலாய் வேகம் கொள்
மின்மினியில் ஓர் தேசம் காண்

வேலணையூர் தனு

மலரும் சுதந்திரத்தை
மனதில் நினைத்தபடி
சாவைத் தழுவிய
எம் சரித்திர வீரர்களே

நீர் சிரித்து
கை அசைத்து சென்ற நாட்கள்
எம் நெஞ்சை விட்டகலா
நினைவுகளாய் ஆடுதன்றோ

கொளுத்தும் வெயிலோ
கொட்டும் மழையோ
எம் சரித்திர விடிவுக்காய்
உயிர்கொடுத்த உமை
எப்படி மறப்பது

வீரன் புதைக்கப்படுவதில்லை
விதைக்கப்படுகிறான்
என்ற எண்ணங்களுடன்
விதையாகினீரே எமக்காய்

எரிவது தீபங்களல்ல
எம் இதயங்கள்
உம் நினைவுகளை தாங்கியபடி
எரிந்து கொண்டேயிருக்கும்
கனவுகள் நினைவாகும் வரை...

மாவை.நா.கஜேந்திரன்



# மௌனத்தின் தேடல் 329

## தூரிகை இல்லா சித்திரம்

தம்பி ஆயகலைகள்
அறுபத்து நான்காம்
தூயகலை தூரிகை
இல்லாமல்
உன் கரங்களால்
ஓட்டும் சித்திரம்
அழகு கலையில் மட்டும்
திறமையைக் காட்டாது
கல்லூரிக் கல்வியிலும்
திறமையைக் காட்டு
உன் உயர்வு கண்டு
பெற்றோரும் கற்றோரும்
ஏன் நாமும் வாழ்த்துவோம்

எஸ்.எல்.கே. சங்கானை

## விரைந்து எழுந்திடு

கட்டாயக் கல்வி
வயதெல்லையில்– நீ
கடுமையாய் உழைப்பது ஏன்
வறுமையின் வாட்டமோ
வற்புறுத்தலின் ஓட்டமோ
விரைந்து எழுந்திடு
வெற்றியின் ஆரம்பமாய்
கல்வி ஒன்றால் மட்டுமே
உன் கையை உயர்த்திட முடியும்
பார்த்து பார்த்து
சேர்க்கும் பணம்
பாதியிலே நின்றுவிடும்
நாளைய தலைவராக எமக்கு
கல்வி ஒன்றே
கரம் கொடுக்கும்

ஜெ.தவேதன்
யாழ்.இந்துக் கல்லூரி

## வீண்பொழுது போக்காதே

வாழப்பிறந்து விட்டோம்
வாழ்ந்துதானே ஆகவேண்டும்
செய்தொழிலெதுவுமின்றி
வெட்டிப் பொழுது போக்கும்
இளைஞர்களே சிந்தியுங்கள்
சிறுவனின் துணிவைப்
பாருங்கள்
மற்றவர்களை எதிர்பாராது
சொந்தக் காலில் நிற்கப்
பழகுங்கள்
கைத்தொழிலொன்றைக்
கற்றுக்கொண்டு
கவலையின்றி வாழுங்கள்

தீபிகா
மட்டுவில் தெற்கு

## கல்விக்குப்பின் உழைப்பு

படிக்கும் வயதில் உழைப்பு
அது உன் உயர்வைக்
கெடுத்திடும்– தம்பி
வாழக் கல்வி இல்லையேல்
யாவும் செத்திடும்
கற்றிடும் கல்வியின்
தனிப்பெரும் அர்த்தம்– நீ
புரிந்து நித்தம்
வாழ்ந்திட்டால்– எங்கள்
ஈழ எம் தாய் நாட்டையும்
ஆள வழிகள் பிறந்திடும்

அ.ரஞ்சிதா
கிளிநொச்சி

## எழுந்து வா

சின்னப் பையனே
பானையை வடிக்கும்
உன் குட்டிக் கைகள்
புத்தக கட்டுக்களை சுமந்தால்–
இந்த உலகில் நூறாண்டு
காலம் வாழ முடியும்
எழுந்து வா தம்பி

சி.பிரியங்கா
மட்டுவில் தெற்கு

## கவலை

நிறையச் சட்டிகளைத் தந்த
கடவுள் இந்த ஏழைச்
சிறுவனுக்கு உலையில் போட
அரிசியைத் தரவில்லையே

சு.ஜெயரூபன், பருத்தித்துறை

## உழைத்து வாழ்...

உன் உளம்வெண்டஉழைப்புக்கு
உலகின் ஆசி கிட்டும்
பள்ளி வயதில் நீ செய்யும்
பண்பான பணி கண்டு
பண்பாளர் போற்றிடுவர்
வருங்கால உழைப்புக்கு
வழிதேட இடம் விடாது
வசதி செய்யும் வெளிநாட்டார்
வெளிநாட்டார் பிச்சையில்
வேடம் போட்டு வீரம் பேசி
வேடிக்கை காட்டும்
இளைஞர்களே
வேதனைக்கு இடமுண்டு
எதிர்காலத்தில் வெற்றி கிட்டும்
உனக்கு வேண்டி நின்று
செயல் செய்திடுவாய்

அனிஞ்சில் புவபாலன்

## மண்

பரம்பரை தொழில்
இதுவென
பெற்றோர் காட்டிய
தொழிலில்
மண் பாத்திரங்களின்
காட்சி எழிலாய்!
வனையும் வாழ்வாதாரத்
தொழில்!
வனப்புடன் மண்
பாத்திரங்களை
விருப்புடன்
உருவாக்குகிறான்
சிறுவன்!
மண்ணே மூலப்பொருள்!
தாய் மண்ணே
மூலப்பொருள்!
பிறந்த மண்ணே
மூலப்பொருள்! என
உணர்த்தும் தாய் மண்ணை
காத்திடவும் முடியும்
இருப்பின் உரிமைக்காய்

சி.சுசிர்தமலர்
உரும்பிராய்

# மௌனத்தின் தேடல் 330



அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர் பதி
லுக்கான கேள்விகளை
ஆசிரியர்
மௌனத்தின் தேடல்
சங்குநாதம்
இல.3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு 30.11.2016 ஆம்
திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.

குறிப்பு: குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே முன்
னுரிமை வழங்கப்படும்.
– ஆசிரியர்–

சிறுகதை

# கார்த்திகைப்பூக்கள்





இரவு முழுவதும் சோவெனக் கொட்டிய கனமழையினால் நிலம் சேறும் சகதியுமாய் காட்சியளித்தது. ஆங்காங்கே சிறுசிறு குட்டைகளாய் செம்புனல் தேங்கிக் கிடந்தது. துயில் கலைந்து போனதால் இன்பன் எழுந்து வந்து வீட்டு முற்றத்தில் நின்றவாறு ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தான். கருமுகில்கள் மழையைப் பிரசவித்து ஓய்ந்து போனதால் வானம் வெளுத்திருந்தது. சில்லென்று வீசிய வாடைக் காற்று வந்து தழுவியதால் அவனது மேனி சிலிர்த்தது. எதையோ நினைத்துக் கொண்டவனாய் அவன் கைகளிரண்டையும் நெஞ்சுக்குக் குறுக்காக கட்டியவாறு பின் வளவை நோக்கி நடந்தான்.

வளவின் மேற்குப்புற மூலையில் பெரிய பனம் பாத்தி போடப்பட்டிருந்தது.அதை நோக்கி அவனது கால்கள் நகர்ந்து கொண்டிருந்தன.சேற்று நிலத்தில் கால்கள் புதைய அவன் மிக அவதானமாக அடி எடுத்து வைத்து நடந்து கொண்டிருந்தான். அவனது காலில் அணிந்திருந்த செருப்புகள், அவன் ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும்போதும் சேற்றை அள்ளி அவனது முதுகுப்புறத்தில் தெளித்துக் கொண்டிருப்பதையும் அவன் பொருட்படுத்தவில்லை.ஒரு உத்வேகத்துடன் பனம் பாத்தியை வந்தடைந்து விட்டான்.

வந்தவன் ஆவலுடன் பனம்பாத்தியின் மேற்பரப்பை ஒரு தரம் நோட்டம் விட்டான். அவனது கண்கள் மலர்ந்தன.இரண்டு நாட்களுக்குமுன் அவன் அங்கு சில வற்றாளைத் தண்டுகளை நட்டு வைத்திருந்தான். இரவு பெய்த கனமழைக்கு அவை அடிபட்டுப் போயிருக்கலாம் என்ற சந்தேகத்தைத் தீர்ப்பதற்காகவே அவன் அத்தனை சிரமப்பட்டு அவ்விடத்திற்கு வந்திருந்தான். அவனால் தனது கண்களையே நம்ப முடியவில்லை.கன்றுகள் அனைத்தும் உயிர்பெற்று இலைகள் நிமிர்ந்து நின்றன. என்னவோ அவனுக்கு வற்றாளைக் கிழங்கென்றால் நாட்டம் அதிகம். அவனுடைய குட்டிமாமாவும் வற்றாளைக்கிழங்கு பிரியன் என்று அவனுடைய அம்மம்மா அடிக்கடி சொல்லிக் கொள்வாள். அவனது அலுவலக நண்பன் மூலம் கிடைத்த இந்த வற்றாளைத் தண்டுகளை உருவாக்கி இனம் அழியாமல் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற ஆதங்கம் அவனுக்கு. கன்றுகளின் உயிரூட்டம் தந்த மனத்திருப்தியுடன் அவன் வளவைத் திரும்பிப் பார்த்தான்.

டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு சில வாரங்களின் முன் இரண்டு கூலியாட்களின் உதவியுடன் செதுக்கித் துப்புரவாக்கி தரிசு நிலமாக கிடந்த தரை புற்களாலும் பூண்டுகளாலும் மண்டிக் கிடந்ததைப் பார்த்த அவனுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. திரும்பி நடக்க எத்தனித்தவனது கண்களில் பச்சைப் புற்களுக்கு நடுவே சில பூக்கள் அவனைப்பார்த்து கண் சிமிட்டுவதாய்த் தோன்றியது. அருகில் போய் அந்தப் பூக்களை உன்னிப்பாகக் கவனித்தான். ஆம் அது கார்த்திகைப் பூவே தான். அவனது மனதில் இனம் புரியாத ஒரு தவிப்பு. கார்த்திகை மாதம் பிறந்ததும் இந்தச் செடிகள் தாமாகவே முளைத்து அழகான புஸ்பங்களையும் மலர வைக்கின்றனவே.இதுதான் இயற்கையின் சிருஷ்டி போலும் மனம் நினைத்துக் கொண்டது.

இதேபோன்றஒரு கார்த்திகை மாதத்து மழைப்பொழுதான அந்த நினைவகலா நாள் அவனது எண்ணத்தை முற்றாக ஆக்கிரமித்துக் கொண்டது. மழை தூறுவதையும் பொருட்படுத்தாது அவனுடைய அம்மா முற்றத்து நித்திய கல்யாணியில் பூப்பறித்துக் கொண்டிருக்கிறாள். ஐந்து வயதுச் சிறுவனான இன்பனும் அம்மாவுக்கு உதவியாக மரத்தின் கீழ்க் கொப்புகளில் மலர்ந்திருந்த பூக்களை தனது பிஞ்சுக்கரத்தினால் பறிக்க முற்பட்ட அந்த வேளையில் அம்மம்மாவின் அதட்டல் குரல் கேட்கிறது.

இந்திரா! பிள்ளை மழையில நனைஞ்சு கொண்டிருக்குது. நீ என்ன பார்த்துக் கொண்டிருக்கிறாய்?

ஏதோ யோசனையில் மூழ்கியிருந்த அம்மாவை அவளது குரல் திடுக்கிட வைக்கிறது. அதற்கிடையில் அம்மம்மா ஓடி வந்து அவனை வீட்டுக்குள் இழுத்துப் போனதுமல்லாமல் தனது சேலைத் தலைப்பினால் அவனது தலையையும் துவட்டி விடுகிறாள்.

ஏனப்பு மழைத் தூறலுக்கை போனநீ. மழையில நனைஞ்சால் என்ரை குஞ்சுக்கு தடிமல் பிடிச்சிடுமே.

ஆதங்கத்துடன் அவனது தலையைக் கோதி விட்டாள். இன்பன் மீது அம்மம்மா உயிரையே வைத்திருந்தாள். என்ரை பிள்ளை தான் வந்து எனக்குப் பேரனாய் பிறந்திருக்கிறான். அவனுடைய குணாதிசயம் முழுக்க முழுக்க இவனில இருக்கு! என்று அடிக்கடி சொல்லிக் கொள்ளுவாள்.அதுமட்டுமல்ல அவள் தனது மகனின் பெயரையே பேரனுக்கும் வைக்க வேண்டுமென முனைப்பாக நின்று இன்பன் என்ற பெயரையும் வைத்து விட்டாள். சும்மா சொல்லக்கூடாது. இன்பனுக்கும் அம்மம்மா என்றால் அதீத பட்சம் தான்.

மாலை தொடுத்துக் கொண்டிருந்த இந்திராவிடம் இன்பன் வந்து மெதுவாகப் பேச்சுக்கொடுத்தான்.

அம்மா! இண்டைக்கு நாங்கள் கோயிலுக்குப் போறதா?

சிறுவன் மனதில் ஏற்பட்ட சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வதில் கருந்தனமாயிருந்தான். ஏனெனில் அம்மா சதுர்த்தி விரதத்திலன்று பிள்ளையாருக்கு மாலை தொடுத்துக் கொண்டு போவது வழக்கம். போகும் போது மகனையும் உடன் அழைத்துப் போவாள். ஆனால் இன்று மழையைக் காரணம் காட்டி தன்னைத் தவிர்த்துவிட்டுப்போய் விடுவாளோ என்றொரு ஏக்கம் அவனது மனதில் துளிர்த்திருந்தது. இல்லை ராசா. இண்டைக்கு நாங்கள் மாமாட்ட போகப் போறம்.

மாமா இறந்திட்டார் என்று நீங்கள்தானே சொன்னனீங்கள்.

இண்டைக்கு அவர் எழும்பி எங்களைப் பார்ப்பார்.

இன்பனுக்கு தலை கால் தெரியாத புளுகம் ஏற்பட்டது. கேள்விக் கணைகளால் அம்மாவைத் துளைத்தெடுக்கத் தொடங்கினான். அம்மாவோ ஒரே அதட்டலில் அவனை அடக்கிவிட்டாள்.

சும்மா தொணதொணத்துக் கொண்டிருந்தால் உன்னை விட்டிட்டுத்தான் போவம். சத்தம் போடாமல் நல்ல பிள்ளையாயிருந்தால் தான் கூட்டிக்கொண்டு போறது.

இன்பனும் வாலைச் சுருட்டி வைத்துக்கொண்டு அன்றைய பொழுதை அங்கலாய்ப்புடன் கழித்தான். அன்று மாலை மழை சற்று விட்டிருந்தது. வீட்டில் அனைவரும் புறப்பட்டுப் போனார்கள். வழியெங்கும் ஒரே சனக்கூட்டம். எல்லோரும் பூமாலைகள்,பூக்கள், ஊதுபத்திகள், மெழுகுவர்த்திகள் என வழிபாட்டிற்குப் போகும் பக்தர்கள் போல காணப்பட்டார்கள். வளாக வாசலை அடைந்தார்கள்.

அப்பா இன்பனைத்துக்கிக் கொண்டார்.உயரத்தில் இருந்து வேடிக்கை பார்க்க இன்பனுக்கு அநுகூலமாய் இருந்தது. வரிசை வரிசையாய் நிறைய அறைகள் கட்டப்பட்டிருந்தன. பூஞ்சோலை போல் காட்சியளித்த அந்த மைதானத்தில் மின்விளக்குகள் ஒளிபரப்பிக் கொண்டிருந்தன. மாமாவின் இருப்பிடத்தை அண்மித்ததும் அப்பா அவனைக் கீழே இறக்கி விட்டார். நிலத்தில் கால்பட்டதுமே ஒரு புனித பூமியில் தான் நிற்பது போன்ற ஓர் உணர்வில் அவனது மனம் திளைத்தது.மாமாவின் பெயர் அங்கு பொறிக்கப்பட்டிருந்ததைக் கண்டதும் அவனுக்கு உடல் புல்லரித்தது.

நிச்சயம் இந்த அறைக்குள்ளதான் மாமா இருக்க வேண்டும் மனதுக்குள் நினைத்துக் கொண்டவன் அம்மாவிடம் அதைப்பற்றி விசாரிக்கலாமென்றால் பெட்டிப் பாம்பாக அவள் சீறி விழுவாள் என்பது அவனுக்கு நன்கு தெரியும்.எனவே மௌனமாய் இருந்து நடப்பதைக் கண்டு கொள்ளுவோம் எனவாளாவிருந்தான்.அம்மா தான் கட்டி வந்த பூமாலையை எடுத்து அம்மம்மா விடம் கொடுக்க அதை வாங்கிய அம்மம்மாவின் கைகள் நடுங்கின. ஐயோ என்ரை ராசா. என்னை விட்டிட்டுப் போக எப்படியடா உனக்கு மனம் வந்தது.

அம்மம்மா அழுவதைப் பார்க்க இன்பனுக்கும் அழுகை அழுகையாய் வந்தது. அவனையறியாமலே அவனது கண்கள் நீரைச் சொரிந்தன. இதற்கிடையில் பக்கத்தில் ஓர் அம்மாவின் புலம்பல் அவனது உள்ளத்தை உருக்கியது.

அம்மா வீட்டுச் சாப்பாடு சாப்பிட்டு நாளாச்சுது. இண்டைக்கு சமைச்சு வையுங்கோ.சாப்பிட வருவன் எண்டு சொல்லிப் போட்டுப் போனியே.நீ வருவாய் எண்டு சமைச்சு வைச்சுக் காத்திருந்தன் என்னை ஏமாத்திப் போட்டியே.

ஓவென்று குரலெடுத்து அழுதவள் அந்த அறையின் மீது தலை வைத்து கதறினாள். இப்படியாக அந்தப் பெரிய வளாகம் முழுவதும் அழுகுரல்களால் அல்லோலப்பட்டது.இவற்றைப் பார்த்த இன்பனுக்கு மனம் விறைத்துப் போனது.

திடீரெனக் கேட்ட மணியோசையுடன் எங்கும் நிசப்தம் குடிகொண்டது. ஊதுபத்திகளின் வாசனை மூக்கைத் துளைத்தது. எல்லோரும் விளக்கை ஏற்றினார்கள். மாமாவின் முன் இருந்த விளக்கை அப்பா ஏற்றினார்.

வீட்டிற்கு வந்ததும் அம்மம்மா நெஞ்சைப் பொத்திப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டாள்.அம்மா சுடச்சுட கோப்பி தயாரித்து வந்து கொடுத்தாள்.

நாள்முழுதும் வெறு வயித்தொட கிடந்தது மட்டுமல்லாமல் அங்கை வெறுங்காலோட ஈரத்துக்கையும் நிண்டதால தான் நெஞ்சுக்கை வலிக்குதாக்கும்.


அம்மா அங்கலாய்ப்புடன் சொல்லிக் கொண்டிருந்தாள்.இன்பனுக்கு அம்மம்மா படும் வேதனை பொறுக்கவில்லை. ஓடிவந்து அவளது நெஞ்சைத் தடவி விட்டான். அவனைப் பார்த்த வாறே கண்கள் சொருகிய நிலையில் அம்மம்மாவின் தலை சரிந்தது. அதை ஒருவரும் எதிர்பார்க்கவி ல்லை. இன்பன் துடித்துப் போனான். மக த்துவமான அந்த மைந்தனைப் பெற்றெடுத்த தாயின் பிரிவு இன்பனை வெகுவாகப் பாதித்துவிட்டது.

கண்களில் பனித்த நீரை கையினால் துடைத்துக் கொண்டவனாய் கார்த்திகைப்பூக்களை ஒருதரம் உற்றுப்பார்த்தான்.ஊதல் காற்றின் ஸ்பரிசத்தினால் அவை நிமிர்ந்து நின்று சிரித்தன.

**மலரன்னை**

# கண் சிமிட்டி எழுதிய புத்தகம்






இந்த வாழ்வின் மீது நம்பிக்கையிழந்து சோர்வுடன் இருக்கும் தருணங்களிலும் மிகுந்த நேசத்திற்கு உரியவர்களைப் பிரிய வேண்டிய சூழ லிலும் மனம் கடுமையான வேதனையில் சுழலும்.அந்த நேரத்தில் மனதில் உள்ள துயரங்களை யாரிடமாவது கொட்டித்தீர்த்து விட நினைப்பீர்கள். அப்போது அருகில் யாருமே இல்லாத போது சில புத்தகங்கள் , அவற்றிலுள்ள வாழ்க்கை கள் மனதிற்கு ஒரு புத்துயிர்ப்பைத் தரும். இந்த மாதிரி மன திற்குள் ஒரு புதிய உணர்வை சில புத்தகங்களும் சில வாழ்க்கைகளுமே தருகின்றன. அப்படிப்பட்ட ஒரு வாழ்க்கையைச் சொல்லி யிருக் கிறது (The diving bell and the butterfly) என்கிற புத்தகம்.

**பி**ரான்ஸ் நாட்டின் புகழ் பெற்ற பத்திரிகையாளராக இருந்த லான் டொமினிக் பாபி என்ற எழுத்தாளரின் சுயசரிதை தான் இந்தப் புத்தகம் 43 வயதில் அவரின் மூளைக்குள் மின்னல் கீற்றைப் போல் பாய்ந்த அதிர்வுகள் மூளையைக் கடுமையாகத் தாக்கிப் படுக்கையில் வீழ்த்தி விடுகின்றன. நாளடைவில் அவரின் இடது கண்ணைத் தவிர்த்து மற்ற உறுப்புக்கள் லாக்டு இன் சிண்ட்ரோமா இல் செயலிழந்து விடுகின்றன. பாபி தன் இடது கண் இமையைச் சிமிட்டியே இந்தப் புத்தகத்தை எழுதியிருக்கிறார்.

பாபி ஒருமுறை கண் இமையைச் சிமிட்டினால் அது ஆம் என்று அர்த்தம். இரண்டு முறை தொடர்ந்து சிமிட்டினால் இல்லை என்று அர்த்தம்.அவருக்கு உதவியாளராக இருக்கும் பெண். பிரெஞ்ச் மொழியில் உள்ள எழுத்துக்களை ஆரம்பத்தில் இருந்து நிறுத்தி ஒவ்வொன்றாகச் சொல்லுவார். பாபி தான் எழுத வேண்டிய வார்த்தைக்கு ஏற்ற எழுத்து வந்தவுடன் ஒரு முறை கண் இமையைச் சிமிட்டுவார். இதே மாதிரி அடுத்த பிற எழுத்துக்களைச் சேர்த்து, தான் எழுத வேண்டிய வார்த்தையை கண் இமையைச் சிமிட்டுவதன் வழியாகவே வெளிப்படுத்துவார். பாபி கண் இமையைச் சிமட்டி வெளிப்படுத்தும் வார்த்தையை அந்தப் பெண் எழுதுவார். இப்படி ஒவ்வொரு வார்த்தையாக எழுதி உருவானது தான் (The diving bell and the butterfly )

பாபி இந்தப் புத்தகத்தை எழுத சுமார் இரண்டு இலட்சம் முறைகள் கண் சிமிட்ட வேண்டியிருந்தன. ஒரு வார்த்தையை உருவாக்க இரண்டு நிமிடங்கள் எடுத்துக் கொண்டார். தினமும் நான்கு மணி நேரம் என்று பத்து மாதங்கள் இந்தப் புத்தகத்துக்காக பாபியும் அந்தப் பெண்ணும் உழைத்திருக்கின்றனர். எல்லா இதயங் களிலும் நம்பிக் கையை விதைக்கும் இந்தப் புத்தகம் வெளியான முதல் நாளே 25,000 பிரதிகளும் இப்போது மில்லியன் கணக் கிலும் விற்பனையாகிக் கொண்டிருக்கின் றன.

பாபி இந்தப் புத்தகத்தை எழுத வேண்டும் என்பதற்காகவே பிறந்திருக்க வேண்டும். அந்த எழுத்தின் மீதான நேசம் தான் அவரை உயிருடன் வைத்திருந்தது. புத்தகம் வெளியான பிறகு அடுத்த இரண்டு தினங்களில் அவர் இறந்து விட்டார். உடல் வேதனையால் துவண்டு போன நெஞ்சங்களில் நம்பிக்கையைப் பாய்ச்சுகிற ஒரு வாழ்க்கையை நம்மிடம் விட்டுச் சென்ற பாபி அழுத்தமாக இதைச் சொல்கிறார்.

இனி நான் என் நிலையை எண்ணி கழிவிரக்கம் கொள்ளப்போவதில்லை. என் உடல் செயலிழந்து போனாலும், இடது கண்ணைப் போலவே என் நினைவுகளும் கற்பனையும் இன்னும் உயிர்ப்புடனே இயங்குகிறது. என்னால் எழுந்து நடக்க முடியாது. ஆனால். என் கற்பனை உலகில் நான் சஞ்சரிப்பேன். வேகமாக ஓடுவேன், சத்தமாகப் பாடுவேன். என் இளம் பருவக் காதலியைச் சந்திப்பேன். எனக்காக அவளும் காத்திருப்பாள். இருவரும் கடற்கரைக்குச் செல்வோம்.காதலின் மகிழ்ச்சியைப் பகிர்வோம். முழு விடுதலை உணர்வுடன் இந்த வாழ்வைக் கொண்டாடுவேன்... தந்தை என்னிடம் பிறந்த நாள் வாழ்த்துக்களைச் சொன்ன போது அவருக்குப் பதில் சொல்ல முடியாமல் போன நிலையை எண்ணி வருந்த மாட்டேன். குழந்தைப் பருவத்தில் தந்தையுடன் ரயில் பாதையின் ஒரத்தில் விளையாடிக் கொண்டிருந்ததை நினைத்து மகிழ்வேன்.

இந்தப் புத்தகத்தை ரொனால்ட் கார்வுட் அருமையான திரைக் கதையாக உருவாக்க பாபி தன்னுடைய இடது கண்ணால் இந்த உலகை எப்படிப் பார்த்தாரோ அதே கோணத்தில் கமராவின் கண்கள் காட்சிகளைப் பதிவு செய்ய இந்தப் புத்தகம் அந்தப் பெயரிலேயே திரைப்படமாக்கப் பட்டுள்ளது. படத்தை இயக்கியவர் ஜூலியன் சினபால்.

பாபியின் இடது கண்ணைப் போல , அவரது நினைவுகளும் கற்பனையும் இன்னும் பல நூறு வருடங்கள் புத்தகம் மற்றும் திரைப்பட வடிவில் இயங்கிக் கொண்டே இருக்கும்! ●






**ம**ரங்கொத்திப் பறவை தெரியும் ; மரக்கோழி (**WOOD COCK**) ? மேற்குத் தொடர்ச்சி மலைகளில் காணப்படும் இப் பறவைகளின் அலகு ஒரு குச்சி போல நீண்டிருக்கும். இது மரத்தைக் கொத்தாது.தரையில் இந்த அலகைத் தட்டித் தட்டி புழு, பூச்சிகள் இருப்பதைக் கண்டுபிடித்துவிடும்; உடனே இரையாக்கிக் கொள்ளும்

**❖ வயசு ஒரு பொருட்டா?**

இந்தியாவில் பிரிட் அரசு அமைய அடி கோலிய ராபர்ட் கிளைவ், தனது 18ஆவது வயதில் கிழக்கிந்தியக் கம்பனியில் கணக்காளராக வேலை பார்த்தார். தாமஸ் மெக்காலே என்ற பிரிட்டிஸ் எழுத்தாளர் சுருக்கமாக உலக வரலாற்றைத் தன் 7 ஆவது வயதில் எழுதினார்.மங்கோலிய மன்னன் செங்கிஸ்கான் தனது 16 ஆவது வயதில் சீனாவின் பல பாகங்களைப் போரிட்டுத் தன் வசமாக்கினான். அவன் பட்டத்திற்கு வந்தது 14ஆவது வயதில்.

**❖ பெரிய பாக்கெட் கடிகாரம்.**

சட்டைப் பைக்குள் வைத்துக் கொள்ளும் பாக்கெட் கடிகாரத்துக்கு முன்னோடி பைக் கடிகாரம். ஆமாம், அத்தனை பெரிசு. ஒரு பெரிய பையில் போட்டு எடுத்துக் கொண்டு போகும் அளவுக்கு! இந்தக் கடிகாரத்தின் சொந்தக்காரர்கள் பலர். சம்பளத்துக்கு வேலையாளை வைத்துக் கொண்டு , தம்முடனேயே கடிகாரத்தைச் சுமந்து வரச் செய்தார்கள்!

**❖ நிரந்தர வானவில்**

பொதுவாகவே நாம் வானவில்லை காலை அல்லது மாலைப் பொழுதில்தான் காண முடியும். ஆனால் நிரந்தரமான வானவில்லைக் காணவேண்டுமானால் நாம் நயாகரா நீர்வீழ்ச்சிக்குத் தான் செல்ல வேண்டும். 167 அடி உயரத்திலிருந்து விழும் இந்த அருவியின் நீர்த்தி வலைகள் வானில் நிரந்தரமான வண்ணவில்லை உருவாக்குகின்றன.




**❖ செவியின் சிறப்பு**

கற்றலின் நன்று கேட்டல் என்பார்கள்.அதாவது படிப்பதை விட கேட்பதால் நிறைய விடயங்களை உடனே கிரகித்துக் கொள்ள முடியும் என்று பொருள். அந்நாளைய குரு குலக்கல்வி என்பது இப்படிப்பட்டது தான். அதனால் தானோ என்னவோ நாம் பிறக்கும் போதே முழு வளர்ச்சியடைந்த எலும்பு, காது எலும்பாக இருக்கிறது!

**❖ என்ன நம்பிக்கைகளோ!**

நைஜீரியாவில் இரட்டைக் குழந்தைகள் பிறந்தால் அபசகுனம் ; ஜப்பானில் 4,9 எண்கள் அதிர்ஷ்டமில்லாதவை ; இத்தாலியருக்கு ஆந்தை அதிர்ஷ்ட தேவதை ; சீனர்களுக்கு 8 அதிர்ஷ்ட எண் . கழுதைகள் காதை வீசி ஆட்டினால் விடியும் முன்பு மழை பொழியும் என்பது பிரான்ஸ் நாட்டு மக்களின் நம்பிக்கை.

**❖ பல மொழிக் குறள்.**

திருக்குறள் உலகின் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. உலகெங்கும் பரவியுள்ளது. ஆனால் அப்படி முதன் முதலில் திருக்குறளை ஏற்றுக் கொண்ட மொழி லத்தீன்.

**❖ தொன்மை ரயில் நிலையம்.**

ராயபுரம் , வட சென்னையிலுள்ள மிகத் தொன்மையான ரயில் நிலையம் அமைந்திருக்கும் பகுதி .சென்னை சென் றல் தவிர இன்னொரு ரயில் இணையமாக ராஜபுரம் ரயில் நிலையத்தை விரிவுபடுத்தலாமா என்ற யோசனையும் தென்னிந்திய ரயில்வேயில் இருக்கிறது.

இத்தனை முக்கியத்து வத்திற்குக் காரணம் தமிழ் நாட்டில் முதல் ரயில் போக்கு வரத்து ராயபுரம்- அரக்கோணம் மார்க்கத்தில்தான் தொடங்கப்பட்டது ●



# ஒளிச்சேர்க்கையை கண்டவர்

சூரிய ஒளியின் மூலம் உணவு தயாரிக்க தாவரங்களில் நடைபெறும் ஒளிச்சேர்க்கை நிகழ்வின் போது காபன் டை ஒக்ஸைடு குளுக்கோஸாக மாறும் உயிரி வேதியியல் வினையின் சுழற்சியைக் கண்டறிந்தவர் வேதியியல் அறிஞர் மெல்வின் எல்லிஸ் கால்வின்.

இவர் 1911 ஆம் ஆண்டு ஏப்ரல் 8 ஆம் திகதி அமெரிக்காவின் மின்னல் சோட்டா மாகாணத்தில் உள்ள செயின்ட் பால் நகரில் பிறந்தார். பாடசாலையில் படிக்கும் போதே இவருக்கு வேதியியல் மற்றும் இயற்பியலில் அதிக ஆர்வம் . பள்ளிப் படிப்பை முடித்து விட்டு மிச்சிகன் சுரங்கத் தொழில்நுட்பக் கல்லூரியில் சேர்ந்தார்.

அங்கு வேதியியல், கனிமவியல், புவி அமைப்பியல், தொல்லுயிர் படிம உயிர்வியல், சிவில் பொறியியல் ஆகிய பாடங்களைக் கற்றார். 1931 இல் பட்டம் பெற்றார் பிறகு மினசோட்டா பல்கலைக்கழகத்தில் வேதியியல் பிரிவில் முனைவர் பட்டம் பெற்றார். அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு ராக்ஃபெல்லர் அறக்கட்டளை மானிய உதவியுடன் மான்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் பல ஆய்வுகளை மேற்கொண்டார்.

ஹாலோஜன்களின் எலக்ட்ரான் நாட்டம் என்பது குறித்து ஆராய்ந்தார்.பின் கலிபோர்னியா பல்கலைகழகத்தில் வேதியியல் ஆசிரியராகச் சேர்ந் தார். 1947 ஆம் ஆண்டு பேராசிரியராக பதவி உயர்வு பெற்றார்.

அங்கே மரபியல் மூலக்கூறுகள், கனி மச் சேர்மங்களின் நிறம், இயற்கை மூலக்கூறுகளின் எலெக்ட்ரான் அமைப்பு ஆகியவை குறித்து ஆய்வு செய்தார். ஆண்ட்ரூ பென்சன் ஜேம்ஸ் பாஷம் ஆகியவர் களுடன் இணைந்து ஆய்வுகளை மேற் கொண்டார். ஒளிச் சேர்க்கையின் போது தாவரத்திற்குள் காபன் பயணிக்கும் பாதையை இந்த மூவர் குழு கண்டறிந்தது. இதற்கு கால்வின் சுழற்சி என்று பெயரிடப்பட்டது. ஒளிச் சேர்க்கை குறித்த இந்த ஆராய்ச்சிக்காக இவருக்கு 1961 ஆம் ஆண்டின் வேதியியல் துறைக்கான நோபல் பரிசு வ்ழங்கி கௌர விக்கப்பட்டது.

கால்வின் தனது ஆராய்ச்சிகள் குறித்து 600 இற்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் எழுதியுள்ளார். இவர் 1980 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். அதன் பிறகும் 16 ஆண்டுகள் தன் குழு வினருடன் பல்வேறு ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு வந்தார். அவரது குழுவினர் கதிரியக்கத் தன்மை கொண்ட காபன் -14 ஐசோடோபைக் பயன்படுத்தி காற்று மண்டலத்தில் இருந்து தாவரங்களால் காபன் ஒக்ஸைடு உறிஞ்சப்படுவதில் தொடங்கி அது காபோவைத ரேட்டுகளாக மாற்றப்படுவது வரை கண்டறிந்தனர்.

கால்வின் பல விருதுகள், பதக்கங்கள் பெற்றார். லண்டன் ராயல் சொஸைட்டி இவரை கௌரவமிக்க அறிவியல் உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தது. வாழ்நாள் முழுவதும் அறிவியல் துறைக்கான பல ஆராய்ச்சிகளில் ஈடுபட்ட மெல்வின் கால்வின் 1997 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி மறைந்தார் ●

# நம்பினால் நம்புங்கள்



◆ சயின்டிஸ்ட் என்ற வார்த்தை முதன் முத லில் 1833 ஆம் ஆண் டில் தான் பயன்படுத்தப் பட்டது.

◆ ஒவ்வொரு 2 விநா டிகளிலும். உலகில்யாரோ ஒருவருக்கு இரத்தம் தேவைப்படுகிறது.

◆ நெல்சன் மண்டேலா சிறையில் கழித்த 27 ஆண் டுகளும் கற்தரையில் இலே சான துணியை விரித்துத் தான் உறங்கினார்.

◆ சூரியனில் இருந்து பெறு வதைக்காட்டிலும் அதிக ஒளியை நெப்டியூன் உமிழ்கிறது.

◆ விண்வெளியில் செயற்படும் சர்வதேச விண்வெளி மையத்தில் உள்ள விஞ்ஞானிகள் தினமும் 2 மணி நேரம் உடற்பயிற்சி செய்கிறார்கள்.


◆ நெதர்லாந்து மக்களே உலகில் அதிக அளவு கோப்பி அருந்துகின்றனர். சராசரியாக ஒரு நபருக்கு ஒவ்வொரு நாளும் 2.4 கப்.


◆ லண்டன் மாநகருக்கு உள்ளேயே 300 க்கும் அதிக மொழிகள் பேசப்படுகின்றன.

◆ காமெடியன்கள் மற்றும் வேடிக்கையாகச் செயற்படுபவ ர்களில் பலர் பொதுவாக மன அழுத்தத்தில் இருப்பதாக ஆய் வுகளில் தெரிவிக்கின்றன.

◆ ரோம சாம்ராஜ்யத்தோடு சேர்ந்து அழிந்த கொங்கிறீட் தொழில்நுட்பம் ஆயிரம் ஆண் டுகளுக்குப் பிறகே மறு கண்டு பிடிப்பு செய்யப்பட்டது.

◆ சிகரெட் புகைப்பதைவிட, சிகார் மற்றும் பைப் ஸ்மோர்க் கிங் ஆகியவை அதிக ஆபத்தா னவை ●





# கடி கடி





மேடையில சேர்ல
உட்கார்ந்துக்கிட்டு
தூங்காதீங்க தலைவரே...
ஏன்யா...?
நீங்க நாற்காலி கனவு
காண்றதா எல்லோரும்
சொல்றாங்க!



நம்ம படம் ரிலீசான
நாலு நாள்ல நாற்பது
கோடியைத் தாண்டிடுச்சு சார்..
நிஜமாவாய்யா சொல்றே...
அவ்வளவு வசூலா?நினைப்புதான்.
பேஸ்புக்,ட்விட்டர்ல நம்ம படத்த
திட்டினவங்களோட எண்ணிக்
கையைச் சொன்னேன்!

**தலைவர் காரசார விவாதத்தை ஏன் தவிர்க்கிறாரு அவருக்கு அல்சர் பிரச்சினையாம்... அதான்!**



தலைவர் கிட்ட வாட்ஸ்அப்
நம்பர் கேட்டேன்...
என்ன சொன்னாரு...?
அவர்கிட்ட எந்த ஜெயில்
வார்டக் நம்பரும்
இல்லைன்னு
சொல்லிட்டாரு...!

எதிர்க்கட்சிக்காரர்களின்
முகத்திரையைக் கிழிப்பேன்...
வழக்கமா நமக்கு எதிர்
கோஷ்டிக்காரன் வேஷ்டியை
கிழிச்சுதானே தலைவரே பழக்கம்



கண் ஆபரேஷன் முடிஞ்சு
கண் திறக்கும்போது
யார் முகத்தைப்
பார்க்க ஆசைப்படறீங்க?
உங்க அம்மா முகத்தையா...
இல்ல உங்க மனைவி
முகத்தையா?
ஏன் டாக்டர் என் மனைவி
வேலைக்காரியை வேலையை
விட்டு நிறுத்திட்டாளா என்ன!



தலைவர் ஏன் மேடையிலே
பயந்துக்கிட்டே பேசறார்?
யாரோ அவர் மேலே
இன்னிக்கு செருப்பு
வெடிகுண்டு
வீசப் போறதா தகவல்
கிடைச்சுதாம்...!



பலத்த பொலிஸ் பாதுகாப்பு
வேணும்னு தலைவர்
கேட்குறாரே...
எங்க போகப் போறாராம்?
எம்.எல்.ஏ.பதவி ஏற்ற பிறகு
இன்றைக்குத்தான் தொகுதி
பக்கம் போகப் போறாராம்!




நாங்கள் எதிர்பார்த்த
அளவிற்கு செருப்புக்கள்
விழாத காரணத்தினால்
தலைவரை மீண்டும்
பேச அழைக்கின்றோம்...!



என்
மனைவி
ரொம்ப செலவாளி...
நிஜமாவா சொல்றீங்க...?
ஆமாம் தினமும்
ஊர்வம்பை விலைக்கு
வாங்குவாள்னா
பாருங்களேன்...





# லிவர்பூல் நாயகன் ஜெரார்டு!



இஸ்தான்புல் - மாவீரன் கான் ஸ்டன்டைன் ஆண்ட இம்மாநகரத்தை வரலாற்று ஆசிரியர்கள் கூட மறந்துவிடக் கூடும்.

ஆனால் கால்பந்து வெறியன் எவ னும் அந்த ஊரை மறக்கவே மாட்டான். அதிலும் குறிப்பாக லிவர்பூல் நகரத்து ரசிகர்கள் ஜென்ம ஜென்மத்துக்கும் மறக்க மாட்டார்கள். கால்பந்து வரலாற்றின் ஆகச் சிறந்த ஒரு போட்டி அரங்கேறிய ஊரை யாரால் தான் மறக்க முடியும்? 2005 ஆம் ஆண்டு மே 25 ஆம் திகதி நடந்த அப்போட்டி, முதல் பாதி முடியும் வரை மற்றுமொரு சாதாரண போட்டியாகத்தான் தெரிந்தது. சம்பியன்ஸ் லீக் இறுதி என்பதைத் தாண்டி வேறு எந்த சிறப்பம்சமும் இல்லாத அப்போட்டியில் இத்தாலியின் மிலன் அணி 3-0 என முதல் பாதியில் லிவர்பூல் அணியை பின்னுக்குத் தள்ளியிருந்தது. கிட்டத்தட்ட போட் டியே முடிந்துவிட்டதாக அனைவரும் கருதிய நிலையில் தான் நடந்தது அந்த மிராக்கிள் - 'மிராக்கிள் ஆஃப் இஸ்தான்புல்' ஆறு நிமிட இடை வெளியில் 3 கோல்களை அடித்து ஆட்டத்தை சமனாக்கி, பெனால்டியில் மிலன அணியை வீழ்த்தி சம்பியனும் ஆகி ஆச்சரியப்படுத்தியது லிவர் பூல் அணி. எவரும் எதிர்பார்க்காத அந்த அசாத்திய 'கம்-பேக்' கின் பின்னணியில் இருந்த ஒரு மாபெரும் சக்தியின் பெயர் ஸ்டீவன் ஜெரார்டு.

கால்பந்தை மூச்சாய் சுவாசிக்கும் இங்கிலாந்து மண்ணில் தனது ஏழாம் வயதிலேயே கால்பந்துடனான தனது நேசத்தைத் தொடங்கினார் ஜெரார்டு. 18 வயதிலேயே புகழ்பெற்ற லிவர்பூல் அணியில் இடம், 20 வயதில் இங்கிலாந்து அணியில் அறிமுகம், 23 வயதிலேயே லிவர்பூல் அணியின் கப்டன், 12 ஆண்டுகள் கப்டனாகப் பயணம், மொத்தம் 872 போட்டிகள் என ஒரு கால்பந்து சகாப்தமாகவே வலம் வந்த ஜெரார்டின் 19 ஆண்டு கால கால்பந்துப் பயணம் இதோ முடிவுக்கு வந்துவிட்டது.

ஜெரார்டு நடுகளத்தில் மாயாஜாலங்கள் செய்யக்கூடிய வித்தகர். பந்தை எதிரணி வீரரிடமிருந்து பறிப்பதாகட்டும், எங்கோ நிற்கும் தன் சக வீரனின கால்களுக்குப் பந்தை ஊட்டுவதாகட்டும், ஃப்ரீ-கிக் ஷாட்களின் மூலம எதிரணியை அலறவிடுவதாகட்டும், ஜெரார்டு ஒரு ஈடு இணையற்ற ஜீனியஸ்.

சச்சின் அளவிற்கு இவர் பேசப்படவில்லை. ஆனால் டிராவிடைப் போன்ற மாபெரும் திறமைசாலி. ஆட்டத்தின் போக்கை தனி ஒருவனாக மாற்ற வல்லவர். அதனால் தான் இஸ்தான்புல் மைதானத்தில் மாபெரும் சரித்திரத்தை இவரால் படைக்க முடிந்தது. முதல் பாதியில் 3 கோல்கள் வாங்கிய தனது அணியை எல்லா வகையிலும் பின்னின்று தூக்கிவிட்டார் ஜெரார்டு. தானே முன்மாதிரியாய் இருந்து, முதல் கோலை அடித்து போட்டியல் மீண்டு வருவதற்காக பிள்ளையார் சுழியையும் போட்டார். தனது அணியின ஒவ்வொரு வீரனுக்கும் தன் ஆட்டத்தால் உத்வேகம் அளித்தார் ஜெரார்டு. அதனால்தான் அப்போட்டியின் ஆட்ட நாயகன் விருது அவரை அலங்கரித்தது.

இது வெறும் சாம்பிள் தான். ஜெரார்டின் மேஜிகல் தருணங்கள் எண்ணற்றவை இருக்கின்றன. அவை ஜெரார்டு எப்படிப்பட்ட ஜீனியஸ் என்பதை நிரூபிக்கும். ஆதரவாளர்களை மட்டுமல்ல, தனக்கு எதிராக விளையாடும் வீரர்களைக் கூடத் தனது ரசிகராக்கி விடுவார் ஜெரார்டு.

"இவர் உலகின் சிறந்த வீரரா? மெஸ்ஸி, ரொனால்டோவைப் போன்று இவர் பிரபலமாகாமல் இருந்திருக்கலாம். ஆனால் இவரும் உலகின் மிகச்சிறந்த வீரர்தான். இவரால் பந்தைப் பறிக்க முடியும், கோல் அடிக்க முடியும், அவற்றையெல்லாம் தாண்டி தன்னைச் சுற்றியிருக்கும் வீரர்களு க்கு நம்பிக்கையைப் பாய்ச்ச முடியும். இதுபோன்ற விடயங்களைக் கற்றுக் கொள்ள முடியாது. இப்படியான ஆளுமைகள் இயற்கையாகவே பிறக்கி றார்கள்" என்று ஜெரார்டைப் புகழ்ந்து தள்ளியிருந்தார் பிரான்ஸ் ஜாம்பவான் ஜினாடின் ஜிடான். இங்கிலாந்தின் முதல் டிவிஷனில் 18 கோப்பைகள் வென்று கோலோச்சிய லிவர்பூல் அணி, பாதாளம் நோக்கி சென்று கொண்டிருக் கையில், அணியைத் தனி ஆளாய் தாங்கி நின்றவர் ஜெரார்ட். 23 வயதில் கப்டனாகப் பொறுப்பேற்ற போது மூத்த வீரர்களை ஒருங்கிணை த்ததிலும் சரி, 34 வயதில் இளம் வீரர்களுக்கு ஊக்கம் தந்து லிவர்பூல் அணி யின் தரத்தை உயர்த்தியதிலும் சரி, ஜெரார்டு ஒரு மிகச்சிறந்த கப்டனாகத் திகழ்ந்தார். ஜிடான் கூறியது போல் ஓர் அற்புதமான ஆளுமை அவர்.

17 ஆண்டுகாலம் லிவர்பூல அணிக்காக ஆடிய ஜெரார்டு, 2015 ஆம் ஆண்டு லிவர்பூல் அணியிலிருந்து வெளியேறி, அமெரிக்காவின் லா கேலக்சி அணியில் விளையாடினார். அமெரிக்காவில் கால்பந்தைப் பிரபலப்படுத்துவதற்காக வயதில் மூத்த பிரபலமான வீரர்களை அமெரிக்கக் கால்பந்து அணிகள் ஒப்பந்தம் செய்வது வழக்கம். அப்படி 2 ஆண்டுகள் லா கேலக்சி அணிக்காக விளையாடிய ஜெரார்டு, அடுத்த ஆண்டு அவ்வணிக்காக ஆடப்போவதில்லை என்று சில தினங்களுக்கு முன் அறிவித்தார். அந்த அறிவிப்பு வெளியானதோ இல்லையோ, ஒட்டு மொத்த கால்பந்து உலகமும் 'ஜெரார்டு மீண்டும் லிவர்பூல் அணிக்குத் திரும்ப வேண்டும்' என்று முழக்கமிட்டனர். இந்நிலையில் ஜெரார்டு தனது 19 ஆண்டு கால கால்பந்து வாழ்கைக்கு முற்றுப்புள்ளி வைத்துள் ளார். அடுத்து அவர் பயிற்சியாள ராக அடியெடுத்து வைப் பாரா, இல்லை வேறு துறைகளில் கவனம் செலுத்து வாரா? என்று தெரியவில்லை. ஆனால் முன்னணி வீரர்களிலிருந்து, ரசிக ர்கள் வரை அனைவரும் வேண்டும் ஒரு விடயம், ஜெரார்டு லிவர்பூல் அணியின் பயிற்சியாளர் குழுவில் இணைய வேண்டும் என்பதே. அவ்வணியின் பயிற்சியாளர கிளாப்பும், ஜெரார்டுக்கான இடம் காத்திருக்கிறது என்றே கூறியுள்ளார். இதனால் அனைவரின் எதிர்பார்ப் பும் எகிறியுள்ளது. ஜெரார்டின் ஓய்வு அறிவிப்பு வெளியானதும் டுவிட்டர் முழுமையும் ஜெரார்டு என்ற ஹேஷ்டே கால் மூழ்கியுள்ளது. வீரர்களும் ரசிகர்களும் தங்களுக்குப் பிடித்த 'ஜெரார்டு மொமன்டை' ஷேர் செய்த வண்ணம் உள்ளனர். உண்மையில கால்பந்து உலகம் ஒரு ஜாம்பவானை மிஸ் செய்யப் போகிறது. ஜெரார்டு லிவர்பூல் அணிக்கு மட்டுமல்ல, இங்கிலாந்து கால்பந்திற்கே ஒரு அடையாளம்!



## வீரர்கள் நினைவாக...!


சூரியனுக்கும்...
நெருப்புக்குமான...
சொந்தத்தின்
குறியீடுகள் இவர்கள்..!
வலிமை தேசத்தின்
நினைவழியா (த)
நெடும் பயண
நித்திய நிழல்கள்
களங்கமற்ற
இவர் நினைவுக்
காலங்களை
எம் தேசத்தின்
விருத்திக்கென ஒதுங்குவோம்.
புனிதர்களின் பெயரால்
ஒவ்வொருவரும்
ஒரு மரம் நடுவோம்.
அதன் நிழல் காக்கட்டும்-எம்
தேசத்தையும், உலகையும்,
அவர்களைப் போலவே...

த. நிரஞ்சலன்
கிளிநொச்சி

## அஞ்சலிக்கு எழுகிறாள் கார்த்திகை மலர்...

காத்திருந்து பூத்திருக்கு
கார்த்திகை மாதப் பூ
சிரிப்பதற்கல்ல
அது இதழ் விரித்தது...
அன்று சிந்திய இரத்தத்திற்காய்
மலா் அஞ்சலி செலுத்துது.
மரணித்த மாவீரா் அஞ்சலி
செலுத்திடும் உரிமை
மனிதருக்கில்லையடி
மலரே! உனக்கு இருக்குதடி
வீர மரணம் எய்திய மண்ணிலே
நீ நின்று உதிக்கும் போதெல்லாம்
என்றும் உயிர்க்கும் இவ் அஞ்சலியே...

ஸ்ரீயோதா
மண்டைதீவு.



## மானிடத்தின் காவலர்க்கு...

ஈழத்தமிழனை அடையாளப்படுத்தி
இலங்கைத் தீவை உலகறியவைத்த- நீங்கள்
அகிம்சையின் காந்திகள்
அதர்மத்தின் ஆயுத மொழிகள்.

ஆட்சி அதிகாரங்களின்
அடிமையை எதிர்த்த - நீங்கள்
ஏதிலிகளெம் வாழ்வுக்காய்
இரையாகிக் கரிந்தவர்கள்

வேலிகளாகக் காவலிருந்து
விழிமூடாது வேள்விபுரிந்த- நீங்கள்
வீரத்தின் விளை நிலங்கள்
விடுதலையின் அடித் தடங்கள்.

கோரக் காழுகுகளை எதிர்த்து
குஞ்சுகளைப் பாதுகாத்து -நீங்கள்
கொள்கையின் இருப்பிடங்கள்
கோயிலின் விக்கிரகங்கள்

கார்த்திகையில் உங்களுக்கு
கார்த்திகையால் அர்ச்சிக்கின்றோம்
கண்ட கனவுகள் நனவாக
கபாலத்துள் தியானிக்கின்றோம்..

புலோலியூர் காவியா.

# காலத்தால் அழியாத கானங்கள் ...

திரைப்படம்: ஊமை விழிகள்
இயற்றியவர்: ஆபாவாணன்
இசை: மனோஜ் கியான்
பாடியவர்: பி.பி. ஸ்ரீனிவாஸ்




தோல்வி நிலையென நினைத்தால்
மனிதன் வாழ்வை நினைக்கலாமா?
வாழ்வை சுமையென நினைத்து
தாயின் கனவை மிதிக்கலாமா?

உரிமை இழந்தோம் உடமையும் இழந்தோம்
உணர்வை இழக்கலாமா?
உணர்வை கொடுத்து உயிரை வளர்த்த
கனவை மறக்கலாமா?

விடியலுக்கு இல்லை தூரம்
விடியும் மனதில் இன்னும் ஏன் பாரம்
உன் நெஞ்சம் முழுவதும் வீரம்
இருந்தும் கண்ணில் இன்னும் ஏன் ஈரம்

யுத்தங்கள் தோன்றட்டும் ரத்தங்கள் சிந்தட்டும்
பாதை மாறலாமா?
ரத்தத்தின் வெப்பத்தில் அச்சங்கள் வேகட்டும்
கொள்கை சாகலாமா?

# சந்தனப் பேழைகள்

தமிழுக்கு அமுதென்று பெயர். அந்த தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என தமிழின் பெருமையை முரசு கொட்டினான் பாவேந்தன் பாரதிதாசன். அந்த தமிழினை தாய்மொழியாகக் கொண்ட தமிழ் மக்களுக்காக தங்கள் உயிரினை உயிராக மதிக்காது உறவுகளைக் காப்பாற்றியவர்கள் எங்கள் வீரவேங்கைகள்.


கார்த்திகை மாதம் பிறந்தவுடன் இளங்காற்று மெதுவாகப் பரவுவது போல எங்கள் தெய்வங்களின் நினைவுகள் எல்லோரது நெஞ்சிலும் பரவும். தமிழ் மொழியினைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழ் மக்களுக்கென்று தனியாக ஒரு நாடு வேண்டும் என்று விடுதலைப் போராட்டத்தில் இறங்கி விடுதலைக்காக உழைத்தவர்கள் பல பேர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு கனவுகளை நெஞ்சில் சுமந்து இரவு-பகல் என பாராது மழை-வெயில் என பாராது எதிரிகளின் எலும்புகளை உடைத்தவர்கள் எம் தெய்வங்கள்.

1983 ஆம் ஆண்டு ஜூலை கலவரத்தின் பின் தமிழ் மக்களுக்கு கொடுமை செய்வதைப் பார்த்து பொங்கி எழுந்தார் நம் தலைவர். அவரின் வழிகாட்டலில் நாங்களும் உங்களுடன் இணைந்து எங்கள் உறவுகளை காக்க விடுதலைப் போராட்டத்தில் இறங்கிப் பாதுகாப்போம் என்று சபதம் எடுத்து உயிர் மாய்த்தவர்கள் நம் தெய்வங்கள்.

ஒரு நெருப்புத்துளி பட்டால் கூட என் பிள்ளை தாங்கமாட்டான் என்று பக்குவமாய் வளர்த்த பிள்ளை கரும்புலி எனப் போய் வெடித்து சிதறிவிட்டதைக் கேட்டு என் பிள்ளை வீர மரணமடைந்து விட்டான் என நெஞ்சை நிமிர்த்தி நடக்க வைத்த வீர வேங்கைகள் எம் தெய்வங்கள்.

ஆண்கள் மட்டுமா? வீரமானவர்கள், பெண்களும் சலித்தவர்கள் அல்ல. எங்களாலும் எதிரிகளை பந்தாட முடியும் எனத் துப்பாக்கி தூக்கி போர்க்களம் சென்றனர் வீரமங்கைகள். மழையிலும் வெயிலிலும் பல துன்பங்கள் கடந்து உறவுகளை காக்க எனப் போர்க்களத்தில் களமாடி வீர மரணமடைந்த வீர மங்கைகளை ஒரு காளி ரூபத்தில் வழிபடுவதற்கு ஒரு நாளாக கார்த்திகை 27 கொண்டாடப்பட வேண்டும்.

கார்த்திகை மாதம் பிறந்தவுடன் "தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய சந்தனப் பேழைகளே..." எனும் பாடல் வரிகளே எல்லா தமிழ் மக்களின் வாயிலும் உச்சரிப்பாக இருக்கும். அருள் கொடுப்பவன் மட்டுமல்ல இறைவன் உயிர் கொடுத்து உயிர்காப்பவனும் இறைவன் என எம் கண்முன்னே வாழ்ந்து காட்டியவர்கள் எம் தெய்வங்கள். இறந்தவர்களுக்கு ஒருநாள் கொண்டாடப்பட வேண்டும் என்றால் கார்த்திகை 27



கொண்டாடப்பட வேண்டும்.


தமிழ் மக்களின் பெருவிழா மாவீரர் தினத்தை சுதந்திரமாகக் கொண்டாட எங்களுக்கு அனுமதி தாருங்கள்.

உங்கள் அனுமதி எங்கள் தெய்வங்களை நாங்கள் மீண்டும் பார்ப்பதற்கு ஒரு சந்தர்ப்பம். உங்கள் கருணையில் தான் எங்கள் ஒளி தீபம் ஒளிரும்.

அக்ஷயா.

# கவலை வேண்டாம்

## திரைவிமர்சனம்



ஜீவா-காஜல் அகர்வால் இருவருமே தற்போது ஹிட் கொடுத்தே ஆகவேண்டும் என்ற கட்டாயத்தில் உள்ளார்கள்.

இந்நிலையில் யாமிருக்க பயமே படத்தை இயக்கிய டிகே இயக்கத்தில் இன்று உலகம் முழுவதும் வெளிவந்துள்ள படம் கவலை வேண்டாம். இப்படம் ஜீவா-காஜலுக்கு ஹிட் கொடுத்ததா, பார்ப்போம்.

படத்தின் ஆரம்பத்திலேயே ஜீவா-காஜல் ப்ரேக் அப்புடன் தொடங்குகின்றது. ஜீவா சொந்த ஊரில் இதையெல்லாம் மறந்து நண்பர்களுடன் ஜாலியாக இருக்கின்றார்.

காஜல் தன் ஸ்டேட்டஸுக்கு ஏற்ற மாப்பிள்ளையாக பாபிசிம்ஹாவை தேர்ந்தெடுக்கின்றார், அதற்காக ஜீவாவிடம் விவாகரத்து வாங்க செல்கின்றார்.

நண்பர்கள் கொடுக்கும் யோசனையால் ஜீவா ஒரு வாரம் என்னுடன் மனைவியாக சேர்ந்து வாழ் என்று சொல்ல, அதன் பிறகு காஜல் எடுக்கும் முடிவு என்ன? என்பதே இந்த கவலை வேண்டாம்.

ஜீவா இது தான் நம்ம ரூட்டுன்னு பல வருடம் கழிச்சு பிடிச்சிருக்கிறார். பெரும்பாலும் என்றென்றும் புன்னகை சாயல் நிறையவே தெரிகின்றது, என்ன சந்தானம் மட்டுமே மிஸ்.

காஜல் முதன் முதலாக படம் முழுவதும் 'நடித்துள்ளார்'. ஆம், வெறும் பாட்டு மட்டுமில்லாமல் தன் குண்டு கண்களை உருட்டி ரசிகர்களை கவர்ந்து செல்கின்றார்.

பாலாஜி போன வாரம் என்ன பார்த்தோம், கடவுள் இருக்கான் குமாரு, அந்த வசனத்தின் அப்கிரேட் தான் இந்த கவலை வேண்டாம். சந்தானத்தை மிஸ் செய்கின்றோமோ என தோன்ற வைக்கின்றது.



படம் அடல்ட் ஒன்லீ என கூறிவிடலாம், ஏனெனில் பல இடத்தில் கத்திரி விழுந்துள்ளது. அதிலும் பொலிஸ் ஸ்டேஷனில் செய்யும் அட்டகாசம் சிரிப்பு கேரண்டி.



படத்தின் ஒளிப்பதிவு ஏதோ பாலிவுட் படம் போல் உள்ளது. கலர்புல்லாக இருக்க, அனைவரும் அழகாகவும் நடித்துள்ளனர், லியோன் ஜேம்ஸ் இசையும் ரசிக்க வைக்கின்றது.

ஜீவா-காஜலின் கலர்புல் ஜோடி. மயில்சாமி எல்லாம் நிறைய கதாப்பாத்திரம் கொடுங்கப்பா... என்று கூறும் அளவிற்கு கலக்கியுள்ளார்.

படத்தின் முதல் பாதி, ஒளிப்பதிவு, இசை. கொஞ்சம் இரண்டாம் பாதி மெதுவாக நகர்வது போல் பீலிங்

பாபி சிம்ஹா உங்களுக்கு என்ன தான் ஆச்சு? மொத்தத்தில் எந்த ஒரு லாஜிக்கும் பார்க்காமல் ஒருமுறை கவலையை மறந்து ஜாலியாக சென்று வரலாம்.











# தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய சந்தனப் பேழைகளே!

# ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்





**நிலத்தால் மட்டுமல்ல**
**மனிதத்தாலும்**
**தனித்து**
**விடப்படுகிறது ஒரு**
**தேசம்**
**போராடும் குணத்தால்**
**உயர்கிறது அந்த**
**தேசம்**
**தன்னுயிர் கொண்டு**
**விடுதலை வெல்ல**
**களமாடிய**
**மாவீரர்கள் என்றும்**
**நினைவுகூரப்பட**
**வேண்டியவர்களே!**

**இது கார்த்திகை மாதம் அவர்களின் மாதம்.**

21 ஆம் நூற்றாண்டிலும் சரி பண்டைய காலத்திலும் சரி ஒரு இனத்தின் பலத்தை வைத்துக் கொண்டே அவர்களது உரிமை, அதிகாரம், இருப்பு தீர்மானிக்கப்படுகின்றது.

இந்த பலத்தை வைத்துக்கொண்டே உலகில் இனப்படுகொலையை எதிர்நோக்கிய இனங்கள் தற்போதும் வாழ்ந்து வருகின்றன.

இந்தப்போராட்டங்கள் வெறுமனே போராளிகளோடு மட்டுப்படுத்தப்படாது மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டமாகவே இடம்பெற்றன.

இவ்வாறான ஒரு போராடடத்தையே தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமும் முன்னெடுத்திருந்தது. இந்த விடுதலைப்போராட்டத்தில் உயிரிழந்த விடுதலை வீரர்களை நினைவுகூருவதிலும் தமிழர்கள் தனித்துவமானவர்கள்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் முதல் மாவீரன் லெப்.சங்கர் தன்னுயிரைத் துறந்த நாளின் ஞாபகத்தினை அடியொற்றி அனுஷ்டிக்கப்படும் மகத்தான நாளே மாவீரர் நாள் என அழைக்கப்படுகின்றது.

மாவீரர் தினம் தோன்றியமைக்கு பின்வரும் சம்பவம் காரணமாக இருக்கலாம் என நம்பப்படுகின்றது. யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள ஒரு வீட்டைச் சுற்றிச் சிங்கள இராணுவம் முற்றுகையிடுகிறது. 1982 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் சாவகச்சேரியில் பொலிஸ் நிலையத்தைத் தாக்கியபோது காயமடைந்த விடுதலைப்புலிகளுக்கு அந்த வீட்டில் வைத்து சிகிச்சை அளிக்கப்பட்டதாகத் தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து இராணுவத்தினரால் அந்த வீடு முற்றுகையிடப்படுகிறது. அவ்வேளையில் அங்கிருந்த ஒரு இளைஞன் முற்றுகையிட்டவர்களை நோக்கி, தான் வைத்திருந்த கைத்துப்பாக்கியால் சுட்டவாறே வீட்டு மதிலைத் தாண்டிக் குதித்து ஓடுகிறான்.

அவனை நோக்கி இராணுவத்தினரின் துப்பாக்கி வேட்டுக்கள் சரமாரியாகத் தீர்க்கப்படுகின்றன. அப்போது அந்த இளைஞனின் வயிற்றில் ஒரு குண்டு பாய்கிறது. படுகாயமுற்ற நிலையிலும் கூட அவன் இராணுவத்தினரிடம் அகப்பட்டு விடக்கூடாது என்ற இலட்சிய உறுதியோடு இரண்டு மைல்தூரம் இடைவிடாமல் ஓடி தன் இயக்கத் தோழர்களின் இருப்பிடத்தை அடைகிறான். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலகட்டமாகையால் அப்போது அங்கு போதிய மருத்துவ வசதி ஏற்படுத்தப்படவில்லை.

அவசர அவசரமாக முதலுதவிகள் செய்யப்பட்ட நிலையில் அவனை சக போராளிகள் விசைப்படகு மூலம் கடல்மார்க்கமாகத் தமிழகத்துக்கு அழைத்துச் செல்கிறார்கள். இராணுவத்தினரின் தேடுதல்நடவடிக்கை, முற்றுகை இவற்றைத்தாண்டி தமிழகம் செல்ல ஒரு வாரமாகிறது.

வயிற்றில் ஏற்பட்ட காயத்தின் நிலை மோசமடைந்தது. அவனைப் பிழைக்க வைக்க அவனது தோழர்கள் எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. தலைவரும் தோழர்களும் கண்கலங்கி நிற்க, 27.11.1982 அன்று, மாலை 6.05 மணிக்கு அந்த இளைஞன் இயக்கத்தில் முதற்களப்பலியாகும் பெருமையை அணைத்துக்கொள்கிறான். இதே நாள் இதே நேரமே தமிழீழ மாவீரர் நாளாக நினைவுகூரப்பட்டு, மாவீரர் நினைவுச்சுடர் ஏற்றப்படுகிறது. இந்நிலையில் அன்று ஒருவனின் மரணத்தில் ஆரம்பித்த மாவீரர் தினமானது இன்று பலரின் நினைவலைகளை ஞாபகப்படுத்தும் கூட்டு நினைவு தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது. ஆரம்பத்தில் வீர மரணமடைந்த போராளிகளின் உடல்களை அவரவர் குடும்பங்கள் கைக்கொள்ளும் மத சம்பிரதாயங்களின் அடிப்படையில் புதைக்கப்பட்டோ அல்லது எரிக்கப்பட்டோ அவர்களது இறுதிக் கிரியைகள் நடந்தன. மாறாக காடுகளுக்குள் இறக்கும் மாவீரர்கள் மாத்திரம் விதைக்கப்பட்டனர்.

ஆனால் 1991 இலிருந்து வீரமரணமடைகின்ற மாவீரர்களின் வித்துடல்கள் அனைத்தும் இனிமேல் எரிக்கப்படாது. மாவீரர் துயிலுமில்லக குழிகளில் புதைக்கப்படும் எனவும் அவ்வாறு விதைக்கப்பட்ட மாவீரர்களின் இடத்தில் கல்லறைகள் எழுப்பப்பட்டு அதில் அவர்கள் பெயர்கள் பொறிக்கப்பட்டு இவை எமது தேசிய நினைவுச் சின்னங்களாக பாதுகாக்கப்படும் எனவும் இவை காலங்காலமாக எமது போராட்ட வரலாற்றைச் சொல்லிக் கொண்டேயிருக்கும். இந்த மாவீரர்கள் சாஸ்திர சம்பிரதாயங்கள் எல்லாவற்றையும் கடந்து இந்த தமிழீழத்தின் பொதுச் சொத்தாக, பொக்கிஷங்களாக இருக்கின்றார்கள்.

இந்தப் பொக்கிஷங்கள் வெறும் நினைவுகளாகவும் எண்ணிக்கைகளாகவும் மட்டும் இருக்கக் கூடாது. அவை பொருள்வடிவில் என்றென்றும் எம்மண்ணில் இருந்து கொண்டேயிருக்கவேண்டும். அத்துடன் 1990 ஆம் ஆண்டு தேசியத்தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் மாவீரர் வாரத்தை மக்களுக்குள் நடைமுறைப்படுத்தி மாண்ட வீரர்களைக் கௌரவிக்கும் முகமாக புலிகளின் கொடியாக இருந்த புலிக்கொடியை தேசியக் கொடியாக அறிவித்தார்.

சங்ககாலத்திற்கு முன்பிருந்தே போரில் மரணமடைந்த வீரர்களை நினைவுகூருதல் வழக்கமாக இருந்து வருகின்றது. போரில் மாண்ட வீரர்களை புதைத்து அவர்களின் ஞாபகார்த்தமாக நடுகற்களை இட்டு வணங்குகின்ற நடுகல் வணக்கமுறை காணப்பட்டு வந்திருக்கிறது. இவை புறநானூறிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே போரில் இறந்த வீரர்களை வணங்குகின்ற முறை தமிழர் பண்பாடாகும்.

போரில் இறந்தவர்களை வீர மரணம் அடைந்தவர்கள் என மரியாதை செய்து நடுகல் நாட்டி வணங்கிய வரலாற்றை புறநானூறில் பரவலாகக் காண்கின்றோம். அது பிற்காலத்திலும் கடைப்பிடிக்கப்பட்டு வந்ததனை இலக்கியங்கள் ஊடாக அறியலாம்..

இவ்வாறான வரலாற்றை கொண்ட நினைவு தினத்தை யுத்தத்தின் போதும் அதற்கு முன்னரும் தாயகத்தில் உள்ள தமிழர்களும் புலத்தில் உள்ள தமிழர்களும் பேரெழுச்சியுடன் அனுஷ்டித்து வந்தார்கள்.

இறுதி யுத்தத்தின் பின்னர் புலிகளை தாயகத்தில் நினைவுகூருவதற்கு இலங்கை அரசு தடை விதித்த நிலையில், அந்தத் தடையையும் மீறி நினைவு நிகழ்வுகளை நடத்தியவர்களை பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதும் செய்தார்கள்.

கடந்த 2012 ஆம் ஆண்டும் மாவீரர் தினத்தை நினைவுகூர்ந்த யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இராணுவத்தினரால் தாக்கப்பட்டமையும் கைது செய்யப்பட்டமையும் யாவரும் அறிந்ததே. இந்த சம்பவத்தின் பின்னர் தாயகத்தில் மாவீரர் தினம் அனுஷ்டிப்பு யுத்தத்திற்கு பின்னர் பெரும் சவாலாகவே காணப்பட்டது.

பாதிக்கப்பட்டவர்களும் பிழைத்திருப்போரும் கடந்த காலத்தை நினைவுகூர மேற்கொள்ளும் முயற்சிகள், ஒன்றுகூடுதல் மீதான கட்டுப்பாடுகள், ஒடுக்கு முறை அரச கண்காணிப்பு, போட்டி போடுகின்ற நினைவுகூரும் செயற்றிட்டங்கள முதலியவற்றால் ஒடுக்கப்படுகின்றன.

2015 ஜனவரியில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்துக்கு பின் ஏற்பட்டுள்ள சில மேம்பாடுகளுக்கு மத்தியிலும் இராணுவ பிரசன்னமும் நினைவுகூருதல் உள்ளிட்டதாக நாளாந்த வாழ்க்கையில் இடம்பெறுகின்ற அதன் தலையீடுகளும் தொடர்கின்றன.

தங்களுக்காக மரணித்தவர்களை நினைவுகூர முயலும் போதெல்லாம் வடக்கு, கிழக்கு மக்கள் வழமையாகவே பாதுகாப்பு படைகளின் தொல்லைகளை அனுபவித்து வருகிறார்கள்.

பின்விளைவுகள் குறித்த பயமானது, நினைவுகூரும் செயற்பாடுகளில் பங்கு கொள்வது, தங்கள் கடந்த காலத்தைப் பற்றி தங்கள் பிள்ளைகளிடம் பேசுவது, தங்கள் சமூகங்களில் அரசினாலேயே நிர்மாணிக்கப்பட்ட வெற்றி நினைவுச்சின்னங்களின் பிரசன்னம் பற்றி பகிரங்கமாக எதிர்ப்புக் காட்டுதல் முதலியவற்றிலிருந்து தடுத்து விட்டிருக்கின்றது என வடக்கு, கிழக்கில் நினைவுகூரல் தொடர்பான ஆய்வொன்றை மேற்கொண்ட பேர்ள என்ற அமைப்பு கூறியுள்ளது.




யுத்தம் நடைபெற்ற நாட்டில் நல்லிணக்கம் என்பது அவசியம்தான். ஆனால் அந்த நல்லிணக்கம் தொடர்ந்து ஏமாற்றப்பட்டு கொண்டிருப்பவர்களிடமிருந்து வர வேண்டும் என்பதை எதிர்பார்ப்பது ஏற்றுக்கொள்ள முடியாது. இன்று இருக்கும் சூழ்நிலையில் உறுதியற்ற எதிர்பார்ப்புகளுக்காக நல்லிணக்கம் என கூறிக்கொண்டு எமது சுயத்தை நாமே இழக்கப் போகின்றோமா? அல்லது மாவீரர்களின் பணியை அகிம்சை ரீதியில் தொடரப் போகின்றோமா? விடுதலை வேண்டிக் களமாடிய வீரப்புதல்வர்களை நம் நினைவில் உயிர்ப்பித்துப் பூசிப்போம்.

**யூ.சாளின்**

facebook

# குருவின் நல்ல உள்ளம்



ஒருநாள், முனிவர் சித்தானந்தர் தம் சீடர்களுடன் நகரத்தின் தெருக்கள் வழியாக நடந்து கொண்டிருந்தார்.

அவர் சிறந்த ஞானி. எனவே, மக்கள் அவரை மிகவும் மதித்தனர். அவர் சீடர்கள் அவரைத் தொடர்ந்து சென்றனர்.

ஒரு பணக்கார பெண்மணியின் வீட்டருகே அவர்கள் நடந்தனர். அப்போது ஒரு சிறிய பெண் குழந்தை அந்த வீட்டிலிருந்து வெளியே வந்தது. குழந்தைகள் மேல்மிகுந்த அன்புடையவர்ஞானி. அவர் குழந்தையை அன்புடன் நோக்கினார்.

குழந்தை ஒரு தட்டு நிரம்ப ரோஜா மலர்களைக் கொண்டு வந்து சித்தானந்தர் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டது.

மலர்கள், மணம் தரும் பொருட்கள், தைலங்கள் என்றால் அவர் மிகுந்த மகிழ்ச்சி அடைவார் என்பது சீடர்களுக்குத் தெரியும்.

ஒரு ரோஜா மலரை மட்டும் எடுத்துக் கொண்டு தட்டை சீடர்களிடம் நீட்டினார். சீடர்களுக்கு சொல்லவா வேண்டும். தலைக்கு இரண்டு மூன்றாக அவர்கள் மலரை அள்ளிக் கொண்டனர்.

மலர்களை அர்ப்பணித்த குழந்தை மகிழ்ச்சியுடன் இல்லம் சென்றது. சீடர்கள் புடை சூழ சித்தானந்தரின் உலா தொடங்கியது. ஒரு வயதான மூதாட்டி ஞானியை தன் வீட்டுக்குள் வரவேற்றாள்.

சீடர்கள் உள்ளே சென்று அமர்ந்தனர். ஒரு பணியாள் அப்பிள் பழத்தட்டை அவர் முன் வைத்தார். ஒரு பழத்தை எடுத்துச் சுவைத்தார் சித்தானந்தர். பழம் மிகவும் சுவையாக இருந்தது. அவைகளை எடுத்து தன் சீடர்களுக்கு வழங்கினார்.

சீடர்கள் பழங்களை சுவைத்து உண்டனர். ஞானியைத்தொடர்ந்து செல்வதால் அவர்களுக்கு அவ்வப்போது நல்ல சுவையான பொருட்கள் கிடைத்து வந்தன. எனவே, இந்த சந்தர்ப்பங்களை சீடர்களில் எவரும் தவறவிடுவதில்லை.

செல்வந்தர்கள் வாழும் வீதிகளை எல்லாம் அவர்கள் கடந்து சென்றனர். இப்போது வசதி குறைந்தவர்கள் இடம் நகரின் ஒதுக்குப் புறமான பகுதி.ஏழை விதவைப் பெண்ணொருத்தி அங்கே நின்று கொண்டிருந்தாள்.

அவள் ஞானியை தன் சிறிய வீட்டுக்கு வருமாறு அழைத்தாள். அவளது அழைப்பை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார். அவரும் சீடர்களும் உள்ளே சென்று அமர்ந்தனர்.

ஐயனே, நீங்கள் இதைச் சாப்பிட வேண்டும், என்று கூறி ஒரு தட்டை நீட்டினாள்.தட்டைப் பெற்றுக் கொண்ட ஞானி அதில் திராட்சைப் பழங்கள் இருந்ததை பார்த்தார்.ஒரு பழத்தை எடுத்து வாயில் போட்டார்.

சுவைத்து உண்டார். சீடர்கள் பார்த்துக் கொண்டே இருந்தனர். மீண்டும் ஒரு பழத்தைப் பிய்த்து வாயில்போட்டு மென்று சுவைத்தார்.

இப்படியாக எல்லா பழத்தையும் தான் ஒருவராகவே தின்று தீர்த்தார். தங்களுக்கு அப்பழத்தை வழங்காமல் தானே உண்டதைக் கண்ட சீடர்கள் வியப்படைந்தனர்.

திராட்சைப் பழம் வழங்கிய ஏழைக் கைம்பெண்ணுக்கு நன்றி கூறினார் ஞானி. பின்னர் வெளியே வந்து நடக்கத் தொடங்கினார். சீடர்கள் அவரோடு நடந்தனர். சீடர்கள் முகத்தில் மாற்றம் ஏற்பட்டிருந்தது.

இதுவரை எல்லா பொருட்களையும், உணவையும் பகிர்ந்து கொண்ட குரு திராட்சைப் பழங்களை மட்டும் தன்னந்தனியாய்த் தானே உண்டது ஏன்?' எல்லாருடைய உள்ளத்திலும் இக் கேள்வி எழுந்து நின்றது.

சீடர் ஒருவர் வாய் திறந்து இக் கேள்வியைக் கேட்டே விட்டார். நீங்கள் ஏன் தனியாகச் சாப்பிட்டீர்கள்? எங்களுக்கு ஒரு பழங் கூட தரவில்லையே ஏன்?"

அந்த திராட்சைப் பழம் மிகவும் புளிப்பாய் இருந்தது. எனவே, நான் ஒருவனாக அவற்றைத் தின்றேன், என்றார் குரு. உங்களுடைய சுகத்திலும் துக்கத்திலும் நாங்கள் பங்கு கொண்டிருக்கிறோம்.

அப்படியிருக்க, சுவையற்றதை நீங்கள் தனியாக உண்ண வேண்டும்,சுவை மிகுந்ததை மட்டும் எங்களோடு பகிர்ந்துண்ண வேண்டுமா? இது நீதியாகுமா?

என்னுடைய சுகத்திலும் துக்கத்திலும் நீங்கள் பங்கு கொள்ள விரும்புவது உண்மையாக இருக்கலாம்.

ஆனால், இதில் ஓர் ஏழைக் கைம்பெண் இடையே இருக்கிறாள். அவள் தந்த திராட்சைப் பழங்களை உங்களுடன் பகிர்ந்து கொண்டால், "இந்தப் பழம் புளிக்கிறது' என்று நீங்கள் சாப்பிடும் போதே சொல்லி விமர்சனம் செய்து அந்தப் பெண்ணின் மனதைப் புண்படுத்திவிடுவீர்கள்.

அவளது மனது படாத பாடு பட்டு நொந்து போய்விடும். அதனால் தான் திராட்சைப் பழங்களை உங்களுக்குத்தரவில்லை," என்று சொன்னார் முனிவர். எவருடைய மனதையும் புண்படுத்தக் கூடாது என்ற கருத்தில் தங்கள் குரு எத்தனை உண்மையாக இருக்கிறார் என்பதை அறிந்து மகிழ்ந்தனர் சீடர்கள்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 911

Search for people places and things | Nagendram | Home

### மனோஜ்




### கோகுலன் கோகுல்

காதலித்துப் பார்
விண்ணில் மிதப்பாய்
காற்றில் பறப்பாய்
நீரில் நடப்பாய்
புரியலையா???
.....
செத்துருவடா பக்கி

### முத்துச்சாமி கஜரூபன்

"நல்லதையே தனியாக
செய்பவன்
தண்டிக்கப்படுகிறான்...

தவறையே கூட்டமாக
செய்பவர்கள்
தப்பித்துக்கொள்கிறார்கள்"

### நிம்மா

எதிரியை ஒழிக்க முதலில்
அவர்களை நமது
நண்பர்களாக்குங்கள்...




நம்ம கூட சேந்த பிறகு அவன்
உருப்படவா போறான்...😁😁😁

### மகேஸ்வரநாதன் கிரிஷன்

யாரையும் நம்பி யாரும்
இல்லை.
இத
தெறிஞ்சுக்கிறதுக்குள்ள
பாதி வாழ்க்கை
முடிஞ்சுடுது.

நமக்குன்னு யாரும்
இல்லை. இது
புரியும் போது நம்ப
வாழ்க்கை முடிஞ்சுடுது.

### உத்தமன்

தூங்குவது போல் நடிக்கும்
குழந்தையிடம் பிடித்த
விசயமே..



தூங்கிட்டியானு கேட்டால்
ஆமாம் என்று பதில்
சொல்லும்..❤❤❤☺☺☺


நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 61

## பாரிசவாதம் ஓர் அறிமுகம்




பாரிசவாதம் எனப்படுவது மூளைக்கு குருதி வழங்கும் குருதிக்கலன்களில் ஏற்படும் அடைப்பு அல்லது வெடிப்பு காரணமாக சடுதியாக ஏற்படும் பாதிப்பு ஆகும்.

இதன் போது மூளைக் கலங்களுக்கான ஒட்சிசன் மற்றும் போசணைக் கூறுகளின் விநியோகம் தடைப்படுகின்றது. இதனால் மூளைக்கலங்கள் இறக்கின்றன. மூளைக் கலங்கள் புத்துயிர்ப்படைய முடியாதவை. எனவே அவற்றின் தொழிற்பாடுகள் இழக்கப் படுகின்றன. இறந்த கலங்களின் தொழிற்பாடு களை வேறு மூளைக்கலங்கள் பொறுப் பெடுக்கின்றன.

வயது அதிகரித்தல், ஆரோக்கியமற்ற உணவுப்பழக்கம் ஆகியவை எமது மக் களிடையேயான பாரிசவாதத்திற்கு வழி வகுக்கின்றன. தற்போது சிலருக்கு இளவயது களிலும் இந்நோயானது ஏற்படுகின்றது.

அனைவரும் பாரிசவாதத்தின் அறிகுறி களை தெரிந்து வைத்திருத்தல் மிக முக்கியமானது. ஏனெனில், அறிகுறிகள் ஏற்பட்ட கணத்தில் இருந்து தாமதிக்கப்படு கின்ற ஒவ்வொரு நிமிடமும் மில்லியன் கணக்கான மூளைக்கலங்கள் இறக்கின் றன. அத்தோடு அவற்றினால் ஆற்றப்பட்ட தொழிற்பாடுகள் இழக்கப்படுகின்றன.

### அறிகுறிகள்

பாரிசவாதத்தின் அறிகுறிகள் திடீரென்று ஏற்படுகின்றது. அவையாவன.

1. ஒரே பக்கத்து முகம், கை காலில் பல வீனமோ விறைப்புத்தன்மையோ ஏற்படல்.

2. மனக்குழப்பம் தடங்கலான பேச்சு அல்லது விளங்கிக் கொள்வதில் உள்ள பிரச்சினை

3. கண்பார்வை முற்றாகவோ பகுதி யாகவோ பாதிப்படைதல்

4. கடுமையான தலையிடி FAST எனும் சொல்லின் மூலம் இலகுவாக நினை வில் வைத்திருக்கலாம்.

**F-Face drooping** - வாய் ஒரு பக்கம் இழுத்தல்

**A-Arm weakness** - கை சோர்ந்து போதல்

**S-Speech difficulty** - பேசுவதில் தடங் கல், கடினமான நிலை ஏற்படல்

**T-Time to call for help**- ஒருவரிடத்தில் மேற்கூறப்பட்ட அறிகுறிகள் காணப்படுமா யின் அவரை வைத்தியசாலைக்கு அழைத்து செல்ல வேண்டும்.

### குருதிக்குழாய் அடைப்பினால் ஏற்படும் பாரிசவாதம்

பாரிசவாதங்களில் பொதுவான வகை இதுவாகும். குருதியை மூளைக்கு கொண்டு செல்லும் குருதிக்குழாய்கள் அடைபடுவத னால் இது ஏற்படுகிறது.

குருதிக்குழாய்களில் அடைப்பு பின்வரும் காரணங்களினால் ஏற்படுகிறது.

1. கொழுப்புப்படிவு - குருதிக்குழாய்களின் உட்சுவரில் கொழுப்புப்படிவு ஏற்பட்டு ஒரு தழும்பை உருவாக்குகிறது இது Plaquds எனப்படும். இது குருதிக்குழாயை தடிப்ப டையச் செய்வதுடன் குருதிக்குழாயின் உள்விட்டத்தை குறைத்து விரைவாக குரு திக்குழாய் அடைபடுவதற்கு காரணமாகி றது. இந்த கொழுப்பு படிவுகள் மூளையில் உள்ள குருதிக்குழாய்கள் அல்லது வேறு எங்காவது உள்ள பெரிய குருதிக்குழாய் களில் உருவாக முடியும் அல்லது இந்த கொழுப்பு படிவில் ஒரு பகுதி உடைந்து சென்று மூளைக்கு செல்லும் குருதிக்கலனை அடைப் பதன் மூலம் பாரிசவாதம் ஏற்படுகிறது.

2. சிறிய குருதிக்கலன்களில் ஏற்படும் பிரச்சினை **(Small Vessel Disease)** - மூளையில் உள்ள சிறிய குருதிக்கலன்கள் அடைக்கப்படுகின்றன. இதனால் படிவுகள் குருதிக்கலன்களில் தேக்கமடைந்து தடிப் படைகின்றன. பின்னர் நாளடைவில் குருதிக் கலன்கள் அடைபடுகின்றன.

3. இதய நோய்கள் -இதயத்தசைத் தொழிற் பாடு பாதிக்கப்படுவதனாலும் ஒழுங்கற்ற இதயத்துடிப்பினாலும் இரத்தக்கட்டிகள் இதயத்தில் உருவாகின்றன. இதயத்தில் குருதி உறைந்து இரத்தக்கட்டிகள் உருவாகி அதில் ஒரு பகுதி இடம்மாறி குருதிக்குழாய் களூடாக சென்று மூளையில் உள்ள குருதிக் குழாய்களை அடைக்கிறது.

4. இரத்த நாடிகளின் சுவரில் ஏற்படும் கிழிவு - மூளைக்கு குருதியை கொண்டு செல் லும் குருதிக்கலன் சுவரில் உள்ள படை களில் சில வேளைகளில் கிழிவு ஏற்பட்டு குருதி உறைகட்டிகள் (இரத்தக்கட்டிகள்) உரு வாகும். இது விபத்துக்களின் போது ஏற்படலாம்.

### குருதிக்கலன்கள் அடைப்பினால் ஏற் படும் பாரிசவாத நோயை பின்வரு வனவற்றினால் நிர்ணயிக்க முடியும். கண்டுபிடிக்க முடியும்.

- வெளிக்காட்டப்படும் அறிகுறிகள்

மூளை கதிர் படம் (CT scan ) இது மூளை யில் இரத்தக்கசிவு இல்லை என்பதை உறுதி செய்து சிகிச்சையை ஆரம்பிப்பதற்கு உதவும்.

குருதிக்கலன் அடைப்பினால் ஏற்படும் பாரிசவாதத்துக்கான மருத்துவ சிகிச்சை யானது நோயாளி எவ்வளவு நேரத்தில் வைத்தியசாலைக்கு கொண்டு வரப்படுகிறார் என்பதில் தங்கியுள்ளது.

1. இரத்தக்கட்டிகளை கரைத்தல் (Thrombolysis)

பெரிய வைத்தியசாலைகள் குருதிக்கலன் அடைப்பினால் ஏற்படும் பாரிசவாதத்திற்கு சிகிச்சை அளிப்பதற்கு இரத்தக்கட்டிகளை கரைக்கும் ஒரு விசேட மருந்து வசதியை கொண்டுள்ளன. Alteplase / rt-PA எனப்படும் இம்மருந்தை கொடுக்கும் சிகிச்சை முறையே Thrombolysis எனப்படும்.

- இம்மருந்தானது முதல்பாரிச வாத அறி குறி தென்பட்டு நான்கரை மணித்தியாலங் களுக்குள் கொடுக்கப்பட வேண்டும். எவ்வளவு விரைவாக கொடுக்கிறோமோ அவ்வளவு சிறந்தது. நேரம் செல்லச் செல்ல அந்த மருந் தின் பயன்படும் தன்மை குறைவடைந்து செல் கிறது. ஆதலால் பாரிசவாத நோயாளியை இயலுமானவரை விரைவாக வைத்திய சாலைக்கு கொண்டு வருதல் வேண்டும்.

குருதிக்கலன் அடைப்பினால் ஏற்படும் பாரி சவாத நோயாளிகள் அனைவரும் Throm bolysis சிகிச்சைக்கு பொருத்தமானவர்கள் அல்ல.

- இம்மருந்தானது பின்வரும் காரணங் களினால் ஒருவருக்கு கொடுக்க முடியாமல் போகலாம்.

a) மூளையில் இரத்தக் கசிவு காணப்பட்டால்
b) அறிகுறி ஆரம்பித்த நேரம் தெரியாது இருந்தால்
c) சரியான நேரத்தில் வைத்திய சாலைக்கு வராது விட்டால்
d) ஏதாவது குருதி உறையா நோய்கள் இருந்தால்
e) அண்மையில் சிறிது காலத்திற்கு முன் பாரிய சத்திரசிகிச்சைக்கு உட்பட்டி ருந்தால்
f) மூன்று மாதங்களுக்குள் இன்னொரு பாரிசவாதம் அல்லது தலை காயம் ஏற்பட்டிருந்தால்
g) கட்டியை கரைக்கும் விசேட மருந்து டன் தாக்கத்திலீடுபடும் வேறு மருந்து களை நோயாளி எடுத்துக் கொண்டி ருந்தால்

- இந்த விசேட மருந்தினை பெற்றுக் கொள்ளும் 100 நோயாளிகளில் 7 நோயாளி களுக்கு மூளையில் இரத்தக்கசிவு ஏற்படும் ஆபத்து உள்ளது.

2. ஒரு பாரிசவாத நோயாளி மேற் குறிப்பிட்ட விசேட மருந்தை கொடுப்பதற்கு பொருத்தமற்றவராயின் வேறு மருந்துகள் தொடங்கப்படும். அத்துடன் அவரது மருத் துவ நிலைக்கு ஏற்றவாறு மற்றைய மருந்து களையும் கொடுக்க வேண்டும்.

3. மருத்துவ சிகிச்சைக்கு மேலதிக மாக பேச்சு மற்றும் உணவு விழுங்குதல் தொடர்பான பிரச்சினைகளை மதிப்பீடு செய்ய வேண்டும். உணவு விழுங்குவதில் பிரச்சினை காணப்பட்டல் மூக்கினூடாக குழாய் செலுத்தி அல்லது வயிற்றில் குழாய் பொருத்தி உணவு ஊட்டப்பட வேண்டும்.

4. சில நோயாளிகளில் மூளையில் பெரிய பகுதி குருதிக்கலன் அடைப்பினால் பாதிக்கப்படுவதனால் மூளை வீக்கமடை கிறது. இவர்கள் **Craniectomy** எனப் படும் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்படுவார் கள். இங்கு மண்டையோட்டில் ஒரு பகுதி அகற்றப்பட்டு மூளை மண்டையோட்டினுள் அழுத்தப்படுவதை தவிர்ப்பதன் மூலம் மூளை மேலும் பாதிக்கப்படுவது தடுக்கிறது.

### பாரிசவாதத்திற்கு பின்னரான நோயாளியின் பராமரிப்பு

1. 24 மணித்தியாலங்கள் மிகக்க வனமாக கண்காணிக்கப்பட வேண் டும்.
2. நோயாளி சாப்பிடுவதற்கு, குடிப் பதற்கு அனுமதிக்க முன்னர் அவரது பேச்சு மற்றும் விழுங்கும் திறன் மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.
3. பாரிசவாத நோயாளியின் பராமரிப்பு குழுவில் உள்ள அங்கத்தவர்கள் மீண்டும் மீண்டும் நோயாளியை மதிப்பீடு செய்ய வேண்டும்.
4. பாரிசவாத நோயினால் ஏற்பட்ட பாதிப்பின் பாரதூரத்தன்மையை அடிப்படையாக கொண்டு நோயாளி நகர்வதற்கான முடிவு எடுக்கப்பட வேண்டும்.
5. நோய்க்கு பின்னர் ஏற்படும் சிக்கல் நிலைமைகளை தடுப்பதற்கு நோயாளியின் உடல் நிலையை சரியாக பேணுதல் முக்கியமானது.

### பாரிசவாதத்தின் விளைவுகள்

- உடலின் ஒரு பகுதி அல்லது உடலின் ஒரு அரைப்பாகம் செயலிழத்தல் அல்லது பலவீனமடைதல்.
- தொடர்பாடல், பேச்சு மற்றும் மொழிப் பிரச்சினைகள்.
- கற்றல், ஞாபக சக்தி மற்றும் சிந் தனையை ஒருமுகப்படுத்தலில் ஏற்படும் பிரச்சினைகள்.
- பார்வைப்பிரச்சினை.
- உடல் சமநிலை பேணுதலில் பிரச்சினை.
- உணவு விழுங்குதலில் பிரச்சினை
- சிறுநீர் கழித்தல், மலம் கழித்தல் என் பவற்றை கட்டுப்படுத்துவதில் பிரச் சினைகள்.
- சோர்வுத்தன்மை.
- உணர்வு சம்பந்தமான பிரச்சினை கள்.

பாரிசவாதத்தினால் ஏற்படும் விளைவு கள் மூளையில் எற்படும் பாரிசவாத நோயின் பாதிப்பின் பாரதூரத்தன்மையை அடிப்படையாகக் கொண்டு மாறுபடும். பாரிசவாத நோயாளிகளில் சிலர் சிறு விளைவுகளையும் சிலர் கடுமையான நீண்ட நாள் விளைவுகளையும் கொண்டிருக்கலாம்.

வைத்திய கலாநிதி அஜினி அரசலிங்கம்,
வைத்தியர் ஜெயராசா சஞ்ஜெயன்

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் 0768363858 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.